IslamHouse.com

مركز أصول
Osoul Center
www.osoulcenter.com

# அல்குர்ஆன் பைபிள் பார்வையில் பெண்ணுரிமை


ஆக்கம்

எம். எஸ். எம். இம்தியாஸ் யூஸுப் (ஸலபி)



வெளியீடு

ஜம்இய்யது அன்ஸாரிஸ் ஸுன்னதில்

முஹம்மதிய்யா

பரகஹதெனிய – வேஉட


தமிழ்
Tamil
تاميلي

# حقوق المرأة
# في نظر القرآن الكريم والإنجيل

تأليف
محمد امتياز يوسف

الناشر
جمعية أنصار السنة المحمدية سريلانكا

Tamil
தமிழ்
تاميلي

مركز أصول
Osoul Center
www.osoulcenter.com

உஸூல் நிறுவனம்

இந்நூலின் மூலப்பிரதி உஸூல் நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்டதாகும். இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்துப் படங்களினதும் உரிமை இந்நிறுவனத்தையே சாரும். இதில் எவ்வித மாற்றங்களும் செய்யாமலும், வெளியீட்டளரின் பெயரைக் (உஸூல் நிறுவனம்) குறிப்படும் நிபந்தனையுடனும் இதனை அச்சிட்டு வெளியிட எமது நிறுவனம் அனைத்து முஸ்லிம்களுக்கும் அனுமதியளிக்கின்றது. அச்சிடும் போது இந்நிறுவனத்தின் அச்சுத் தரங்களைக் கடைபிடிக்குமாறும் நிறுவனம் வேண்டிக் கொள்கின்றது.

532 442 504 +966
4900 445 11 +966
0126 497 11 +966
P.O.BOX 29465 Riyadh 11457
osoul@rabwah.com
www.osoulcenter.com

بسم الله الرحمن الرحيم

அளவற்ற அருளாளனும் நிகரற்ற
அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்...

# உள்ளடக்கம்

| | |
|---|---|
| முகவுரை | 09 |
| பெண்ணாகப் பிறப்பது பாவம் | 15 |
| தீண்டத்தகாதவள் | 27 |
| கன்னித் தன்மையை நிரூபிக்க அக்கினிப் பரீட்சை | 37 |
| விவாகரத்து உரிமையற்றவள் | 59 |
| மறுமணத்துக்குத் தகுதியற்றவள் | 77 |
| சொத்துரிமை தடுக்கப்பட்டவள் | 87 |
| மார்க்கம் படிக்க தகுதியற்றவள் | 103 |
| அடிமைச் சின்னம் அவள் | 109 |



# முகவுரை

எல்லாம் வல்ல அல்லாஹ்வை போற்றி புகழ்ந்து அவனது இறுதித் தூதர் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரது வழிமுறைகளை பின்பற்றி வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கின்ற அத்தனை நல்லடியார்கள் மீதும் அல்லாஹ்வின் அருளும் அன்பும் மன்னிப்பும் என்றென்றும் உண்டாவதாக!

20ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஐரோப்பாவில் பெண்களின் உரிமைகள் பற்றி அதிகம் பேசப்பட்டு விவாதிக்கப்பட்டு, பெண்கள் மனிதப்பிறவிகளாக கணிக்கப்பட வேண்டும் என்ற கோஷம் எழுப்பப்பட்டது. பெண் ஆணுக்கு நிகரானவள். சமஉரிமை படைத்தவள், உரிமைகள் வழங்கப்பட வேண்டியவள் என்ற வாதமும் முன்வைக்கப்பட்டது.

இப்போராட்டம் ‘பெண்களின் விடுதலைப் போராட்டமாக’’ சித்தரிக்கப்பட்டதனால் ஆணாதிக்கம், சமயக் கோட்பாடுகள் கட்டுப்பாடுகள் மற்றும் சமூக சம்பிரதாயங்களை தகர்த்தெறிந்து கொண்டு பெண்கள் வீதியில் இறங்கினார்கள், இறக்கப்பட்டார்கள்.

இதன் மூலம் ஆண்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளையும் அனுபவித்து சமபங்கு வகித்தார்கள். அடுப்பங்கரையிலிருந்து ஆட்சி பீடம்வரை சென்ற அவர்கள் விண்ணில் உலாவந்தார்கள். ஒவ்வொரு துறையிலும் முத்திரை பதித்தார்கள்.

அரசியல், சமூக, பொருளாதார வளர்ச்சிக்குப் பெண்களின் பங்களிப்பும் அவசியம்; ஆண்களால் மட்டும் வளர்ச்சியைக் காணமுடியாது. ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றே ஆண் பெண் பங்களிப்பு சமூகத்திற்கு அவசியம் என்பதை வலியுறுத்தினார்கள்.

போராட்ட முழக்கம் எழுந்தது. சரிநிகர் சமத்துவ பயணம் தொடர்ந்தது. பிரபுத்துவ ஆட்சியில் அடக்கிவைக்கப்பட்டு அனுபவிக்கப்பட்டவள் முதலாலித்துவ பிடியில் அனுபவிக்கும் பண்டமாக, ஆபாச சின்னமாக (Sex Symble), அவிழ்த்து போட்டு நடமாடும் ராணியாக, விளம்பர பலகையாக ஆக்கப்பட்டாள். ஆண்களின் நுகர்வோர் சந்தையில்

விளையாட்டு பொம்மையாக வடிவமைக்கப்பட்டாள். இறுதியில் ஆண், பெண் இருபாலாரின் தனிப்பட்ட வாழ்வும் குடும்ப வாழ்வும் சமூக வாழ்வும் வீழ்ந்தது. சூழல் மாற்றமடையத் தொடங்கியது. நிம்மதி தொலைந்தது. விரக்தி தொற்றிக் கொண்டது. சுகப்படுத்த முடியாத நோய் பரவ ஆரம்பித்தது. வரையறையற்ற வாழ்க்கை முறையினாலும்;, தெளிவற்ற உரிமைப் போராட்டத்தினாலும் உருவான விபரீதங்களைக் கண்டு உலகம் அஞ்சுகிறது. நாகரிகத்தின் பெயரால் நாதியற்றுப் போயிருக்கும் வாழ்வைச் சீர்படுத்துகின்ற சத்திர சிகிச்சையில் ஈடு பட்டுக் கொண்டிருக்கின்றது இன்றைய உலகம்.

'சமபங்கு, சமஅந்தஸ்து, சமஉரிமை'' என்பவை சரிவரப் புரிந்து கொள்ளப்படாததனாலும் 'சமத்துவ பணிகள்'' சரியாக வழங்கப் படாமையினாலும் பொறுப்புக்கள் ஒழுங்குப்படுத்தப் படாமையினாலும் மனித வாழ்வு புரையோடிய புற்று நோயாக தோற்றம் பெற்றுள்ளது. பெற்றோர், முதியோர் இல்லங்களிலும் பிள்ளைகள் பாதுகாப்பு மையங்களிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். பாசத்திற்காகவும் நேசத்திற்காகவும் குழந்தைகள் ஏங்கித் தவிக்கின்றன. அன்பையும் அரவனைப்பையும் வேண்டி பெற்றோர் கண்ணீர் வடிக்கின்றனர். பெற்றோரிடமிருந்து பிரிந்து வாழும் உரிமை கேட்டு பிள்ளைகள் வழக்குத் தொடுக்கின்றனர். கணவன் மனைவியின் மீதும் மனைவி கணவன் மீதும் சந்தேகம் கொண்டு பார்கின்றனர். பொதுவாக மேற்கத்திய உலகில் மூன்றுறுகளை நம்பமாட்டார்கள். *1. Weather* காலநிலை *2. Women* பெண் *3. Work* தொழில். இந்த மூன்றும் எந்த நேரத்திலும் மாறிபோயிடலாம் என்பதே அவர்களது வாழ்வாகும்.

இந்நிலையில் முஸ்லிம் பெண்களின் நிலை பற்றியும் அவர்களது உரிமைகள் பற்றியும் உண்மைக்குப் புறம்பான செய்திகளையும், விவரணங்களையும் இஸ்லாத்திற்கு முரணாக ஊடகங்கள் வெளியிடத் தொடங்கின.

சர்வதேசமட்டத்தில் ஆதிக்கம் செலுத்தும் பலம் வாய்ந்த ஊடகங்;களான *BBC,CNN* போன்றவை யூத கிறிஸ்தவர்களின் கைவசம் உள்ளதனால் முஸ்லிம்கள் பற்றியும் இஸ்லாம் பற்றியும் அவ்வப்போது தவறான செய்திகளைக் கொடுத்து இஸ்லாம் பற்றி அறியாத அப்பாவிகளை ஏமாற்றி வருகின்றன.

'இஸ்லாம் பெண்களை கொடுமைப்படுத்துகின்றது, பர்தா என்னும் ஆடையை அணிவித்து ஆயுட்காலக் கைதிகள் போல்

வீட்டினுல் முடக்கிவைத்துள்ளது, கல்வியறிவு உட்பட அடிப்படை உரிமைகளைக்கூட வழங்குவதில்லை, முஸ்லிம் சமூகத்தில் ஆணாதிக்கம் மேலோங்கிக் காணப்படுவதால் பெண்கள் அடிமைகள் போல் அடங்கி வாழ்கிறார்கள்'' போன்ற செய்திகளை இந்த ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மேற்கத்தைய ஊடகங்களின் ஊதுகுழல்களாக செயற்;படும் ஏனைய ஊடகங்களும் அவைகளை அப்படியே வாந்தியெடுத்து விடுகின்றன.

நமது இலங்கை நாட்டின் ஊடகங்கள் அண்மைக்காலமாக இவ்வாறான செய்திகளைக் கொட்டுவதில் தீவிரம் காட்டி வருவதையும் கண்டு வருகிறோம்.

'சகல சமூகங்களிலுமுள்ள பெண்கள் சுதந்திரமாகவும் முன்னேற்றமாகவும் செயற்பட்டு வரும்போது முஸ்லிம் சமூகம் மட்டும் பெண்களைத் தன்னிச்சையாக செயற்படவிடாமல் மூலையில் முடக்கி வைத்துள்ளது'' போன்ற மாயையை இந்த மீடியாக்கள் மீட்டுகின்றன.

மிகைப்படுத்தப்பட்ட செய்திகளை மீடியாக்கள் விவரணப் படுத்தும் போது உலக மக்கள் இஸ்லாத்தைப் பற்றி தப்பும் தவறுமாகவே எண்ணுகிறார்கள்; பேசுகிறார்கள். பெண்;களுக்கு உரிமைகளே கொடுக்காத மார்க்கம் என்றால் அது இஸ்லாம் தான் என்று கருதக்கூடிய நிலைக்கு இந்த மீடியாக்கள் இட்டுச் செல்கின்றன.

தாங்கள் சார்ந்துள்ள மார்க்கங்களில், பின்பற்றக்கூடிய கொள்கைகளில் பெண்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் உரிமைகள் எவை? மறுக்கப் பட்டிருக்கும் உரிமைகள் எவை? பெண்களுக்குரிய மரியாதை, கண்ணியம், கௌரவம் எவை? அவை எவ்வாறு போற்றப்படுகின்றன என்பதைச் சிந்தித்து ஆராய்ந்து குறைநிறைகளைக் கண்டு நிவர்த்தி செய்வதற்குப் பதிலாக முஸ்லிம் பெண்களைப் பார்த்து விமர்சன அம்புகளை ஏவிவிடுகிறார்கள்.

இஸ்லாத்தையும் அதன் அடிப்படைக் கோட்பாடுகளையும் படித்து, அறிந்து, பெண்களின் நிலவரம்பற்றியும் அவர்களது உரிமைகள் பற்றியும் விமர்சனம் செய்திருந்தால் வரவேற்றிருக்கலாம். மாற்றமாக கருத்துக் குருடர்களாக இருந்து கொண்டு புத்தி ஜீவிகள் போல் பேசுவதுதான் அசிங்;கமாகத் தெரிகிறது.

மீடியாக்களின் பொறுப்பற்ற தன்மையும் கருத்துக் குருடர்களின் நியாயமற்ற போக்கும் முஸ்லிம் பெண்கள் தவறாக சித்தரிக்கப் படுவதற்குக் காரணமாக அமைந்துள்ளன.

பொருத்தமான சில கட்டுப்பாடுகளுடன் முஸ்லிம் பெண்கள் வளர்க்கப்படுகிறார்கள் என்பது உண்மை. அதற்காக அவர்களது வாழ்வுரிமை மற்றும் சுதந்திரம் பறிக்கப்படுகிறது என்பது அபத்தம்.

இஸ்லாத்தில் சில சட்டங்கள் ஆண் பெண்; இருபாலாரையும் கட்டுப்படுத்துகிறது. இன்னும் சில சட்டங்கள் ஆண்களுக்கு முன்னுரிமை கொடுக்கிறது. வேறுசில சட்டங்களோ பெண்களின் உரிமைகளை உறுதிசெய்து ஆண்களை கட்டுப்படுத்துகிறது.

பெண்களின் கற்பு மானம், மரியாதை, கண்ணியம் ஆகியவற்றை இஸ்லாமிய சட்டங்கள் கண்டிப்பாக காப்பாற்றுகின்றன; உத்தரவாதப் படுத்துகின்றன. கற்பு இருபாலாருக்கும் பொதுவானது என்று கூறி அதனை கௌரவப்படுத்தி மதிக்க வேண்டும். மலினப் படுத்தக்;கூடாது என கட்டளையிடுகிறது. பெண் என்ற அந்தஸ்தையும் தாய் என்ற கௌரவத்தையும் கொடுத்து குடும்பத்தின் அஸ்திவாரத்தை பலப்படுத்தும் சமபங்காளியாக உயர்த்திக் காட்டுகிறது.

பெண்ணை பாதுகாப்பதும் பராமரிப்பதும் ஆணின் மீதுள்ள கடமை என்று கூறி பொருளாதாரச் சுமைகளை ஆணின் மீது சுமத்துகிறது. இஸ்லாத்திற்கும் மாற்றுமதக் கொள்கைகளுக்குமிடையிலுள்ள அடிப்படை வேறுபாடுகள் இவைதான்.

## பெண்:

ஆன்மா இல்லாதவள்,

பிறப்பால் இழிவானவள்,

ஆண்களை வஞ்சிக்கும் குணமுடையவள்,

விவாகரத்து உரிமையற்றவள்,

மறுமணத்திற்கு தகுதியற்றவள்,

வாரிசு சொத்து தடுக்கப்பட்டவள்,

வேதம் படிக்க அருகதையற்றவள்,

மாதத்தீட்டால், பிரசவத்தீட்டால் அசிங்கமானவள்,

ஆணின் அதிகாரங்களுக்குள் அடங்கப்பட்டவள்.

இந்த உலகின் முதன்மை மதம் என்று சொல்லப்படக் கூடிய யூத கிறிஸ்தவ மதத்தின் வேதநூலான பைபிள் பெண்ணை இப்படித்தான்

சித்தரிக்கிறது. ஆண்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள உரிமைகளின் உதிரிகள்தான் பெண்களுக்கு கொடுக்கப் பட்டுள்ளன.

இந்த உண்மையை எடுத்துக்காட்டுவதே இந்நூலின் முக்கிய நோக்கமாகும். பெண்களின் உரிமைகளைப் பறித்து அடக்கியாளுகின்ற மதம் இஸ்லாமா? யூத கிறிஸ்தவமா? என்பதை வாசகர்கள் இதன் மூலம் புரிந்து கொள்ள முடியும்.

அதுமட்டுமல்லாமல் உலகையே ஆட்சி செய்து கொண்டிருக்கும் யூத கிறிஸ்தவர்களின் பிடியிலுள்ள மீடியாக்களும் ஏனைய மீடியாக்களும் முஸ்லிம் பெண்கள் சம்பந்தமாக விவரணப்படுத்த முன் அவர்கள் சார்ந்துள்ள மதங்களில் அவர்களுடைய பெண்கள் எப்படி மதிக்கப் படுகின்றனர் எவ்வாறான உரிமைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்பதை அறிந்து செயற்படமுடியும்.

ஏனைய மதங்களைச் சார்ந்த பெண்களும் தங்களுடைய உரிமைகளை இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே இந்நூலின் மற்றுமொரு நோக்கமாகும்.

யூத கிறிஸ்தவ மக்களுக்கு அல்லாஹ் தவ்றாத் மற்றும் இன்ஜீல் வேதங்களை கொடுத்துள்ளான். அவைகள் கொடுக்கப்பட்ட அசல் வடிவில் அவர்களிடம் இல்லை. தவ்றாத்தையும் இன்ஜீலையும் உள்ளடக்கியதாகவே பைபிள் உள்ளதாக கூறினாலும் பைபிளை பொறுத்தமட்டில் அது முழுமையான இறை வேதமாக - பாதுகாக்கப்பட்ட வேதமாக இல்லை அதில் கூட்டல் குறைவுகள், திரிபுகள், முரண்பாடுகள்;;, அசிங்கங்கள் மற்றும் அபத்தங்களும்; உள்ளன. இறைவார்த்தைகளுடன் மனித கையூட்டல்களும் கலந்துள்ளன. வேதத்திற்குரிய தரத்தில் பைபிள் இல்லை என்பதை இந்நூலின் ஆய்விலே கண்டு கொள்ள முடியும். இவர்கள் ஏற்படுத்திய முரண்பாடுகளையும் திரிவுகள் மற்றும் மறைவுகளை அல்குர்ஆன் முன்வைக்கிறது. இதனடிப்படையிலே ஒப்பீடு செய்யப்படுகிறது.

1998ம் ஆண்டு சவூதி அரேபியாவில் பிரசாரப்பணியில் ஈடுபட்ட வேளையில் கிறிஸ்தவ சகோதரர்களுடன் கலந்துரையாடவும் அல்குர்ஆன் பைபிள் தொடர்பான ஆய்விலும் ஈடுபடலானேன். அதன் வெளிபாடாகவே இத்தலைப்பில் எழுதவேண்டும் என ஆர்வம் கொண்டேன். குறிப்பிட்ட முக்கியத்துவமுள்ள சில தலைப்புகளையே தெரிவு செய்துள்ளேன் என்பதை கூறிக் கொள்கிறேன்.

உண்மை உதயம் எனும் சஞ்சிகையில் சுமார் இரண்டு வருடங்களாக எழுதி வந்த போது பலரும் புத்ததக வடிவில் இதனை வெளியிட வேண்டும் என கேட்டுக்கொண்டதற்கிணங்கவே இப்போது வெளியிட தீர்மானித்தேன். அல்ஹம்துலில்லாஹ்.

எனது நூலில்; நிறைகள் கண்டு திருப்தி காண்பது போல் குறைகள் காண்பின் தயவு செய்து சுட்டிக்காட்டுமாறு அன்புடன் வேண்டுகிறேன். இன்ஷா அல்லாஹ் அடுத்த பதிப்பில் திருத்திக் கொள்வேன்.

இந்நூலை வெளியிடுகின்ற *(JSM)* ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னதில் முஹம்மதிய்யாவிற்கும் மதிப்புரை வழங்கிய பொதுத் தலைவரும் எனது மரியாதைக்குரிய உஸ்தாதுமாகிய அஷ் ஷெய்க் முஹம்மத் அபூபக்கர் சித்தீக் (மதனி) அவர்களுக்கும் ஆலோசனைகள் வழங்கி திருத்தங்கள் செய்து தந்த பொதுச் செயலாளர் *A.L.* கலீலுர் ரஹ்மான் *(M.A)* அவர்களுக்கும் நண்பர் ஸைனுதீன் *S* பரீத் (அகத்தி முறிப்பான்) அவர்களுக்கும் *A.L.* அப்துஸ் ஸலாம் ஆசிரியருக்கும் உண்மை உதயம் ஆசிரியர் *S.H.M.* இஸ்மாயில் (ஸலபி) அவர்களுக்கும் நன்றியினை தெரி வித்துக் கொள்கிறேன்.

எல்லாவற்றுக்கும் மேலாக என்னை படைத்து பரிபாலிக்கின்ற வல்லரஹ்மானுக்கு முதலில் நன்றி கூறுவதோடு என்னை வளர்த்து ஆளாக்கிய மரியாதைக்குரிய தாய்க்கும் தந்தைக்கும் உளப்பூர்வமாக நன்றிகளை தெரிவிப்பதோடு அவர்களது மண்ணறைகளை சுவனப் பூங்காவாக ஆக்கிடுமாறும் மறுமை நாளில் நல்லோர்களுடன் சேர்த்தருளுமாறும் அல்லாஹ்விடம் பிரார்த்;திக்கிறேன். நிச்சயமாக அவனே பிரார்த்தனைகளை செவியேற்பவனும் பதிலளிப்பவனுமாக இருக்கிறான்.

*M.S.M.* இம்தியாஸ் யூசுப் (ஸலபி)

# பெண்ணாக பிறப்பது பாவம்

மக்களுக்கு நற்போதனை செய்து அவர்களது பண்பாடுகளை வளர்த்து அவர்களை நேர்வழியில் இட்டுச் செல்வதுதான் ஒரு மதத்தினுடைய இலட்சியமாகும்.

அம்மக்கள் எவ்வளவுதான் கெட்டவர்களாக பாவிகளாக இருந்தாலும் அவர்களையும் புனிதர்களாக்க வழிகாட்ட வேண்டுமே தவிர புண்படுத்தக் கூடியதாக, இழிவுபடுத்தக் கூடியதாக, மட்டம் தட்டக் கூடியதாக போதனைகள் இருக்கக்கூடாது.

துரதிஷ்டவசமாக இந்நிலையை பெண்கள் விடயத்தில் பைபிள் கையாளுகிறது. உலகில் முதன்மை வகிக்கக்கூடிய ஒரு மதத்தில் பெண்கள் இழிவுபடுத்தப் படுகிறார்களா என்று பலரும் ஆச்சரியப்படலாம்! இழிவான முறையில் பேசக்கூடிய போதனைகள் பைபிளிலும் இருக்கின்றனவா? என்றும் கேட்கலாம்!

பின்வரும் பைபிள் வசனங்களைப் படித்துப் பாருங்கள்.

‘சாவை விடக் கசப்பானதொன்றைக் கண்டேன், அதுதான் பெண்.

அவள் உனக்குக் காட்டும் அன்பு ஒரு கண்ணியைப்போல் அல்லது ஒரு வலையைப்போல் உன்னைச் சிக்கவைக்கும். உன்னைச் சுற்றிப்பிடிக்கும்.

அவளின் கைகள் சங்கிலியைப்போல் உன்னை இறுக்கும். கடவுளுக்கு உகந்தவனே அவளிடமிருந்து தப்புவான். பாவியோ அவளின் கையில் அகப்படுவான்.

ஆனால், ஒன்று தெரிந்தது. மனிதன் எனத் தக்கவன் ஆயிரத்தில் ஒருவனே என்று கண்டேன். பெண் எனத்தக்கவள் யாரையுமே நான் கண்டதில்லை.’’ (பிரசங்கி. 7:26-28)

பெண்ணை நம்பாதே; அவள் ஒரு மாயக்காரி. ஏமாற்றுக்காரி; உன்னை சிக்கவைக்கும் கண்ணியவள். பொறிவைக்கும் விஷமக்காரி. அவளிடத்தில் மாட்டிக்கொள்பவன் பாவி; தப்பி விடுபவன் கடவுளுக்கு உகந்தவன்;. பெண் என்ற மனிதப் பிறவியைக் காண்பது கடினம். ஆயிரம் பேரில் ‘ஒரு நல்ல பெண்’’ கிடைப்பதும் அரிது.

மரணத்தைவிட கசப்பானவள். அண்டிப்பழக அருகதையற்றவள். அவளை விட்டும் ஒதுங்கியிருப்பவனே கர்த்தருக்கு உகந்தவன் என்றெல்லாம் வர்ணனைகளை முன்வைத்து நற்போதனை செய்கிறது.

ஆகமொத்தத்தில் பெண்ணை ஒருமனித பிறவியாக கருதவில்லை. பெண்ணாகப் பிறப்பதே பாவம் என்ற சிந்தனையை ஊட்டுகிறது.

‘பெண்கள் அமைதியாக இருந்து மிகுந்த அமைதியோடு கற்றுக்கொள்ளட்டும். பெண்கள் கற்றுக்கொடுக்கவோ, ஆண்களைக் கட்டுப்படுத்தவோ நான் அனுமதிக்க மாட்டேன். அவர்கள் அமைதியாக இருக்கவேண்டும். ஏனென்றால், ஆதமே முதலில் உருவாக்கப்பட்டார். மேலும் ஆதம் ஏமாற்றப்படவில்லை. பெண்தான் ஏமாந்து கட்டளையை மீறினாள். *(1திமோத்தேயு 2:11)*

பெண்கள் ஆண்களுக்குக் கட்டுப்பட்டு செவிசாய்த்து நடக்கவேண்டும். அமைதியாக இருந்து வேதத்தைக் கற்றுக் கொள்ள வேண்டுமே தவிர மற்றவர்களுக்குக் கற்றுக்கொடுக்கக் கூடாது. காரணம் முதலில் ஆதாம் (ஆண்தான்) படைக்கப்பட்டார். அதன் பின்தான் பெண் (ஏவாள்) படைக்கப்பட்டாள். எனவே, பெண் இரண்டாம் பட்சம்தான். ஆணின் ஆதிக்கத்திற்குள் பெண் அடங்க வேண்டுமே தவிர பெண்ணின் ஆணைக்கு ஆண் அடங்கக் கூடாது.

ஆதாமும் ஏவாளும் ஒரு மரத்தை அணுகக் கூடாது என கர்த்தர் கட்டளையிட்ட போது அக்கட்டளையை மீறி ஆதாமை ஏமாற்றி வஞ்சித்தவள் ஏவாள். எனவே பாவத்திற்கு காரணமானவள் பெண்தான்; ஆகவே பெண் ஆணுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று வியாக்கியானம் சொல்கிறது பைபிள்.

ஏவாள் என்ற ஒரு பெண் செய்த தவறுக்காக உலகம் உள்ளவரை ஒட்டுமொத்த பெண் சமூகத்தையும் இழிவாக சித்தரித்து அதனை வேத நூலிலும் பதிவு செய்து பாராயணமும் செய்யப்படுகிறது. ஒவ்வொரு மனிதனும் தான் செய்த பாவங்களுக்குப் பொறுப்பாளியாக இருக்க வேண்டுமே தவிர மற்றவர்களை அதற்குப் பலியாக்கக்கூடாது. ஆதாமும் ஏவாளும் செய்த தவறுக்கு பெண் சமூகம் எப்படிப் பொறுப்பாக முடியும்?

ஆதாமும், ஏவாளும் செய்த குற்றம் என்ன? அதற்கு அவர்கள் பெற்ற தண்டனை என்ன? இதற்காக பெண் சமூகத்தை இழிவுபடுத்துவதன் நோக்கம் என்ன?

## பின்வருமாறு பைபிள் கூறுகிறது:

ஆண்டவராகிய கடவுள் மனிதனை (ஆதாமை) கூப்பிட்டு 'நீ எங்கே இருக்கிறாய்?'' என்று கேட்டார்.

'உம் குரல் ஒலியை நான் தோட்டத்தில் கேட்டேன். ஆனால், எனக்கு அச்சமாக இருந்தது. ஏனெனில், நான் ஆடையின்றி இருந்தேன். எனவே, நான் ஒளிந்து கொண்டேன் என்றான் மனிதன்.

நீ ஆடையின்றி இருக்கிறாய் என்று உனக்குச் சொன்னது யார்? நீ உண்ணக் கூடாது என்று நான் விலக்கிய மரத்திலிருந்து நீ உண்டாயோ? என்று கேட்டார்.

அப்பொழுது அவன் என்னுடன் இருக்கும்படி நீர் தந்த அந்தப் பெண், மரத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள். நானும் உண்டேன் என்றான்.

ஆண்டவராகிய கடவுள், நீ ஏன் இவ்வாறு செய்தாய்? என்று பெண்ணைக் கேட்க அதற்குப் பெண் 'பாம்பு'' என்னை ஏமாற்றியது. நானும் உண்டேன் என்றாள்.(ஆதியாகமம்:3:9-19)

கர்த்தரால் தடுக்கப்பட்ட ஒரு கனியை சாப்பிடுவதற்கு ஆதாம், ஏவாள் மற்றும் பாம்பு ஆகிய மூவரும் காரணமானவர்கள் என்று இவ்வசனங்கள் கூறுகின்றன. இதுவே மனிதன் செய்த முதல் பாவம் என கூறப்படுகிறது.

ஏவாளை ஏமாற்றி கனியை சாப்பிடச் செய்ய பாம்பு மேற்கொண்ட உரையாடலைப் பற்றி பைபிள் கூறும் போது-

'ஆண்டவராகிய கடவுள் உருவாக்கிய காட்டு விலங்குகளிலெல்லாம் பாம்பு மிகவும் சூழ்ச்சிமிக்கதாக இருந்தது. அது பெண்ணிடம், 'கடவுள் உங்களிடம் தோட்டத்திலுள்ள எல்லா மரங்களிலிருந்தும் உண்ணக்கூடாது என்றது உண்மையா?'' என்று கேட்டது.

'பெண், பாம்பிடம் தோட்டத்தில் இருக்கும் மரங்களின் கனிகளை நாங்கள் உண்ணலாம். ஆனால் தோட்டத்தின் நடுவில் உள்ள மரத்தின் கனியை மட்;டும் நீங்கள் உண்ணக்கூடாது; அதைத் தொடவும் கூடாது. மீறினால் நீங்கள் சாவீர்கள்; என்று கடவுள் சொன்னார்'' என்றாள்.

பாம்பு பெண்ணிடம், நீங்கள் சாகவேமாட்டீர்கள்; ஏனெனில் நீங்கள் அதிலிருந்து உண்ணும் நாளில் உங்கள் கண்கள் திறக்கப்படும். நீங்கள் கடவுளைப் போல் நன்மை தீமையை அறிவீர்கள் என்பது கடவுளுக்குத் தெரியும் என்றது. (ஆதியாககம்:3:1-5)

பைபிளின் போதனைப் பிரகாரம் ஏவாள் பாம்பின் அலங்காரமான வார்த்தைகளை நம்பினாள். அதில் மறைந்துள்ள சூழ்ச்சியை அவள்; அறியவில்லை. எனவே கனியை ஆதாமுக்கும் கொடுத்தாள். ஆதாம் மறுப்பேதும் தெரிவிக்காமல் சாப்பிட்டார்.

*'அந்த மரம் உண்பதற்குச் சுவையானதாகவும் கண்களுக்குக் களிப்பூட்டுவதாகவும் அறிவு பெறுவதற்கு விரும்பத்தக்கதாகவும் இருந்ததைக் கண்டு, பெண் அதன் பழத்தைப் பறித்து உண்டாள். அதைத் தன்னுடனிருந்த தன் கணவனுக்கும் கொடுத்தாள். அவனும் உண்டான்.|| (ஆதியாககம்:3:6)*

கர்த்தரின் கட்டளையை மீறி பாவம் புரிந்ததில் மூன்றுபேர் சமபங்காளிகளாக சம்பந்தப்பட்டிருக்க ஏவாளை மட்டும்; காரணம் காட்டி பெண்களை மட்டம் தட்டுவது சரிதானா? கனியைச் சாப்பிட ஏவாள் மறுப்புத் தெரிவித்த அளவு கூட ஆதாம் மறுப்பேதும் தெரிவிக்க வில்லையே.

ஏவாள் செய்த குற்றத்திற்கு கர்த்தர் எத்தண்டனையையும் வழங்காமல் விட்டதனால் அவளை இழிவான பெண் என்று கூறவேண்டி ஏற்பட்டதா என்றால் அதுவும் இல்லை. சம்பந்தப்பட்ட மூவருக்கும் கர்த்தரால் உடனே தண்டனையும் வழங்கப்படடுள்ளது என்பதை பின்வரும் பைபிள் வசனம் விளக்குகிறது.

*'ஆண்டவராகிய கடவுள், பாம்பிடம் நீ இவ்வாறு செய்ததால் கால்நடைகள், காட்டு விலங்குகள் அனைத்திலும் சபிக்கப் பட்டிருப்பாய். உன் வயிற்றினால் ஊர்ந்து உன் வாழ்நாள் எல்லாம் புழுதியை (மண்ணை) தின்பாய்.*

*உனக்கும் பெண்ணுக்கும் உன்வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும். நீ அதன் குதிகாலைக்; காயப்படுத்துவாய்'' என்றார்.*

*அவர்(கர்த்தர்) பெண்ணிடம் 'உன் மகப்பேற்றின் வேதனையை மிகுதியாக்குவேன். வேதனையில் நீ குழந்தைகளைப் பெறுவாய். ஆயினும் உன் கணவன் மேல் நீ வேட்கை கொள்வாய். அவனோ உன்னை ஆள்வான்'' என்றான்.*

*அவர் (கர்த்தர்), மனிதனிடம் (ஆதமிடம்) 'உன் மனைவியின் சொல்லைக் கேட்டு உண்ணக் கூடாது என்று நான் கட்டளையிட்டு விலக்கிய மரத்திலிருந்து நீ உண்டதால் உன் பொருட்டு நிலம் (பூமி) சபிக்கப்பட்டுள்ளது.*

*உன் வாழ்நாளெல்லாம் வருந்தி அதன் பயனை உழைத்து நீ உண்பாய். நீ மண்ணாய் இருக்கிறாய்; மண்ணுக்கே திரும்புவாய் என்றார். (ஆதியகாமம் 3:14-19)*

‘பிரசவத்தின் போது வேதனையை அதிகப்படுத்திக் கொடுத்தல்’’ என்பதுதான் ஏவாள் செய்த குற்றத்திற்கு அதிகப்பட்ச தண்டனை என்றும் கணவன் மீது அன்பு கொண்டாலும் அவன் தான் உன்னை ஆள்வான் என்றும் கூறுகிறார் கர்த்தர். ஆண்தான் அதிகாரமுடையவனாக இருப்பான் என்பது முடிவாகக் கூறப்பட்டுள்ளது.

பிரசவத்தின் போது பெண் மரணத்தின் விளிம்புக்கே செல்கிறாள். சில நேரம் மரணித்தும் விடுகிறாள். இவ்வளவு கடுமையான பயங்கரமான வேதனையைப் பெண்ணுக்குக் கொடுத்துவிட்டு அவளை இழிவுபடுத்துவது முறைதானா? சாவை விடக் கசப்பானவள் என்று வர்ணிப்பது முறைதானா? அவளை விஷமக்காரியாகச் சித்தரிப்பது சரிதானா?

‘புழுதியைத் தின்ன வேண்டும்’’ என்பதுதான் பாம்புக்கு கர்த்தர் வழங்கிய தண்டனை. எந்தப் பாம்பாவது புழுதியை அல்லது மண்ணை சாப்பிட்டதைப் பார்த்திருக்கிறீர்களா?

இந்நிகழ்வின் மூலம் பாம்புக்கும் பெண்களுக்குமிடையே நிரந்தர யுத்தம் உண்டாக்கப்பட்டுள்ளது. ஏவாளின் சந்ததியை காணும் போதெல்லாம் பாம்பு காலைத் தீண்டவேண்டும். அவர்கள் பாம்பின் தலையை நசுக்கவேண்டும். எல்லா பாம்பும் காலை மட்டும் தான் தீண்டுகிறதா?

‘கனியை சாப்பிட்டால் சாவீர்கள்’’ என்று முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தும் அதனை சாப்பிட்ட பின்பு ஆதாமும் ஏவாளும்; சாகவில்லையே. கர்த்தரின் கட்டளை அல்லது தீர்க்க தரிசனம் செயலற்றுப் போனது ஏன்? கொஞ்சம் சிந்தியுங்கள்.

ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தது ஏன்? உண்மையில், ஆதாமும் ஏவாளும் தாங்கள் செய்யப் போகின்ற (பழம் சாப்பிடுகின்ற) காரியம் நல்லதா? கெட்டதா? நன்மையா? தீமையா? என்பதைப் பிரித்து அறியக்கூடிய நிலையில் இருக்கவில்லை.

கர்த்தரால் தடுக்கப்பட்ட கனியை சாப்பிட்ட போதுதான் நன்மை தீமை பற்றிய பகுத்தறிவைப் பெற்றுக் கொள்கிறார்கள். ஒரு தவறைத் தெரிந்து செய்தால் அதற்குப் பெயர் பாவம். பாவம் என்று தெரியாமல் செய்தால்

அதற்குப் பெயர் தவறு. ஆதாமும் ஏவாளும் செய்தது பாவமல்ல; தவறு. பகுத்தறிவற்ற நிலையிலிருந்து தவறு செய்த இருவருக்கும் தண்டனை வழங்கி விட்டு பெண் இனத்தை மோசமாகச் சித்தரிப்பது எந்த வகையில் நியாயம்?

பின்வரும் பைபிள் வசனங்களைக் கவனமாகப் படியுங்கள்.

‘பாம்பு, பெண்ணிடம் நீங்கள் சாகவேமாட்டீர்கள். ஏனெனில், நீங்கள் அதிலிருந்து உண்ணும் நாளில் உங்கள் கண்கள் திறக்கப்படும். நீங்கள் கடவுளைப்போல் நன்மை தீமையை அறிவீர்கள் என்பது கடவுளுக்கு தெரியும்.’’ என்றது. (ஆதியாகமம்:3:4-6)

ஆண்டவராகிய கடவுள் மனிதனை (ஆதாமை)க் கூப்பிட்டு நீ எங்கே இருக்கின்றாய்? என்று கேட்டார். உம் குரல் ஒலியை நான் தோட்டத்தில் கேட்டேன். ஆனால் எனக்கு அச்சமாக இருந்தது. ஏனெனில் நான் ஆடையின்றி இருந்தேன். எனவே நான் ஒளிந்து கொண்டேன் என்றான் மனிதன்.

நீ ஆடையின்றி இருக்கின்றாய் என்று உனக்குச் சொன்னது யார்? உண்ணக் கூடாது என்று நான் விலக்கிய மரத்;திலிருந்து நீ உண்டாயோ? என்று (ஆண்டவர்) கேட்டார். (ஆதியகாமம்;: 3:9-11)

‘பின்பு ஆண்டவராகிய கடவுள், மனிதன் இப்பொழுது நம்முள் ஒருவர் போல் நன்மை, தீமை அறிந்தவனாகி விட்டான். இனி அவன் என்றென்றும் வாழ்வதற்காக வாழ்வின் மரத்திலிருந்தும் பறித்து உண்ண கையை நீட்டி விடக்கூடாது என்றார். எனவே ஆண்டவராகிய கடவுள் அவன்(மனிதன்) உருவாக்கப்பட்ட அதே மண்ணைப் பண்படுத்த அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியே அனுப்பிவிட்டார்.’’ (ஆதியகாமம் 3:22)

நன்மை, தீமை என்றால் என்ன? என்று தெரியாதவர்களாகப் படைக்கப்பட்ட ஆதாமும் ஏவாளும் தடுக்கப்பட்ட கனியைச் சாப்பிட்ட பின்புதான் பகுத்தறிவைப் பெற்று- கடவுளை போல்- நன்மை தீமை நல்லது கெட்டது என்பவற்றை அறிந்து கொள்கிறார்கள்.

கனியைச் சாப்பிட முன் தாங்கள் நிர்வாணிகளாக இருக்கின்றோமே என்ற உணர்வு கூட இல்லாமல் இருந்தவர்கள் எப்போது தடுக்கப்பட்ட கனியைச் சாப்பிட்டார்களோ அப்போது தான் வெட்கம், மானம், மரியாதை என்பன பற்றியும் அறிந்து கொள்கிறார்கள். ‘மனிதர்களுக்குரிய உணர்வுகளையும்’’ பெற்றுக் கொள்கிறார்கள்.

தாம் நிர்வாண கோலத்தில் இருப்பதைக் கண்டு கொண்ட ஆதாம் அதே கோலத்தில் கர்த்தரை சந்திக்க வெட்கப்பட்டு ஒளிந்து கொள்கிறார். ஆதாம் எங்கே ஒளிந்திருக்கிறார் என்பதை அறியாத ஆண்டவர், ஆதாமின் பெயரைக்கூறி சப்தமிட்டு அழைத்து விசாரிக்கிறார்;. வெட்கத்தின் காரணமாக ஒளிந்து கொண்டதாக ஆதாம் காரணம் கூறுகிறார்.

ஆதாம் தடுக்கப்பட்ட கனியை சாப்பிட்டதன் மூலம்; வெட்க உணர்வை பெற்று நம்மில் ஒருவர் போல் பகுத்தறிவை இப்போது பெற்று விட்டார். எனவே ஏதேன் தோட்டத்தில் இனி இவர்கள் இருக்க முடியாது என கூறி அங்கிருந்து அவர்களை கர்த்தர் வெளியேற்றுகிறார். பாம்புக்கு கொடுக்கப்பட்டிருந்த பகுத்தறிவு கூட ஆதாமுக்கும் ஏவாளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. பாம்பு பகுத்தறிவோடு படைக்கப் பட்டிருந்ததால்தான் இருவருக்கும் எதிராக சூழ்ச்சி செய்ய முடிந்தது.

உண்மை இவ்வாறிருக்க சுயபுத்தி இல்லாதவர்களாக, நன்மை தீமை பற்றிய அறிவு இல்லாதவர்களாக இருந்த நிலையில் ஆதாமும் ஏவாளும் ஒரு கனியைச் சாப்பிட்டதற்காக மொத்த பெண்களையே இழிவானவர் களாகக் கூறுவது எப்படி நியாயமாகும்?

செய்த குற்றத்திற்காக ஆதிமனிதர்களாகிய அவ்விருவருக்கும் கர்த்தர் கடுமையான தண்டனைகளை வழங்கி பூமிக்கு இறக்கிய பிறகும் கூட பெண் சமூகத்தை இழிவுபடுத்தி பைபிள் வசனங்கள்; எழுதப்பட்டிருப்பது எப்படி சரியாகும்;?

இந்நிலையில் முதல் மனிதன் புரிந்த பாவம் தொடக்கம் எல்லா மனிதர்களின் பாவங்களுக்காகவும் இயேசு தன்னையே சிலுவையில் பலிகொடுத்தார் என்று கூறுவதும் நம்புவதும் போதிப்பதும் நியாயம்தானா? கிறிஸ்தவ நண்பர்களே கொஞ்சம் சிந்திக்கக்கூடாதா?

## இஸ்லாத்தின் பார்வையில்...

ஆதாம் ஏவாள் செய்த தவறுக்காக பெண் சமூகத்தை இழிவுபடுத்தி இஸ்லாத்தின் இறுதி வேதநூலாகிய அல்குர்ஆனில் ஒரு வார்த்தை கூடப் பேசப்படவில்லை.

'ஆதமே! நீயும் உம் மனைவியும் இச்சுவர்க்கத்தில் குடியிருங்கள். மேலும் நீங்கள் இருவரும் விரும்;பியவாறு தாராளமாக அதிலிருந்து புசியுங்கள். ஆனால் நீங்கள் இருவரும் இம் மரத்தை நெருங்க வேண்டாம். (நெருங்கினால்) அப்போது நீங்கள் இருவரும் அநியாயக்காரர்களில் ஆகிவிடுவீர்கள் என்று நாம் கூறினோம்." (அல்குர்ஆன்- 2:35, 7:19)

*அவ்விருவரின் மறைக்கப்பட்ட வெட்கத்தலங்களை அவ் விருவருக்கும் வெளிப்படுத்துவதற்காக ஷைத்தான் அவ்விரு வருக்கும் ஊசலாட்டத்தை உண்டுபண்ணி, 'நீங்கள் இரு வானவர்களாக அல்லது (மரணிக்காமல்) நிரந்தரமானவர்களாக ஆகிவிடுவீர்கள் என்பதற்காகவேயன்றி இம்மரத்தை விட்டும் உங்கள் இரட்சகன்; உங்கள் இருவரையும் தடுக்கவில்லை என்று கூறினான்.*

*'நிச்சயமாக நான் உங்கள் இருவருக்கும் உபதேசம் செய்வோரில் உள்ளவன் என்று அவ்விருவரிடமும் அவன் சத்தியம் செய்து அவ்விருவரையும் ஏமாற்றிக் கீழ் நிலைக்குள் தள்ளினான்.*

*அவ்விருவரும் அம்மரத்தைச் சுவைத்தபோது அவ்விருவரினதும் வெட்கத்தலங்கள் அவ்விருவருக்கும் வெளிப்பட்டன. அவர்கள் இருவரும் சுவர்க்கத்தின் இலைகளால் தம்மை மறைத்துக் கொள்ள முயன்றனர்.*

*அவ்விருவரின் இரட்சகன் அவர்களை அழைத்து 'உங்கள் இருவரையும் இம்மரத்தை விட்டும் நான் உங்களை தடுக்கவில்லையா?*

*நிச்சயமாக ஷைத்தான் உங்கள் இருவருக்கும் பகிரங்க விரோதியாவான் என்று உங்களிடம் நான் கூறவில்லையா?'' (என்று கேட்டான்.) (அல்குர்ஆன்- 7:20 – 22)*

ஷைத்தானின் ஆசைவார்த்தைகளுக்கு ஆதாமும் ஏவாளும் ஏமாந்தார்கள். மரத்;தை அணுகி சாப்பி;ட்டார்கள். தாங்கள் செய்த தவறுக்காக மனம் வருந்தி; பாவமன்னிப்புக் கேட்பது எப்படி என்பதை அல்லாஹ்விடம் கேட்டுத் தெரிந்து அதன்படியே பாவமன்னிப்புக் கோரினார்கள்.

*'பின்னர் ஆதம் தம் இரட்சகனிடமிருந்து சில வார்த்தைகளைப் பெற்று (அதன் மூலம் பாவமன்னிப்பும் கேட்டு)க் கொண்டார். அதனால் அவன் அவரை மன்னித்தான். நிச்சயமாக அவன்தான் மிக்க மன்னிப்பவனும் நிகரற்ற அன்புடையவனுமாவான்.' (அல்குர்ஆன்:2:37)*

*'எங்கள் இரட்சகனே! நாங்கள் எங்களுக்கே அநியாயம் செய்து கொண்டோம். நீ எங்களை மன்னித்து எமக்கு அருள் புரியவில்லை யானால் நிச்சயமாக நாம் நஷ்டவாளர்களில் உள்ளவராவோம்'' என்று அவ்விருவரும் (ஆதமும் ஹவ்வாவும்) கூறினர். (அல்குர்ஆன்:7:23)*

ஆதாமும் ஏவாளும் செய்த பாவத்திற்கு அல்லாஹ் மன்னிப்பு வழங்கி

அவர்களை சுவர்க்கத்திலிருந்து பூமிக்கு இறக்கினான். தன்னிடமிருந்து வழிகாட்டல் வரும் அதனைப் பின்பற்று மாறும் அல்லாஹ் கட்டளையிட்டான். *(பார்க்க அல்குர்ஆன்:2:38)*

தவறு செய்த அவ்விருவருக்கும் சாபம் இடாது பெண் இனத்தை இழிவாகக் கூறாது பாவம் செய்ய தூண்டுதலாக இருந்த ஷைத்தானின் விடயத்தில் எப்போதும் கவனமாக இருக்குமாறுதான் சமூகத்திற்கு எச்சரிக்கப்பட்டது.

*ஆதமுடைய சந்ததியினரே! ஷைத்தான் உங்கள் பெற்றோர் இருவருடைய வெட்கத்தலங்களை அவர்களுக்குக் காட்டுவதற்காக அவர்கள் இருவருடைய ஆடைகளை அவர்களை விட்டும் களைந்து அவர்களைச் சுவர்க்கத்திலிருந்து வெளியேற்றியது போல் உங்களையும் (ஏமாற்றி) குழப்பத்திலாழ்த்தி விட வேண்டாம். நிச்சயமாக அவனும் அவனுடைய பட்டாளமும் நீங்கள் அவர்களைப் பார்க்காத போதிலும் அவர்கள் உங்களைப் பார்த்துக்கொண்டிருக்;கின்றனர். நம்பிக்கை கொள்ளாதவர்களுக்கு நிச்சயமாக நாம் ஷைத்தான்களை நண்பர்களாக ஆக்கியுள்ளோம். (அல்குர்ஆன்:7:27)*

அல்குர்ஆன் கூற்றுப்படி ஒவ்வொரு மனிதனும் செய்கின்ற காரியத்திற்கு அவன் தான் பொறுப்பாளியாக இருக்கின்றான்.

ஒருவனுடைய குற்றத்திற்கு இன்னுமொருவன்தண்டனைஅனுபவிக்க முடியாது. ஆதாமும் ஏவாளும் விட்ட தவறுக்கு மற்றவர்கள் பொறுப்பாக முடியாது என்று குர்ஆன் கூறுகின்றது.

*‘எந்தவோர் ஆன்மாவும் மற்றதன் பாவச் சுமையைச் சுமக்காது. மேலும் மனிதனுக்கு அவன் முயற்சித்ததைத் தவிர வேறு எதுவுமில்லை. நிச்சயமாக அவனது முயற்ச்சி விரைவில் அவனுக்கு காண்பிக்கப்படும்”. (அல்குர்ஆன்:53:38-40)*

*‘அல்லாஹ்விடம் நீங்கள் மீட்டப்படும் நாளை அஞ்சிக் கொள்ளுங்கள். பின்னர் ஒவ்வொரு ஆத்மாவுக்கும் அவை சம்பாதித்தவற்றிற்கு (கூலி) முழுமையாக வழங்கப்படும். அவர்கள் அநியாயம் செய்யப்படவும் மாட்டார்கள்” (அல்குர்ஆன்:2:281)*

*‘ஒவ்வொரு ஆன்மாவும் தான் சம்பாதித்தவற்றிற்கு அடகு வைக்கப் பட்டிருக்கின்றது.” (அல்குர்ஆன்:74:38)*

எனவே முதல் மனிதர்கள் *(உட்பட சகல மனிதர்களும்)* செய்த

பாவங்களுக்காக இயேசு சிலுவையில் பலியானார் என்ற கொள்கையை இஸ்லாம் ஏற்றுக்கொள்ளாத ஆதரிக்காத அதே வேளை, ஏவாள் விட்ட தவறுக்காகப் பெண் இனத்தை குற்றம் சுமத்தவுமில்லை பெண் ஆன்மா அற்ற பிறவி என்று பழிக்கவுமில்லை.

நபி முஹம்மது (ஸல்) அவர்கள் இறைத்தூதராக வந்த காலகட்டத்தில் அவரது சமுதாயம் பெண்களை இழிவுபடுத்தி பெண் குழந்தைகளை உயிரோடு குழிதோண்டிப் புதைத்து வந்தது. இவர்களது கொடூர செயல்களைத் தடுத்து நிறுத்தி பெண்களுக்கும் ஆன்மா உண்டு; வாழ்வுரிமை உண்டு எனக்கூறி அவர்;களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுத்தார்கள்.

'அவர்களில் ஒருவனுக்குப் பெண் குழந்தை குறித்து நன்மாராயம் கூறப்பட்டால் அவன் கோபத்தை விழுங்கியவனாக அவனது முகம் கறுப்பாகி விடுகிறது. அவனுக்குக் கூறப்பட்ட நன்மாராயம் தீங்கென்பதாகக் கருதியதனால் சமூகத்தை விட்டும் தலைமறைவாகிக் கொள்கின்றான். அவமானத்துடன் இதை வைத்துக் கொள்வதா? அல்லது அதை மண்ணில் புதைத்துவிடுவதா? (என்று எண்ணுகிறான்) அறிந்து கொளளுங்கள் அவர்கள் அளிகசும் தீர்ப்பு மிகக் கெட்டது. (அல்குர்ஆன்:16:58.59)

நீங்கள் என்ன பாவம் செய்தீர்கள். உங்கள் பெற்றோர் உங்களைக் ஏன் கொலை செய்தனர் என நாளை மறுமையில் உயிரோடு புதைக்கப்பட்ட பெண் குழந்தைகள் எழுப்பப்;பட்டு கேள்வி கேட்கப்படுவார்கள். (பார்க்க. அல்குர்ஆன்: 81:8.9)

அப்பாவிக் குழந்தைகளைக் கொலை செய்ததற்காகப் பெற்றோர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்ற எச்சரிக்கையை இவ்வசனங்கள் மூலம் எடுத்துக் காட்டி அம்மக்களின் கொடூரத்தன்மைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

பெண்களின் ஆன்மாவை உறுதிசெய்து ஆன்மீகப் பணியில் ஆண்களுடன் சரிசமமான பங்கினை வழங்கி மேம்படுத்துகின்ற புனித அல்குர்ஆன், பெண்கள் வேதம் படிப்பதையோ, கற்றுக் கொடுப்பதையோ பாவமாகக் கூறவில்லை. அல்லாஹ்;வின் கருணை, அன்பு, நேசம், நெருக்கம் பெண்களுக்கும் உண்டு. பயபக்தியான வாழ்வே வெற்றியின் அடித்தளம் என்றும் பொது அறிவிப்பு செய்கிறது.

'உலகம் (குறிப்பிட்ட காலம்) சுகமளிக்கும் ஒன்றாகும். பெறப்படும்

*இந்த சுகப்பொருட்களில் சிறந்தது சாலிஹான (நல்லறங்கள் புரியும்) பெண்ணாகும். என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அம்ரு (ரலி). (நூல் முஸ்லிம். 1467)*

நல்லறங்கள் புரியும் பெண்களே சிறந்தவர்கள் என்ற அந்தஸ்தை கொடுத்து பெண் சமூகத்தை கண்ணியப்படுத்துகிறார்கள் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள்.

மேலும் தாய்மையைப் போற்றி அதன் புனிதத்தை நிலை நிறுத்துகிறது புனித அல்குர்ஆன்.

*மனிதனுக்கு, அவனது பெற்றோர் பற்றி நாம் உபதேசித்தோம். அவனது தாய் அவனைப் பலவீனத்திற்கு மேல் பலவீனமாகச் சுமந்தாள். மேலும், அவனது பால்குடி மறத்தல் இரண்டு ஆண்டுகளிலாகும். நீ எனக்கும் உனது பெற்றோருக்கும் நன்றி செலுத்துவாயாக! என்னிடமே மீளுதல் உள்ளது. (31:14 46:15)*

*உமது இரட்சகன் தன்னையன்றி (வேறு எவரையும்) நீங்கள் வணங்கக் கூடாது என்றும் பெற்றோருக்கு நன்மை செய்யுமாறும் கட்டளையிட்டுள்ளான். அவ்விருவருவரில் ஒருவரோ அல்லது அவ்விருவருமோ உம்மிடம் முதுமையை அடைந்து விட்டால் அவர்களை நோக்கி 'சீ'' எனக்கூறவோ அவ்விருவரையும் விரட்டவோ வேண்டாம். அவ்விருவருக்கும் மென்மையான வார்த்தையையே கூறுவீராக. கருணையுடன் பணிவு என்னும் இறக்கையை அவ்விருவருக்காகவும் நீர் தாழ்த்துவீராக. என் இரட்சகனே! சிறுவனாக இருந்த போது அவ்விருவரும் என்னைப் பராமரித்தது போன்று அவ்விருவருக்கும் நீ கருணை புரிவாயாக என்று கூறுவீராக. (அல்குர்ஆன்:17:23.24)*

அல்குர்ஆன் மகப்பேற்றை புனிதப்படுத்தி உயர்வானதாக்கி தாய்மையை போற்றுகிறது. பிரசவ வேதனை இறைவனின் சாபம் என்று கடிந்துரைக்க வில்லை. சிரமத்தை தாங்கி பெற்றெடுத்த தாய்க்காக- பெற்றோருக்காக- பணிவு என்னும் இறக்கையை தாழ்த்தி நன்றி செலுத்தி பிரார்த்தனை புரியும் பிள்ளைகளாக வாழும்படி போதனை செய்கிறது.

புதிய ஏற்பாட்டில் இயேசு தன்னுடைய தாய்யுடன் நடந்து கொண்ட முறையை பற்றி இவ்வாறு கூறப்படுகிறது.

*'அப்பொழுது அவருடைய சகோதரரும் தாயாரும் வந்து, வெளியே நின்று, அவரை அழைக்கும்படி அவரிடத்தில் ஆள் அனுப்பினார்கள். அவரைச் சுற்றிலும் உட்கார்ந்திருந்த ஜனங்கள் அவரை நோக்கி:*

இதோ உம்முடைய தாயாரும் உம்முடைய சகோதரரும் வெளியே நின்று உம்மைத் தேடுகிறார்கள் என்றார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: என் தாயார் யார்? என் சகோதரர் யார்? என்று சொல்லி தம்மை சூழ உட்கார்ந்திருந்தவர்களைச் சுற்றிப்பார்த்து இதோ என் தாயும் சகோதரரும் இவர்களே. தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ அவனே எனக்குச் சகோதரனும், எனக்குச் சகோதரியும், எனக்குத் தாயுமாய் இருக்கிறான் என்றார். *(மாற்கு 3:31-35)* அவர் இவைகளைச் சொல்லுகையில், ஜனக்கூட்டத்திலிருந்த ஒரு ஸ்திரீ அவரை நோக்கி: உம்மைச் சுமந்த கர்ப்பமும் நீர் பாலுண்ட முலைகளும் பாக்கியம் உள்ளவைகளென்று சத்தமிட்டுக் சொன்னாள். அதற்கு அவர்: அப்படியானாலும் தேவனுடைய வார்த்தையை கேட்டு அதைக் காத்துக் கொள்ளுகிறவர்களே அதிக பாக்கியவான்கள் என்றார். *(லூக்கா 11:27-28)*

இயேசு தன்தாயை அவமதித்ததாகவும் அலட்சியப்படுத்தி யதாகவும் இச்செய்திகள் கூறுகின்றன. ஆனால் அல்குர்ஆன் இயேசுவின் செய்தியைப் பற்றி கூறும் போது தாய்க்கு மரியாதை செய்த உயர்ந்த பண்புள்ளவராக எடுத்துக்காட்டுகிறது.

‘எனது தாய்க்கு நன்மை செய்பவனாகவும் என்னை அல்லாஹ் ஆக்கியுள்ளான். மேலும் கர்வம் கொண்டவனாகவும் துர்ப்பாக்கியம் உடையவனாகவும் என்னை அவன் ஆக்கவில்லை. *(அல்குர்ஆன்:19:32)*

பெண்ணை மனித பிறவியில் சேர்ப்பதா இல்லையா? பெண்ணுக்கு ஆன்மா உண்டா இல்லையா? என்று பைபிள் ஆரம்பித்து வைத்த வாதத்தை அல்குர்ஆன் அறிவுபூர்வமாக ஆக்கப்பூர்வமாக முடித்து வைத்திருக்கிறது.

# தீண்டத் தகாதவள்

ஆண் பெண் இருபாலாரிடையே உடற்கூறு ரீதியாக பல்வேறு வேறுபாடுகள் உள்ளன. அவற்றுள் முக்கியமானது பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாயாகும்.

மாதவிடாய் வெளிப்படுவதன் மூலமாகத்தான் சிறுமி என்ற நிலையிலிருந்து 'வளர்ந்த பெண்'' என்ற நிலையை ஒரு பெண் அடைகிறாள். பெண்மையின் மற்றொரு சிறப்பம்சமான தாய்மை ஏற்படுவதற்கான தகுதியும் அதன் மூலமே தீர்மானிக்கப்படுகிறது.

உடற்கூறு ரீதியான இந்த வேறுபாட்டைக் காரணம் காட்டி பெண்களை இழிவுபடுத்தும் சடங்குகளும் சம்பிரதாயங்களும் நிறையவே உள்ளன. அதுவும் மதங்களின் பெயரால் மலிந்து கிடக்கின்றன. பைபிள் இப்படி கூறுகிறது.

'மாதவிலக்கில் இரத்தப் பெருக்குடைய பெண் ஏழு நாள் விலக்காய் இருப்பாள். அவளைத் தொடுபவர் மாலை மட்டும் தீட்டாயிருப்பர்.

மாதவிலக்கின்போது எதன் மீது படுக்கிறாளோ எவற்றின் மீது அமர்கிறாளோ அவை அனைத்தும் தீட்டே.

அவள் படுக்கையைத் தொடுபவர் அனைவரும் தம் உடைகளைத் துவைத்து நீரில் முழுக வேண்டும். மாலை மட்டும் அவர்கள் தீட்டாய் இருப்பர்.

அவள் அமரும் மணையை தொடுபவன் தன் உடைகளை துவைத்து தண்ணீரில் முழுக வேண்டும். மாலை மட்டும் அவன் தீட்டாய் இருப்பான்.

அவள் படுக்கையின்மீதும் அவள் அமர்ந்த மணையின் மீதும் இருந்த எதையாகிலும் தொட்டவனும் மாலை மட்டும் தீட்டாய் இருப்பான்.

ஒருவன் அவளுடன் படுக்கையில் படுத்துக்கொண்டு அவள் தீட்டு அவன் மீதுபட்டது என்றால் அவன் ஏழுநாள் தீட்டுடையவன். அவன் படுக்கும் படுக்கை அனைத்தும் தீட்டே.

பெண் ஒருத்திக்கு உரிய மாதவிலக்கு நாள்;கள் கடந்தும் உதிரப்

பெருக்கு நீடித்தால் அந்த நாள்;கள் எல்லாம் விலக்கு நாள்களை போல் தீட்டானவையே.

அந்த நாள்கள் எல்லாம் அவள் படுக்கும் படுக்கை அனைத்தும் விலக்கு காலப்படுக்கைக்கு ஒத்ததே. அவள் அமரும் அனைத்தும் தீட்டுக் காலத்தைப் போன்றே விலக்காய் இருக்கும்.

அவற்றைத் தொடுபவன் தன் உடைகளைத் துவைத்து நீரில் மூழ்க வேண்டும். மாலை மட்டும் அவன் தீட்டாய் இருப்பான்.

அவள் தன் இரத்தப்பெருக்கு நின்ற பின் ஏழுநாள் கழித்த பின் தீட்டற்றவள் ஆவாள்.

எட்டாம் நாள் இரு காட்டுப் புறாக்களையோ புறாக் குஞ்சுகளையோ சந்திப்புக்கூடார (குருவின் கூடார) வாயிலில் குருவிடம் கொண்டு வருவாள்.

குரு அவற்றில் ஒன்றை பாவம் போக்கும் பலியும் மற்றதை எரி பலியுமாக்கி அவளுக்காக ஆண்டவர் திருமுன் பாவக் கழுவாய் நிறை வேற்றுவார். (லேவியராகம் 15:19-31)

மாதவிடாய்க் காலத்தில் பெண் எப்படி நடந்து கொள்ள வேண்டும்; நடாத்தப்பட வேண்டும் என்று கூறும் பைபிளின் இந்த அறிவுரைகளை நன்றாகக் கவனியுங்கள். இவ்வசனங்களை மூன்று பிரிவுகளாக வகுத்து நோக்கலாம்.

1) மாதவிடாய் இரத்தப்போக்கு வந்து கொண்டிருக்கும் காலம்

2) மாதவிடாய்க்குரிய நாட்கள் முடிந்த பின்பும் ஏற்படும் இரத்தப் போக்குடைய காலம்.

3) மாதவிடாய் நாட்களில் ஆலயத்தில் நுழையக் கூடாத காலம்.

இவற்;றில், மூன்றாவதாக கூறப்படும் காரணத்தில்; நியாயம் இருக்கத்தான் செய்கிறது. இறைவனை வணங்கக்கூடிய ஆலயத்தின் பரிசுத்தத்தன்மை எப்போதும் பேணப்படவேண்டும். பக்தி மயம் நிறைந்து காணப்படக்கூடிய இடத்தில் எவ்வித அசுத்தங்களும் அசுத்தங்கள் ஏற்படக் கூடியவைகளும் இருக்கக் கூடாது என்பதில் நியாயம் இருக்கத்தான் செய்கிறது.

ஆனாலும் மற்ற இரு காரணங்களிலும் நியாயங்கள் இருப்பதாகக் கூற முடியவில்லை. ஒரு பெண்ணுக்கு மாதவிலக்கு ஏற்படும் சமயத்தில்

அவளை யாரும் தொடவோ அவளால் யாரும் தொடப்படவோ கூடாது. அணுகப்படவும் கூடாது:

அவள் இருந்த இடத்தையும் படுத்த படுக்கையையும் தொடுபவன் தீட்டுப்பட்டவனாவான். அதிலிருந்து தூய்மையடைவதற்கு அவனது ஆடைகளையும் கழுவி குளித்து சுத்தமாக்க வேண்டும். தப்பித் தவறி அப்பெண்ணுடன் சேர்ந்து உறங்கி விட்டால் அவனும் ஏழு நாட்கள் தீட்டுக்குரியவனாகி விடுவதுடன் அவனது படுக்கையும் தீட்டுக்குரியதாகி விடும் என்பதெல்லாம் நியாயமான காரணங்களல்ல. பெண்ணைக் கேவலமாக தீண்டத் தகாதவளாக எந்தளவு எடுத்துக் காட்ட முடியுமோ அந்தளவு எடுத்துக் காட்டுகிறது இவ்வசனங்கள்.

மாதவிலக்கு வந்த அப்பெண்ணை குடும்பத்தை விட்டும் சமூகத்தை விட்டும் ஒதுக்கிவைக்குமாறும் தனிமையில் தள்ளி விடுமாறும் அவளுடன் உள்ள தொடர்புகளை முற்றிலும் துண்டிக்குமாறும் தெளிவாகச் சொல்கிறது பைபிள். இன்னுமொரு வார்த்தையில் சொன்னால் குறிப்பிட்ட அந்த ஏழு நாட்கள் முடியும் வரை அப்பெண்ணை மனிதப்பிறவியாகக் கருதி அண்டியிருக்கவும் கூடாது என்கிறது பைபிள்.

குறிப்பிட்ட அந்த ஏழு நாட்களுக்குள் மாதவிலக்கு நிற்காது தொடர்ந்தும் இரத்தப்போக்கு ஏற்படுமாயின் அப்போதும் தீண்டத் தகாதவளாகக் கருதி அவளை ஒதுக்கி வைக்க வேண்டும். ஏழுநாட்கள் முடிந்து எட்டாம் நாள் ஆலய குருவின் தலைமையின் கீழ் தீட்டைப் போக்கும் சடங்குகளைச் செய்தாக வேண்டும்.

இரு காட்டுப் புறாக்களையோ அல்லது புறாக்குஞ்சுகளையோ கொண்டு வந்து குருவிடம் கொடுக்க வேண்டும். அவர் அவ்விரு புறாக்களையும் ஆலயத்திற்கு வெளியில் மக்கள் முன்னிலையில் அறுத்துப் பலியிடுவார்.

பெண்ணுக்கு ஏற்பட்ட மாதவிலக்கை ஒரு பாவமாகக் கருதி அப்பாவத்திற்குப் பிராயச்சித்தமாக அதில் ஒரு புறாவைப் அறுத்துப் பலியிடுவார். மற்றப் புறாவை எரிபலி (சர்வாங்க தகனப் பலி)யாக்கி அறுத்துப் பலியிடுவார். அதன் பிறகுதான் குறிப்பிட்ட அப்பெண் பரிசுத்த மடைந்தவளாக சேர்த்துக் கொள்ளப்படுவாள்.

பெண்மையின் அழகு, வெட்கத்திலும் நாணத்திலும் அடக்கத்திலும் தங்கியுள்ளது. எந்தப் பெண்ணுமே பெண்மையை விட்டுக் கொடுக்க விரும்பமாட்டாள். ஆனாலும் பைபிளோ பெண்மையை சிதைக்கின்ற வேலையை சிறப்பித்துச் சொல்கிறது.

எந்தப் பெண்ணும் தன்னுடைய மாதவிலக்குக் காலத்தைப் பற்றிப் பறைசாற்றிக் கொண்டிருக்க மாட்டாள். இன்னுமொருவருக்கு தெரியும்படி நடந்து கொள்ளவும் மாட்டாள். ஆனால், பைபிளின் கட்டளைப் பிரகாரம் ஒவ்வொரு பெண்ணும் மாதவிலக்குப்பற்றி அறிவித்தேயாக வேண்டும். அவளுடைய 'அந்த நாட்களின் ரகசியம்'' ஆலயத்தின் குருவுக்குத் தெரிந்தாக வேண்டும். அந்தப் பகுதியிலுள்ள பெண்களுக்கு அல்லது ஆலயத்திற்கு வரக் கூடிய பெண்களுக்கு எப்போது, எந்த திகதியில் எந்த நாளில் 'அந்த நாள்'' வரும் என்பது ஆலய குருவுக்கு (பாதிரியாருக்கு) சுவாரஸ்யமான விஷயம்தான்!

மாதவிடாயை உடல்ரீதியாக வெளிப்படும் இரத்தப்போக்காக அல்லது ஒரு உபாதையாக கணிக்காமல் பாவமான காரியமாகவே சித்தரிக்கப் படுகிறது. இப்பாவத்திலிருந்து அவள் விடுபடுவதற்கு இரு புறாக்களை ஆலயகுருவின் கையில் ஒப்படைத்து அறுத்துப்பலியிடுவதன் மூலமே பரிசுத்தமுள்ளவளாக முடியும்.

இச்சடங்குகளின் மூலம் பெண்கள் அவமானச் சின்னங்களாக நிறுத்தப் படுகிறார்கள் என்பதைத் தவிர வேறெதுவுமில்லை. மூட நம்பிக்கையை மொத்தமாகக் குத்தகைக்கு எடுத்து மதச்சாயம் பூசி அரங்கேற்றப்படுகிறது.!

பைபிளை ஏற்றுக்கொண்ட எந்தப் பெண்ணாவது தன்னுடைய மாதவிடாய் முடியும் போது ஆலயத்திற்கு முன் சென்று புறாவை அறுத்து பலியிடும் இச்சடங்கு சம்பிரதாயத்தை செய்வதற்குத் துணிவாளா? தன்னுடைய மனைவி மற்றும் மகளின் மாதவிலக்கு சடங்குகளை ஏற்பாடு செய்ய எந்த ஆண் மகனாவது முன்வருவானா? அல்லது எந்த கண்ணியாஸ்திரியாவது பாதிரியாருக்கு முன் புறாவை பலியிட்டு மாதவிடாயிலிருந்து தூய்மை அடைந்து கொள்வாளா? அல்லது தூய்மை அடைந்தவளாகத் தான் இருக்கிறாளா? என்பதை மனச்சாட்சிப்படி கூற வேண்டும்.

நாள் முழுவதும் ஆயிரக்கணக்கான புறாக்களை பலியிடுவதிலும் சடங்குகளை நிறைவேற்றுவதிலும் ஆலயகுருக்கள் தங்களுடைய பணிகளை செய்து கொண்டிருக்க வேண்டும். ஒரு மாதத்திற்கு இலட்சக் கணக்கான புறாக்களை பலியிடுவது மட்டுமல்லாமல் உற்பத்திற்கான வழிகளையும் செய்தாக வேண்டுமே!

பெண்கள் மாதவிடாய் மூலம் அசுத்தம் அடைவது போல் ஆண்களும் விந்து வெளிப்படுவதன் மூலம் அசுத்தமடைகின்றனர். ஆனால் எந்த

பரிகாரத்தையும் ஆண்களுக்கு பைபிள் சொல்ல வில்லையே அது ஏன் என கேட்கக்கூடாதா?

'விந்து ஒழுகினாலும் உடலினுள் அடக்கி வைத்தாலும் (ஆண்மகன்) தீட்டாகிறான்'' என்கிறது வேதாகமம். (லேவி யராகம். 15:1-3) அப்படி என்றால் எல்லா ஆண்களை விட கர்த்தருக்காக தங்கள் உணர்ச்சிகளையும் உணர்வுகளையும் அடக்கி ஆலயங்களுக்குள் அடங்கியிருக்கும் குருமார்களின் நிலையை என்ன வென்று சொல்வது?

திருபவுலின் பேச்சுக்காக ஆசைகளை அறுத்தெறிந்து திருமணத்தை துறத்தி விட்டு துறவரத்தை ஏற்றிருக்கும் இவர்களின் வாழ்வின் யதார்த்தம் தான் என்னவோ?

## இஸ்லாத்தின் பார்வையில்.....

இஸ்லாத்தைப் பொறுத்தவரையில் மாதவிலக்கு ஏற்பட்ட பெண்ணை தீண்டத்தகாத அருவருப்பான ஒரு பிறவியாக கணிக்காது ஆன்மா உள்ள ஒரு பெண்ணாகவும் அண்டிப்பழக அருகதையுள்ள ஒரு பெண்ணாகவும் மனிதப் பிறவியாகவுமே போற்றுகின்றது.

நபி முஹம்மது (ஸல்) அவர்களுடைய காலத்தில் மாத விலக்குள்ள பெண்ணைத் தீண்டத்தகாதவளாக ஒதுக்கி வைக்கும் மக்களுடைய பழக்கங்களைப் பற்றி நபித் தோழர்கள் பின்வருமாறு முறையிட்டார்கள்.

'அல்லாஹ்வின் தூதரே! யூதர்கள் மாதவிடாய் ஏற்பட்ட பெண்களுடன் அமர்ந்து சாப்பிடமாட்டார்கள். வீடுகளில் அவர்களுடன் ஒட்டி உறவாட மாட்டார்கள். இதுபற்றி என்ன கூறுகிறீர்கள்'' எனக் கேட்டார்கள். (தங்களுடைய பெண்கள் விஷயத்தில் இப்படித்தான் நடக்க வேண்டுமா என்ற எண்ணத்திலேயே கேட்டார்கள்.) அப்போது அல்லாஹ் பின்வரும் வசனத்தை இறக்கி மாதவிலக்குள்ள பெண்களுடன் நடந்து கொள்ள வேண்டிய முறையை விளக்கப்படுத்தினான்.

'மாதவிடாய் பற்றி அவர்கள் உம்மிடம் வினவுகிறார்கள். அது ஒரு அசௌகரியமாகும். எனவே மாதவிடாயின்; போது பெண்களை விட்டும் விலகியிருங்கள். அவர்கள் தூய்மையாகும் வரை அவர்களை அணுகாதீர்கள். அவர்கள் தூய்மையடைந்த பின் அல்லாஹ் உங்களுக்கு கட்டளையிட்டவாறு அவர்களிடம் செல்லுங்கள் என்று (நபியே!) நீர் கூறுவீராக. நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்புத் தேடுபவர்களை நேசிக்கிறான். மேலும் தூய்மையானவர்களையும் நேசிக்கின்றான் எனக் கூறுவீராக'' (அல்குர்ஆன் 2:222)

இந்த வசனத்தில் மாதவிலக்குள்ள பெண்களிடம் நெருங்காதிருங்கள் விலகியிருங்கள்; தூய்மையடைந்த பின் இணைந்து கொள்ளுங்கள் எனக் கூறப்பட்டுள்ளது. அதற்காகப் பயன்படுத்தப்பட்ட அறபு வார்த்தை 'இஃதஸிலூ'' என்பதாகும். அதன் மூலச்சொல் 'அஸ்ல்'' என்பதாகும். இதன் நேரடிப் பொருள் கணவனும் மனைவியும் உடலுறவில் ஈடுபடாமல் இரு பாலுறுப்புகளும் சந்தித்துக் கொள்ளாமல் தவிர்ந்து கொள்வது என்பதாகும்.

நபி முஹம்மது (ஸல்) அவர்கள் இவ்வசனத்திற்கு விளக்கவுரை கூறியபோது 'தாம்பத்திய உறவைத்தவிர மாதவிடாயப்; பெண்ணுடன் மற்றக் காரியங்களைச் செய்து கொள்ளுங்கள்'' எனக் கூறினார்கள். அறிவிப்பவர்: அனஸ்(ரலி) (நூல்: முஸ்லிம் 507)

எனவே, இஸ்லாத்தைப் பொறுத்த வரையில் மாதவிடாய் ஏற்பட்ட பெண்ணுடன் தாம்பத்திய உறவைத் தவிர்த்துக் கொண்டு அன்றாடம் சாதாரணமாக அண்டிப் பழகுவது போன்றே செயலாற்ற வேண்டும் எனக் கூறுகிறது.

மாதவிடாய் ஒருபாவம் என்றோ கடவுளின் சாபம் என்றோ இஸ்லாம் கூறவில்லை. அக்கருத்துடையவர்களின் மூட நம்பிக்கைளையும் சடங்கு சம்பிரதாயங்களையும் தகர்த்தெறிந்து பெண்ணின் கௌரவம் காக்கவே அது வழிகாட்டுகிறது.

நபி முஹம்மது (ஸல்) அவர்களின் மனைவி ஆயிஷா (ரலி) கூறியதாவது: எனக்கு மாதவிடாய் ஏற்பட்டிருக்கும் போது நபி (ஸல்) அவர்கள் எனது மடியில் சாய்ந்து கொண்டு குர்ஆனை ஓதக் கூடியவர்களாக இருந்தார்கள்''. (நூல்: புகாரி:297 முஸ்லிம்.506)

'எனக்கு மாதவிடாய் ஏற்பட்டிருக்கும் போது என் இடுப்பில் ஆடையைக் கட்டிக் கொள்ளுமாறு நபி (ஸல்) அவர்கள் என்னிடம் கூறுவார்கள். ஆடையைக் கட்டிக் கொண்டதும் என்னை அணைத்துக் கொள்வார்கள்''. (நூல்: புகாரி 300)

'நபி (ஸல்) அவர்கள் பள்ளிவாசலில் 'இஃதிகாப்'' எனும் வணக்கத்தை நிறைவேற்ற தங்கியிருக்கும்போது அங்கிருந்தவாறே என் (அறையின்) பக்கமாகத் தலையைக் காட்டுவார்கள். நானோ மாதவிடாய்க்காரியாக இருக்கும் நிலையில் அவர்;களது தலையைக் கழுவி விடுவேன். மேலும், அவர்களது தலையை வாரியும் விடுவேன்.'' (நூல்: புகாரி 301 முஸ்லிம். 499)

'எனக்கு மாதவிடாய் ஏற்பட்டிருக்கும் போது நான் பருகிய பானத்தை

நபி (ஸல்) அவர்களிடம் கொடுப்பேன். அப்போது அவர்கள் நான் வாய்வைத்த இடத்தில் தமது வாயை வைத்து அருந்துவார்கள்.

மாதவிடாய் ஏற்பட்டிருந்த நான், இறைச்சியுள்ள எலும்புத் துண்டைக் கடித்து விட்டு அதை நபியவர்களிடம் கொடுப்பேன். நான் வாய்வைத்த இடத்தில் அவர்கள் தமது வாயை,வைத்துக் கடித்துச் சாப்பிடுவார்;கள்''. (நூல்: முஸ்லிம் 505)

'நாங்கள் ஹஜ் வணக்கத்தைச் செய்வதற்காகப் புறப்பட்டுச் சென்றோம். 'ஸரீஃப்'' என்ற இடத்தை அடைந்ததும் மாதவிடாய் ஏற்பட்டுவிட்டது. அப்போது நபி(ஸல்) அவர்;கள் நான் இருந்த இடத்திற்கு வந்தார்கள். அழுது கொண்டிருந்த என்னைப் பார்த்து ஏன் அழுகிறாய்? என்று வினவினார்கள். இவ்வாண்டு ஹஜ் செய்ய முடியாது என்று கருதுகிறேன் என்றேன். உனக்கு மாதவிடாய் ஏற்பட்டு விட்டதா? என்று கேட்டார்கள். நான் ஆம் என்று சொன்னேன். இந்த மாதவிடாய் ஆதமுடைய பெண் மக்கள் மீது அல்லாஹ் ஏற்படுத்தியது. எனவே கஃபதுல்லாஹ்வை (கஃபா ஆலயத்தை) தவாப் (சுற்றிவருவதை) தவிர ஹாஜிகள் செய்கின்ற மற்ற எல்லாக் காரியங்களையும் நீ செய்துகொள் என எனக்கு கூறினார்கள்'' என ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார்கள். (நூல் : புகாரி 294)

'கன்னிப் பெண்களும் மாதவிடாய் பெண்களும் பெருநாள் அன்று தொழுகை நடைபெறும் திடலுக்கு வந்தாக வேண்டும். தொழுகையிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும். அங்கு நடை பெறும் நன்மையான காரியங்களிலும் முஸ்லிம்களுடைய பிரார்த்தனைகளிலும் கலந்துகொள்ள வேண்டும் என நபி(ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள்''. அறிவிப்பவர் : உம்மு அதிய்யா(ரலி) (நூல்: புகாரி 971)

மாதவிடாய் ஏற்பட்ட பெண்கள் தொழக் கூடாது;, நோன்பு நோற்கக் கூடாது;, கஃபா ஆலயத்தை (தவாபு) சுற்றி வரக்கூடாது, பள்ளிவாசலில் தங்கக்கூடாது, கணவருடன் உடலுறவு கொள்ளக் கூடாது என்பன போன்ற காரியங்களைத் தவிர ஏனைய விடயங்களில் மற்றப் பெண்களைப் போல் சகஜமாக சாதாரணமாக நடந்து கொள்ளலாம் என நபி (ஸல்) அவர்கள் விளக்கியுள்ளார்கள். □மாதவிடாய் ஏற்பட்ட பெண்களுக்கு இஸ்லாம் வழங்கியுள்ள மதிப்பும் மரியாதையும் கண்ணியமும் இந்த பொன்மொழிகள் மூலமும் நபிகளாரின் செயற்பாடுகள் மூலமும் புரிந்து கொள்ளலாம். மாதவிடாய் ஏற்பட்ட பெண் இருந்த இடம் தீட்டுப்பட்ட இடம் என்றோ அவளுடைய ஆடையை தீட்டுப்பட்ட ஆடை என்றோ அவளைத் தொட்டவன் முழுமையாக முழுக வேண்டும் என்றோ நபி

*(ஸல்) அவர்கள் கூறவில்லை.*

*ஒரு பெண்மணி நபி(ஸல்) அவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் தூதரே! எங்களில் ஒருவருடைய ஆடையில் மாதவிடாய் இரத்தம் பட்டுவிட்டால் அவள் எப்படி சுத்தம் செய்ய வேண்டும் என்று கேட்டார். அதற்கு நபியவர்கள் உங்களில் எவருடைய ஆடையிலாவது மாதவிடாய் இரத்தம் பட்டுவிட்டால் அதைச் சுரண்டி விட்டு பின்னர் அந்த இடத்தில் தண்ணீர் தெளித்து சுத்தம் செய்து விடட்டும். பின்னர் அந்த ஆடையுடன் தொழுது கொள்ளட்டும் என கூறினார்கள். அறிவிப்பவர்: அஸ்மா பின்த் அபூபக்கர் (ரலி) (நூல்: புகாரி 307)*

ஆடையில் மாதவிடாய் இரத்தம்பட்ட இடத்தை மாத்திரம்; கழுவி விட்டு அந்த ஆடையை தொழுகைக்கு பயன்படுத்தி கொள்ளலாம் என நபியவர்கள் கூறியதன் மூலம் 'தீட்டுப்பட்ட ஆடை'' என்ற சிந்தனையை வளர விடாமல் நசுக்கி விடுகிறார்கள்.

அதுபோல் 'மாதவிடாய் ஏற்படக்கூடிய நாட்களையும் தாண்டி இரத்தப் போக்கு ஏற்பட்டால் அதனை ஒரு தீட்டாகக் கருதாமல் சாதாரணமாக வெளியேறும் இரத்தமாகக் கருதி சுத்தமாக்கி விடுமாறும் கூறுகிறார்கள்.

*பாதிமா பின்த் அபீ ஹுபைஷ் என்ற பெணமணி நபி (ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே! நான் (மாதவிடாய் காலத்தையும் தாண்டி வெளியாகிக் கொண்டிருக்கும்) உயர் இரத்தப் போக்கிலிருந்து சுத்தமாவதே இல்லை. எனவே, நான் தொழுகையை விட்டுவிடலாமா? என்று கேட்டார். அதற்கு நபியவர்கள் 'அது ஒரு நரம்பு சம்பந்தப்பட்ட நோய். அது மாதவிடாய் அல்ல. மாதவிடாய் ஏற்படும் போது தொழுகையை விட்டுவிடு. மாதவிடாய் காலம் கழிந்ததும் இரத்தத்தைச் சுத்தம் செய்து விட்டுத் தொழுதுகொள்'' எனக் கூறினார்கள். அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி) (நூல் : புகாரி 306 முஸ்லிம் 553)*

*அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ப் (ரலி) அவர்களின் மனைவி உம்மு ஹபீபா பின்த் ஜஹ்ஷ் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து தனக்கு ஏழு வருடகாலமாக இரத்தப் போக்கு இருந்து வந்தது எனக் கூறி மார்க்கத் தீர்ப்புக் கோரினார். இது மாதவிடாயல்ல. (வழமையாக) மாதவிடாய் நிற்கும் நாட்கள் வரை நீ காத்திரு. பின்னர் குளித்து விட்டுத் தொழுதுகொள். என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி) (நூல்: முஸ்லிம் 555.. 557)*

வழமையான மாதவிடாய்க்கான நாட்களையும் கடந்த பின்; தொடராக

இரத்தம் வெளியேறுமாயின் அது மாதவிடாயல்ல. நரம்பு சம்பந்தப்பட்ட ஒரு நோய். அதற்காக கவலைப்படாமல் சுத்தம் செய்துவிட்டுத் தொழுகையில் ஈடுபடுமாறு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.

பெண்களுடைய இரத்தப்போக்கைக் காரணம் காட்டி அவர்களை மட்டம் தட்டவுமில்லை. அவர்களுடைய மானம் மரியாதையை ஏலம் போடவுமில்லை. அதற்கான எந்தச் சடங்கு சம்பிரதாயங்களையும் சொல்லிக் கொடுக்கவுமில்லை.

மாதவிடாய் ஏற்படுவதால் பெண்களை தீண்டத்தகாத பிறவியாக கணிக்கக்கூடாது என்று இஸ்லாம் உறுதியாகக் கூறி பெண்மைக்கு அழகு சேர்க்கிறது.

# கன்னித் தன்மையை நிரூபிக்க அக்கினிப் பரீட்சை

பெண்களை இழிவுபடுத்தி ஆணாதிக்கத்தை மேலோங்கச் செய்வதற் கென்றே பைபிளில் தனிச் சிறப்புப் போதனைகள் உள்ளன.(!)

தனது கற்பு விடயத்தில் எவரும் எள்ளளவும் சந்தேகம் கொள்வதையோ, களங்கம் ஏற்படுத்துவதையோ எந்தப் பெண்ணும் சகித்துக் கொண்டிருக்கமாட்டாள்.

'இவள் மானம்கெட்ட பெண், களங்கப்படுத்தப்பட்ட பெண்'' என்று யாராவது கூறினால் அந்த அபாண்டத்தைச் சகித்துக் கொண்டு இருக்க மாடாள். சில நேரம் உயிரை விடவும் தயங்க மாட்;டாள். கற்பின் மீது பெண்கள் கொண்டுள்ள கண்ணியம், மரியாதை போன்று எந்தவொரு ஆண்மகனும் தனது கற்பின் மீது மரியாதை வைக்க இயலாது.

அதனால் தான் கற்பழிப்புக்கு ஆளாக்கப்பட்ட பின் சில பெண்கள்; உயிர் வாழ்வதை விட அதனை மாய்த்துக் கொள்வதே சிறந்தது எனக் கருதுகிறார்கள்; செயற்படுத்தியும் காட்டுகிறார்கள்.

ஆண்களுக்கும் கற்பு இருக்கத்தான் செய்கிறது. ஆனால், பெரும்பாலும் கண்டிப்புடன் அக்கற்பை அவர்கள் பேணுவதில்லை. காரணம் பெண்களின் கற்பை சூறையாடுவதே ஆண்கள்தானே! பெண்களின் கற்பு விடயத்தில் கண்டிப்பு காட்டுவதிலும் ஆண்கள் விடயத்தில் கவனயீனமாக இருப்பதிலும்தான் சமூக கணிப்பீடு காணப்படுகிறது. இந்நிலை தான் ஆணாதிக்கம் நிலை பெறக் காரணமாக அமைந்தது.

பெண்களின் கற்பை, கன்னித் தன்மையை பரீட்சித்துப் பார்க்க பல்வேறுபட்ட வழிகளை இச்சமுதாயமும் ஏதோ ஒரு வழியில் கடைப் பிடித்து வருகின்றது. அப்படி ஒரு (கொடூரமான) வழியை பைபிளும் சொல்லித்தந்து நடைமுறைப்படுத்தச் சொல்கிறது. ஒரு பெண் கன்னித் தன்மையுள்ளவளா? இல்லையா? என்பதைப் பரீட்சித்துப் பார்க்க ஒரு பரிசோதனை கூடத்தை நடாத்தச் சொல்கிறது. அது ஒரு விசித்திரமான பரீட்சை,; விஷமத்தனமான பரீட்சை,; அக்கினிப் பரீட்சை.

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் மறக்க முடியாத வசந்தமான நாள் மணமுடித்த நாள். முதலிரவு நாள்; ஆண்களை விடப் பெண்கள் தான் இந்நாளை அதிக பரபரப்புடன், பரவசத்;துடன், எதிர்பார்ப்புடன் பயத்துடன் சந்திப்பார்கள்.

சலசலப்புக்கள் இல்லாமல் சந்திக்கும் இரு உள்ளங்களையும் சந்தேகம் கொண்டு பார்க்கும் ஒரு சந்திப்பை அன்றைய முதலிரவில் நடாத்தி முடிக்க ‘மாஸ்டர் பிளேன்’’; *(Master Plain)* ஒன்றைக் கணவனுக்கு பைபிள் சொல்லிக் கொடுக்கின்றது.

அன்றைய முதலிரவுப் படுக்கையில் ஒரு துணியை விரித்து வைத்து அதன்மீது உடலுறவு கொள்ள வேண்டும். அதன் போது மனைவியிடமிருந்து கசிந்த இரத்தம் அத்துணியில் படிந்திருக்க வேண்டும். இரத்தம் படிந்திருந்தால் தான் அவள் கற்புள்ள பெண். இரத்தக் கசிவு காணப்படவில்லையாயின் அவள் கற்பிழந்த பெண். அதாவது திருமணத்திற்கு முன்பே வேறொருவனுக்கு முந்தாணி விரித்தவள், நடத்தைக் கெட்டவள், கன்னித் தன்மையை இழந்தவள் என்று முடிவு செய்து விலக்கி விடவேண்டும்.

திருமணத்திற்கு முன்பு தான் ஒரு கற்புள்ள பெண்ணாக வாழ்ந்ததற்கு அத்தாட்சியாக முதலிரவில் இரத்தக் கசிவுபடர்ந்த அத்துணியை அவள் எடுத்துக்காட்டவேண்டும். பத்திரப்படுத்த வேண்டும்.

மனைவியின் கற்பின் மீது சந்தேகம் கொண்டு; கணவன் வழக்குத் தொடுத்தால் அதனை முறியடிப்பதற்காக இத்துணியை சாட்சியாக சமர்பித்திட வேண்டும். தவறும் பட்சத்தில் மனைவி மோசம் போனவள் என்று முடிவு செய்யபட்டு கல்லெறிந்து கொல்லப்படுவாள். இதனை நாங்கள் படிப்பதற்கும் கேட்பதற்கும் அசிங்கமானதாக தெரிந்தாலும் உண்மை நிலை இதுதான்!

பெண்களுடைய கற்பை நிரூபிக்க அக்கினிப் பரீட்சை நடாத்தும் பைபிள், ஆண்களின் கற்பை நிரூபிக்க ஒரு வார்த்தையேனும் சொல்லாமல் வழியேதும் காட்டாமல் மௌனம் சாதிக்கின்றது. பின்வரும் பைபிள் வசனங்களை நிதானமாகப் படியுங்கள்.

‘ஒருவன் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து அவளோடு கூடிய பின் அவளை வெறுத்து, அவள் மீது அவதூறு சொல்லி, அவளது பெயரைக் கெடுத்து, நான் இந்தப் பெண்ணை மண முடித்தேன். ஆனால், அவளோடு உறவு கொண்டபோது அவள் கன்னியல்ல என்று கண்டு

*கொண்டேன் என்று கூறினால், அப்பெண்ணின் தந்தையும் தாயும் அவளது கன்னிமையின் அடையாளத்தை எடுத்துக்கொண்டு அவளை நகர் வாயிலிலுள்ள தலைவர்களிடம் கூட்டி வருவார்கள்.*

*அப்போது அப்பெண்ணின் தந்தை தலைவர்களிடம் என் மகளை இந்த மனிதனுக்கு மனைவியாகக் கொடுத்தேன். அவனோ அவளை வெறுக்கின்றான். அத்தோடு உன்மகளிடம் கன்னிமையைக் காணவில்லை என்று கூறி அவளைப் பற்றி அவதூறு சொல்லுகிறான். 'இதோ என் மகளின் கன்னிமைக்கான சான்று'' என்று சொல்லுவான்.*

*பின்பு அவர்கள் நகர் தலைவர்களின் முன்னர் அந்தத் துணியை விரிப்பார்கள். அப்போது அந்நகர்த் தலைவர்கள் அம்மனிதனைப் பிடித்துத் தண்டிப்பார்கள். பின்னர் அவனுக்கு நூறு வெள்ளிக் காசுகள் தண்டம் விதித்து அதைப் பெண்ணின் தந்தையிடம் கொடுப்பார்கள்.*

*ஏனெனில், இஸ்ரயேலின் கன்னி ஒருத்தியின் மேல் அவன் அவதூறு கூறியுள்ளான். அவளே இவனுக்கு மனைவியாக இருப்பாள். அவன் வாழ்நாள் முழுவதும் அவளைத் தள்ளிவிட முடியாது. (விவாகரத்து செய்ய முடியாது).*

*ஆனால், அப்பெண்ணிடம் கன்னிமை காணப்படவில்லை என்பது உண்மையானால் அந்தப் பெண்ணை அவள் தந்தையின் வீட்டு வாயிலுக்கு வெளியே கொண்டு வந்து அவளது நகரின் மனிதர் அவளைக் கல்லால் எறிவர். அவளும் சாவாள்.*

*ஏனெனில், அவள் தன் தந்தையின் வீட்டிலிருக்கும் போதே வேசித்தனம் பண்ணி இஸ்ரயேலுக்கு இழுக்கானதைச் செய்தாள். இவ்வாறு தீமையை உன்னிடமிருந்து அகற்று. (உபாகமம் 22:13-21)*

*ஒரு பெண் நடத்தைக் கெட்டவளா ஒழுக்கமுள்ளவளா என்பதை நிரூபிப்பதற்கும்; நல்லவளா கெட்டவளா என்பதை தீர்மானித்து தண்டனைபெற்று கொடுப்பதற்கும் அவளிடமிருந்து விவாகரத்து பெற்றுக் கொள்வதற்கும் முதலிரவில் விரிக்கப்படும் துணி முக்கிய சாட்சியாக கணிக்கப்படுகிறது.*

*ஊரார் முன்னிலையில் ஒரு பெண்ணின் மானமும் மரியாதையும் ஏலம் போடும் அசிங்கத்தையே இங்கு காண முடிகிறது. முதலிரவில் விரிக்கப்பட்ட துணியே ஒரு பெண்ணின் கற்பையும் வாழ்வையும் தீர்மானிக்கும் என்று பைபிள் சாட்சி சொல்கிறது. இது விஞ்ஞானமா? அஞ்ஞானமா? பெண்களைக் கேவலப்படுத்த இதைவிட வேறு வார்த்தைகள் தேவையா?.*

ஒரு பெண் பருவவயதை அடையமுன் அல்லது அடைந்த பின் ஓடிஆடி விளையாடும் போது வீட்டு வேலைகளில் ஈடுபடும் போது உடற்பயிற்சி செய்யும் போது அல்லது தொழில் புரியும் போது அவளது 'கன்னித்திரை'' கிழிவதற்கு அதிக வாய்ப்புள்ள நிலையில் திருமணம் முடித்த முதலிரவில் அவளது கன்னித்திரை கிழிந்து இரத்தம் கசிவதன் மூலமாகத்தான் 'கற்புள்ள பெண்'' என்று நிரூபிக்கப்படவேண்டும் என்று கூறுவதை சாதாரண அறிவு படைத்த மனிதன் கூட ஏற்றுக் கொள்ள மாட்டான்.

ஒருபெண் தனது வீட்டுக்குள்ளேயே அடங்கி ஒடுங்கி பத்தினித்தனமாக ஒழுக்கமுள்ளவளாக நாணமுள்ளவளாக வாழ்ந்தாலும் முதல் இரவில் இரத்தத்தின் அடையாளம் காணப்படவில்லையாயின் அவள் ஒழுக்கம் கெட்ட பெண் வேசித்தனம் பண்ணிய பெண் என்று சொல்வது அவளது பெற்றோரையும் சந்தேகப் பார்வையைக் கொண்டு பார்க்கவைக்கின்றது.

பைபிளின் போதனைப் பிரகாரம் கற்புள்ள பெண்ணைத் தேர்ந்தெடுக்க முதலிரவு பரிசோதனையில் அவள் ஈடுபட்டாகவேண்டும். எப்பெண்ணிடம் இரத்தத்தின் அடையாளம் தெரிகிறதோ அவள் கற்புள்ள பெண். எவளிடம் அவ்வடையாளம் தென்படவில்லையோ அவள் கற்பிழந்த பெண்.

வேறு வார்த்தையில் சொன்னால் அவள் ஒரு விபச்சாரி. விபச்சாரத்தில் ஈடுபட்டால் மட்டும் விபச்சாரியல்ல. முதலிரவு பரிசோதனையில் தோல்வியடைந்தாலும் விபச்சாரிதான்.

எனவே விபச்சாரிக்கான தண்டனையை அவளுக்கு நிறைவேற்ற கல்லெறிந்து கொல்லவேண்டும். அவளுடன் இப்பிரச்சினை முடியாது. அப்பெண் 'வேசிப் பெண்'' என்ற பெயரைப் பெற்றதும் அவளது குடும்பமும் 'அந்த சமாச்சாரத்தின் வீடு'' என்று பெயர் பெற்றுவிடும். ஊராரின் ஓரக் கண்பார்வைக்கு ஆளாகிவிடும்.

பெண்கள் தங்களது மானத்தை, மரியாதையை கற்பை காக்க வேண்டுமானால், இப்பரிசோதனைக்கு ஏதாவது ஒரு வழி பண்ணியாக வேண்டுமானால் 'கன்னியாஸ்திரிகளாக'' தேவாலயத்தில் தஞ்சம் புகுந்தாக வேண்டும். அல்லது வாளா வெட்டியாக இருந்தாக வேண்டும். கிறிஸ்தவ மற்றும் யூத பெண்கள் இவ்விரண்டில் ஒன்றை தேர்ந்தெடுத்தே ஆக வேண்டும் அல்லது இப்போதனைகளை விலக்கி விட்டு வாழவேண்டும்.

கணவன் மனைவியின் மீது வீண்பழியை சுமத்த நினைத்தால் அல்லது பிரிந்துபோக முடிவுசெய்தால் 'இந்த இரத்தப்பரிசோதனை'' முறை அவனுக்கு கைகொடுக்கும்.

விசாரணையின் போது இரத்தம் தோய்ந்த துணியைக் மனைவி ஆதாரமாக எடுத்துக்காட்டி தான் நடத்தைக் கெட்டவளல்ல என நிரூபிக்கும் பட்சத்தில் கணவனுக்கு எந்தத் தண்டனையும் வழங்காமல் அபராதம் மட்டும் விதிக்கப்பட்டு விடுவிக்கப்படுகின்றான்.

அதுமட்டுமன்றி அபாண்டம் சுமத்தப்பட்ட அப்பெண்ணும் அக்கணவனோடு சேர்ந்து வாழ வேண்டும். அவன் ஒரு போதும் அவளை விவாகரத்து செய்யவும்; கூடாது.

ஊரார் முன்னிலையில் களங்கம் சுமத்தப்பட்டு, பிறகு நிரபராதி என்று விடுதலை செய்யப்;படும் அப்பெண்ணின் சம்மதமில்லாமல் மீண்டும் அக்கொடியவனுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று தீர்வு சொல்வது நீதியாகுமா? என்று கேட்டால் அது தான் நீதி என வேதாகமம் சொல்கிறது!

‘தகுந்த சாட்சியத்தின் படி நீ குற்றமற்றவள் என்று நிரூபணமாகிறது. எனவே நீ விரும்பினால் கணவனுடன் சேர்ந்து வாழலாம் அல்லது பிரிந்து போகலாம் என்று தீர்வு கூறப்பட்டால் பெண்ணுக்கு ஆறுதலாக இருக்கும். நீதியாக இருக்கும். அவளது வாழ்க்கைப்பிரச்சினையை முடிவு செய்ய வேண்டிய பொறுப்பு அவளிடம் உள்ளதே தவிர மூன்றாம் தரப்பிடம் இல்லை.

நீதி சொல்வதாக இருந்தால் பாதிக்கப்பட்ட பெண்ணின் விருப்பத்திற்கு முதலிடம் கொடுத்து அவளது சம்மதத்துடன் தான் தீர்ப்புச் சொல்ல வேண்டும். அவள் முடிவுசெய்ய வேண்டிய வாழ்வை இன்னுமொருவர் முடிவுசெய்வது பெண்ணுக்கு இழைக்கப்பட்ட துரோகமேயன்றி வேறில்லை.

களங்கமற்ற அப்பெண் ஊருக்கும் உலகத்திற்கும் காட்டுவதற்கு தன் கணவனோடு வாழ்க்கைப்படுவாளே தவிர சந்தோசமான இன்பகரமான வாழ்க்கைக்கு அவள் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளமாட்டாள். வேண்டாத உறவை வேண்டுமென்று திணிக்கிறது பைபிள்.

இந்நிகழ்வுக்குப் பின் கணவனோ சந்தோசமாக ‘ஜாலியாக’’ ஊர் சுற்றிக் கொண்டிருப்பான். மனைவியோ தீயில்வெந்த புழுவைப் போல் துடிதுடித்தவளாக வாழ்நாள் முழுவதும் கண்ணீரோடு காலத்தை கழித்துக் கொண்டிருப்பாள். இச்சட்டம் பெண்ணின் கற்போடு மட்டும் விளையாட வில்லை. அவளுடைய வாழ்க்கையோடும் விளையாடும் ஒரு விபரீதமான விளையாட்டு.

ஒவ்வோர் ஆணும் தங்களுடைய கண்ணித்தன்மையை முதலிரவில்

நிரூபித்து காட்டவேண்டும்; என்று பெண்கள் கேட்டால் யூத கிறிஸ்தவ மதகுருமார்களால் பதில் சொல்;ல முடியுமா? உண்மை என்னவென்றால் தப்பு செய்யும் ஆண்களைக் காப்பாற்றுவதிலும் அப்பாவி பெண்களைக் குற்றம் பிடிப்பதிலும் பைபிள் உரிய கவனம் செலுத்தியுள்ளதாக தெரிகிறது. முதலிரவு பரிசோதனைக்கு அடுத்து இன்னுமொரு பரிசோதனை முறையையும் பைபிள் விபரிக்கிறது.

மனைவி கணவனுக்கு துரோகம் இழைத்ததாக -வேறொருவனுடன் உடலுறவு கொண்டதாக- கணவன் சந்தேகம் கொண்டால் அச்சந்தேகத்தை போக்கும் முகமாக மனைவியை கசப்பு நீர் பரிசோதனைக்கு உட்படுத்தி தீர்வு காணவேண்டும் என பைபிள் பின்வருமாறு கூறுகிறது.

‘அவன் தன் மனைவியை குருவின் முன் கொண்டு வரவேண்டும். அவளை முன்னிட்டுத் தேவைப்படும் பத்தில் ஒரு ஏப்பா வாற்கோதுமை உணவைப் படைக்க வேண்டும். அவன் அதன் மேல் எண்ணெய் ஊற்றவோ தூபப்பொருள்கள் தூவவோ கூடாது. ஏனெனில் அது நினைவுபடுத்தும் உணவுப் படையல் அதாவது குற்றத்தை நினைவூட்டக்கூடிய சினத்தின் உணவுப் படையல். பின் குரு அவளைக் கூட்டிக் கொண்டு வந்து ஆண்டவர் முன் நிறுத்துவார்;

குரு ஒரு மண்பாத்திரத்தில் புனிதநீர் எடுத்து திருக் கூடாரத்தின்; தரையில் இருந்து கொஞ்சம் துகள் (தூசியை) எடுத்து நீரில் போடுவார்.

குரு அப்பெண்ணின் தலைமுடியைக் கலைத்துவிட்டு வெஞ் சினத்தின் உணவுப் படையலாகிய நினைவுபடுத்தும் உணவுப் படையலை அவள் கைகளில் வைப்பார் சாபத்தைக் கொண்டு வரும் கசப்பு நீரையும் குரு தன் கையில் வைத்திருப்பார்.

அதன் பின்னர் குரு அவளை ஆணையிடச் சொல்லிக் கூற வேண்டியது; நீ உன் கணவனின் அதிகாரத்துக்கு உட்பட்டிருக்கும்போது வேறு எந்த மனிதனும் உன்னோடு படுக்காமலும் நீ ஒழுக்கக் கேட்டுக்கு உடன் படாமலுமிருந்தால் சாபங்களைக் கொண்டு வரும் இக்கசப்பு நீர் உன்னை ஒன்றுஞ் செய்யாது; ஆனால் நீ உன் கணவனின் அதிகாரத்திற்கு உட்பட்டிருந்;தும் நெறி தவறி, உன்னையே கறைப்படுத்தி, உன் கணவன் தவிர வேறொருவன் உன்னோடு படுத்திருக்க உடன்பட்டால், குரு அப்பெண்ணைச் சாப ஆணை இடச் சொல்லி அவளிடம், ஆண்டவர் உன் தொடைகள் அழுகிவிழவும் உன் வயிறு வீங்கவும் செய்து உன் மக்களிடையே உன்னை ஒரு சாபமாகவும் ஆணைக்கூற்றாகவும் ஆக்குவார்;

சாபத்தைக் கொண்டு வரும் இந்த நீர் உன்குடல்களில் இறங்கி உன் வயிற்றை வீங்கச் செய்து உன் தொடைகளை அழுகி விழச் செய்யட்டும் என்பார் அதற்கு அப்பெண் 'ஆமென் ஆமென்'' என்பாள்.

பின்னர் குரு இச்சாபங்களை ஓர் ஏட்டில் எழுதிக் கசப்பு நீரால் அவற்றை அழித்து விடுவார். சாபத்தைக் கொண்டு வரும் அக்கசப்பு நீரை அப்பெண் குடிக்கச்செய்வார். சாபத்தைக் கொண்டு வரும் அந்நீர் அவளுக்குள் சென்று கொடிய வேதனையை உண்டாக்கும்.

குரு வெஞ்சினத்தின் உணவுப் படையலைப் பெண்ணின் கையிலிருந்து வாங்கி அதை ஆண்டவர் முன்னிலையில் ஆரத்தியாகக் காட்டிப் பலிபீடத்துக்குக் கொண்டு வருவார்.

குரு அந்த உணவுப் படையலிலிருந்து அதன் நினைவுப் பகுதியாக ஒரு கைப்பிடி எடுத்து அதனைப் பீடத்தின் மேல் எரித்து விடுவார்; இறுதியாக அப்பெண் அந்நீரைக் குடிக்கச் செய்வான்.

அவன் அவளை நீர் குடிக்கச் செய்யும்போது அவள் உண்மையிலேயே தன்னைக் கறைப்படுத்தித் தன் கணவனுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்திருந்தால் சாபத்தைக் கொண்டு வரும் நீர் அவளுக்குள் போய் கொடிய வேதனையை உண்டாக்கும்; அவள் வயிறு வீங்கி, தொடைகள் அழுகிவிடும்; அவள் தன் மக்களிடையே ஒரு சாபமாக இருப்பாள்.

ஆனால் அப்பெண் கறைபடாது தூயவளாயிருந்தால் அவளுக்கு ஒரு கேடும் வராது; அவள் குழந்தையைக் கருத்தரிப்பாள்.

வெஞ்சினத்தின் வேளைகளில் இதுவே சட்டம்; அதாவது ஒரு மனைவி தன் கணவனின் அதிகாரத்திற்கு உட்பட்டிருந்தும் நெறிதவறித் தன்னையே கறைபடுத்தியிருந்தால், அல்லது வெஞ்சினத்தின் ஆவி ஒரு மனிதன் மேல் வந்து அவன் தன் மனைவி மேல் வெகுண்டெழுந்தால் அவன் அவளை ஆண்டவர் திருமுன் நிறுத்துவான்; குரு இச்சட்டத்தையெல்லாம் அவளிடம் செயல் படுத்துவார். ஆடவன் (கணவன்) தன் குற்றப்பழி அற்றவனாவான்; பெண்ணோ தன் குற்றப்பழியைச் சுமப்பாள் (எண்ணாகமம் .5:11-31.)

மனைவி மீது கணவன் சந்தேகம் கொண்டதற்காக ஊரார் முன்னிலையில் கசப்பு நீர் பரிசோதனை நடாத்துவது போல் கணவனுடைய நடத்தையிலும் சந்தேகம் கொள்ளும் மனைவிக்காக பரிசோதனை செய்யாமல் விடுவது ஏன்? ஆண்களுக்கும் இது போன்ற சட்டங்களை சொல்லாமல் விட்டது ஏன்?

மனைவி மீது சந்தேகம் கொண்;டு கசப்பு நீர் பரிசோதனை நடாத்துவதன் மூலம் குற்றத்தை நிரூபிக்க முடியுமாக இருந்தால் இன்றைய உலகில் தேங்கிகிடக்கும் இத்தகைய வழக்குகளை இப்பரிசோதனைகள் மூலம்; நடாத்தி முடிக்கலாமே. விளம்பரப்படுத்தி ஆசிர்வாத கூட்டங்களை நடாத்துவது போல் கசப்புநீர்; பரிசோதனை கூட்டங்களையும் தெருதெருவாக நடாத்தி குடும்ப வாழ்வை பாதுகாக்கலாமே. மதகுருமார்கள் முன்வராதது ஏன்?

இன்று கிறிஸ்தவ மதகுருமார்கள் மீதும் சிறுவர் மற்றும் பெண்கள் பாலியல் துஷ்பிரயோகள் கற்பழிப்பு குற்றங்கள் வெளிப்படையாக சுமத்தப்பட்டதையடுத்து ஆலயங்கள் ஆட்டம் கண்டு நின்றன. தலை குனிவை சந்தித்து வருகின்றன. மதகுருமார்களால் ஆயர்களால் பாதிக்கப் பட்டடவர்கள் கற்பை பறிகொடுத்த கன்னியாஸ்திரிகள் இக்குற்றச் சாட்டுக் களை முன்வைக்கிறார்கள். இக்குற்றச்சாட்டுகளுக்கு கசப்பு நீர் பரிசோதனைகள் மூலம்தீர்வு கொண்டு வரலாமே. கிறிஸ்தவ ஆன்மீக தலைமைபீடங்கள் மௌனம் காப்பது ஏன்?

மதகுருமார்கள்; ஆயர்கள் குற்றவாளிகள் என அடையாளம் கண்ட பின்பும் வேதாகமத்தின் பிரகாரம் கல்லெறிந்து தண்டனை வழங்காமல் தப்பிக்கவிடுவது ஏன்?

மனைவியுடைய பரிசுத்த தன்மையை மட்டும் பரிசீலித்து வேலி போடமுனையும் பைபிள், ஆண்களின் விஷயத்தில் எத்தகைய கட்டுப் பாட்டையும் கவனத்தில் எடுக்கவில்லை எடுக்கவும் மாட்டாது என்பதற்கு இன்னுமொரு சான்றைப் பாருங்கள்.

‘அன்றொரு நாள் தாவீது நண்பகலுக்குப் பின் தன் படுக்கையினின்று எழுந்து அரண்மனை மாடியில் உலாவுகையில், அவருக்கு எதிரே தம் மேல்மாடியில் குளித்துக் கொண்டிருந்த ஒரு பெண்ணைக் கண்டார். அப்பெண் மிகவும் அழகாக இருந்தாள்.

அப்பொழுது அரசர் அப்பெண் யார் என்று விசாரிக்க ஆள் அனுப்பி, அவள் எலியாமின் மகளும் ஏத்தையனான உரியாசின் மனைவியுமான பெத்சாபே என்று அறிந்து கொண்டார். பின்னர் தாவீது ஆள் அனுப்பி அவளை வரவழைத்தார். அவள் அவரிடம் வந்த போது அரசர் அவளோடு படுத்தார். பிறகு அவள் தன் தீட்டு நீங்கத் தன்னைத் தூய்மைப்படுத்தினாள்.

கருவுற்றவளாய்த் தன் வீடு திரும்பிய பின், தான் கருவுற்றிருப்பதாகத் தாவீதுக்கு அறிவிக்கும்படி ஆள் அனுப்பினாள்.

அப்போது தாவீது யோவாபிடம் ஆள் அனுப்பி ‘ஏத்தையனான உரியாசை என்னிடம் அனுப்பிவை’’ என்று சொன்னார். அப்படியே யோவாப் ஏத்தையனான உரியாசைத் தாவீதிடம் அனுப்பி வைத்தான்.

உரியாசு தாவீதிடம் வந்த போது, அவர் அவனை நோக்கி, ‘யோவாபும் மக்களும் நலமாய் இருக்கிறார்களா? போர் எவ்வாறு நடந்து வருகிறது?’’ என்று விசாரித்தார்.

பிறகு தாவீது உரியாசை நோக்கி, ‘உன் இல்லத்திற்குப் போய் உன் கால்களைக் கழுவு’’ என்றார். உரியாசு அரண் மனையிலிருந்து புறப்பட்ட போது, அரச உணவு அவனுக்குப் பின்னால் அனுப்பப்பட்டது.

உரியாசோ தன் இல்லத்திற்குப் போகாமல் தன் தலைவரின் மற்ற ஊழியர்களோடு அரண்மனை வாயிலில் படுத்துக் கொண்டான்.

உரியாசு தன் இல்லத்திற்குச் செல்லவில்லை என்று தாவீதுக்கு அறிவிக்கப்பட்டபோது, தாவீது உரியாசை நோக்கி, ‘நீ பயணத்திலிருந்து வந்தவனல்லவா? நீ உன் வீட்டுக்குப் போகாதது ஏன்?’’ என்று கேட்டார்.

உரியாசு தாவீதைப் பார்த்து, ‘கடவுள் பேழையும் இஸ்ராயேலும் யூதாவும் கூடாரங்களில் இருக்க, என் தலைவன் யோவாபும் என் அரசரின் சேவகரும் வெளியே தங்கியிருக்க, நான் உண்ணவும் குடிக்கவும், என் மனைவியுடன் படுக்கவும் என் வீட்டிற்குள் போவேனோ? உம்மேலும் உம் உயிர்மேலும் ஆணை! நான் அப்படிச் செய்யவே மாட்டேன்’’ என்றான்.

அப்போது தாவீது உரியாசை நோக்கி, ‘இன்றும் நீ இங்கேயே இரு; நாளை நான் உன்னை அனுப்பி வைப்பேன்’’ என்றார். அப்படியே உரியாசு அன்றும் மறுநாளும் யெருசலேமில் தங்கி இருந்தான்.

தாவீது அவனைத் தன் முன்னிலையில் உண்ணவும் குடிக்கவும் அழைத்து அவனுக்குப் போதை ஊட்டினார். ஆயினும் அவன் தன் வீட்டுக்குப் போகாமல் மாலையிலேயே வெளியே போய் அரசரின் சேவகரோடு தன் படுக்கையில் தூங்கினான்.

காலையில் தாவீது யோவாபுக்கு ஒரு கடிதம் எழுதி, அதை உரியாசின் கையில் கொடுத்து அனுப்பினார்.

அக்கடிதத்தில், ‘போர் கடுமையாக நடக்கும் இடத்தில் உரியாசை நீர் படை முகத்தில் நிறுத்தி அவன் வெட்டுண்டு சாகும்படி விட்டுவிடும்’’ என்று எழுதப்பட்டிருந்தது.

அவ்வாறு யோவாப் நகரை முற்றுகையிடுகையில் மிக்க ஆற்றல் வாய்ந்த வீரர்கள் இருக்கிறார்கள் என்று தான் அறிந்திருந்த இடத்தில் உரியாசை நிறுத்தினான்.

வீரர் நகரிலிருந்து வெளிப்போந்து யோவாபோடு போரிட்ட போது தாவீதின் வீரருள் பலர் விழுந்து மடிந்தனர். ஏத்தையனாகிய உரியாசும் இறந்தான். *(2சாமுவேல் 11:2-17)*

உரியாசின் மனைவி தன் கணவர் இறந்துவிட்டதைக் கேள்வியுற்று அவருக்காகப் புலம்பி அழுதாள். துக்ககாலம் முடிந்ததும் தாவீது ஆளனுப்பி அவளைத் தம்வீட்டுக்கு கொண்டு வந்தார். அவள் அவருக்கு மனைவியாகி ஆண்குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தாள்... *(2சாமுவேல் 11:26 -27)* .

ஓர் அன்னிய பெண் குளிப்பதைக் கண்டால் உடனே அந்த இடத்தை விட்டு அகன்று விடுவது தான் நாகரீகம். சாதாரண மனிதனுக்கு தெரிந்த இந்நாகரீகம் மன்னரும் தீர்க்கதரிசியுமான தாவீதுக்கு தெரியாமல் போய்யுள்ளது. குளித்துக் கொண்டிருக்கும் அப்பெண்ணை பார்த்தது மட்டுமல்லாமல் அவள் அழகில் மதிமயங்கி அவள் பற்றிய முழு விபரங்களை சேகரித்துக் கொள்கிறார்.

அவள் மணம் முடித்த பெண். அவள் கணவன் உரியாசு என்பவன் நாட்டின் பாதுகாப்பு படையின் சிப்பாய்யாக உள்ளான் என்பதை அறிந்த பின்பும் அதிகார நிலையில் அவளை அரண்மனைக்கு வரவழைத்து உறவு கொள்கிறார். அவளும் கர்ப்பமடைகிறாள். கருவுற்றிருப்பதைக் குறித்து மன்னருக்கு சொல்லி அனுப்புகிறாள். உடனே மன்னர் அவளது கணவன் உரியாசை வளைத்துப் போட்டு சமாளிக்கப் பார்க்கிறார். தனது கையினாலே உணவுபரிமாறி மது குடிக்கக் கொடுத்து போதையூட்டி அன்பளிப்புகள் வழங்கி ராஜமரியாதையுடன் கவனித்து விட்டு மனைவியுடன் சேர்ந்து வாழுமாறு கூறி வீட்டுக்கு அனுப்பிவைக்கிறர். ஆனால் உரியாசு வீட்டுக்கு போவதில்லை என்பதை அறிந்ததும் அவனை தீர்த்துக்கட்ட முடிவுசெய்கிறார்.

உரியாசு, நாட்டுக்கும் நாட்டு மன்னனுக்கும் விசுவாசமாக உள்ள ஒரு போர் வீரன். போருக்கு அவனை அனுப்பிவைத்து கடுமையாக போர் நடக்கும் சமயத்தில் களத்தில் முன்னணியில் நிறுத்திவைத்து வெட்டுண்டு போகும் படிக்கு தளபதிக்கு கடிதம் எழுதி அக்கடிதத்தை உரியாசிடமே கொடுத்து அனுப்புகிறார். எதுவும் அறியாத உரியாசு அக்கடிதத்தை

தளபதியிடம் ஒப்படைக்க தளபதியும் காரியத்தை கச்சிதமாக முடித்து விடுகிறார். அதன் பின் உரியாசின்; மனைவியை தாவீத் சொந்தப் படுத்திக் கொள்கிறார். ஒரு தீர்க்கதரிசி செய்கின்ற காரியமா இது?

அநியாயமாக ஓர் உயிரை கொன்று அடுத்தவன் மனைவியை சூரையாடிய மன்னரும் தீர்க்தரிசியுமான தாவீதுக்கு எந்த தண்டனையும் எவரும் கொடுக்கவில்லை. ஏன் கர்த்தர் கூட கொடுக்கவில்லை. கர்த்தரின் பார்வையில் தீய காரியமாக மட்டுமே இது தெரிந்திருக்கிறது. ஒளிவு மறைவு இல்லாமல் அதிகாரபலத்துடன் நடந்த இப்பாவத்திற்கு எவ்வித கசப்புநீர் பரிசோதனையுமில்லை. கல்லடி தண்டனையுமில்லை. பஞ்சாயத்து விசாரணையுமில்லை. மாறாக, தாவீதின் கள்ள உறவு மூலமாக பிறந்த குழந்தையை கர்த்தர் சாகடித்து விடுகிறார். எப்பாவமும் அறியாத பச்சிளம் குழந்தை தண்டனைக்கு ஆளாகிறது. இதுவே தாவீதுக்கு வழங்கப்பட்ட தண்டனை என கூறப்படுகிறது. (பார்க்க.2 சாமு வேல்12:13-20) இதுதான் தேவநீதியா? அல்லது வேத புத்தகமா?

இன்னுமொரு தீர்க்கதரிசியின் கதையை பாருங்கள். ‘சால மோனுக்கு எழுநூறு அரசகுலப் பெண்கள் மனைவியர்களாகவும் முந்நூறு பெண்கள் வைப்பாட்டிகளாகவும் இருந்தார்கள். அப்பெண்கள் அவரது இதயத்தைத் தவறான வழியில் திருப்பி விட்டார்கள்.(1ம் அரசர் 11:3.)

ஒருவனுக்கு சட்டப்பூர்வமாக எத்தனை மனைவியும் இருக்கலாம். ஆனால் சட்டத்திற்கு புறம்பாக ஒரு வைப்பாட்டிக் கூட இருக்கக் கூடாது.

வேலியே பயிரை மேய்வது போல் பாவங்களுக்கும் அசிங்கங்களுக்கும் முன்னோடிகளாக தீர்க்கதரிசிகள் ஆக்கப்பட்டிருக்கும் போது சாதாரண மனிதர்களின் நிலையை கேட்கவும் வேண்டுமா? ஆண்கள் புரியும் இத்தனை பாவங்களையும் பைபிள் கண்டு கொள்ளாத அதே நேரம் ஒரு பெண் தவறினாலோ அல்லது தவறியதாக சந்தேகம் கொண்டாலோ அவளுக்குரிய உச்சக்கட்ட தண்டனையை கூறி அமுல்படுத்தி அசிங்கப் படுத்துகிறது.

கற்பழிக்கப்பட்ட பெண்ணின் விடயத்திலும் பைபிள் இதேபோன்று விபரீதமான ஒரு தீர்வை பின்வருமாறு கூறுகிறது.

‘மணமாகாத ஒரு கன்னிப் பெண்ணை ஒருவன் கண்டு அவளைப் பலவந்தப்படுத்தி அவளோடு உறவு கொண்டது கண்டு பிடிக்கப்பட்டால் அப்பெண்ணின் தந்தைக்கு அவளோடு உறவு கொண்டவன் ஐம்பது வெள்ளிக் காசுகள் தரவேண்டும். அவன் அவளைக் கெடுத்துவிட்டதால்

அவளை மனைவியாக்கிக் கொள்ள வேண்டும். அவன் வாழ்நாள் முழுவதும் அவளை மணமுறிவு செய்ய முடியாது. *(உபகாமம்: 22:29)*

கன்னிப் பெண்ணை அடைய விரும்பும் ஆணுக்கு அப்பெண்ணின் சம்மதம் கிடைக்காத போது அவளை பலாத்காரம் பண்ணிவிட்டால் தானாகவே அடைந்து கொள்ள முடியும் என்று ஆண்களுக்கு *(Leagal Points)* கொடுத்து நற்போதனை செய்கிறது பைபிள் என்று சொல்வதில் தவறாகுமா?

கற்பை பறிகொடுத்த பெண்ணுக்கு கிடைக்கும் நீதி அக்காமுகனை மணம் முடிப்பது. காமுகனுக்குக் கிடைக்கும் தண்டனை கற்பழித்த பெண்ணை மனைவியாக்கிக் கொள்வது என்ன அற்புதமான தீர்ப்பு!

அதேவேளை முதலிரவின் போது மனைவியிடமிருந்து இரத்தம் கசியாத காரணத்தால் அவளை கற்பிழந்த பெண் என்று குற்றம் சுமத்தி கல்லெறிந்து கொல்லுமாறு கட்டளையிட்டுகிறது. பாவம் ஒரு பக்கம் பழி இன்னுமொரு பக்கம். பாதிக்கப்பட்டு நிற்பதோ ஒன்றுமறியாத அபலைப் பெண்கள்தான்.

இதுதான் பைபிள் வழங்கும் பெண்ணுரிமையா? பைபிளுக்குச் சொந்தம் கொண்டாடும் மக்கள் இந்த அவலத்தைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

*(தீர்க்கதரிசிகளான தாவீத் மற்றும் சாலமோன் ஆகியோர் நற்பண்பு உள்ளவர்கள் என்று அல்குர்ஆன் கூறுகிறதே தவிர கெட்ட நடத்தையுள்ள தீய குணமுடையவர்களாக போதிக்கவில்லை என்பது இங்கே குறிப்பிடத் தக்கது.)*

## இஸ்லாத்தின் பார்வையில்

இஸ்லாமிய மார்க்கத்தைப் பொறுத்த வரையில் மனைவி நடத்தை கெட்டவள் அல்லது கற்பிழந்தவள் என்று கணவன் குற்றம் சுமத்தும் போது அக்குற்றத்தை நிரூபிக்கக் கூடிய சாட்சிகளைக் கொண்டு வரவேண்டும் என கட்டளையிடுகிறது.

முதலிரவில் அவளோடு உறவு கொண்டவேளை கன்னித் தன்மையை நிரூபிக்கக்கூடியதாக அவளிடமிருந்து இரத்தம் கசியவில்லை. அதனால் அவள் நடத்தை கெட்ட பெண் என்று கணவன் சொன்னால் அக்குற்றச்சாட்டை இஸ்லாம் ஏற்காது.

காரணம் இது அறிவுக்குப் பொருத்தமற்ற வாதம். உடலுறவின் போது பெண்களிடமிருந்து இரத்தம் கசியலாம் கசியாமலுமிருக்கலாம். பெண்களின் உடல் அமைப்பைப் பொறுத்து இது நடைபெறும். எனவே இக்குற்றச்சாட்டு அபத்தமானதாகும்.

பெண்ணின் மர்ம உறுப்பில் காணப்படுகிற மெல்லிய தோல் ஹைமன் (Hymen) எனக்கூறப்படுகிறது. விளையாட்டு உடற் பயிறச்சி அல்லது கடின வேலைகள் போன்ற சந்தர்ப்பங்களில் இத்தோல் பகுதி விரிவடையலாம் அல்லது கிழிந்து விடலாம். அப்போது இலேசாக இரத்தம் வெளிவரும். முதன் முறையான உடலுறவின் போது கூட இத்தோல் கிழிந்து விடலாம். ஒவ்வொரு பெண்ணுக்கும் இந்த ஹைமன் வித்தியாசப்படலாம்.

ஒருவரது சந்தேகத்தை மாத்திரம் வைத்து இஸ்லாம் தீர்ப்பளிக்காது. அந்த சந்தேகத்தை உறுதிப்படுத்த தகுந்த சாட்சிகளைக் கொண்டுவர வேண்டும். சாட்சிகள் முன்னிறுத்தப்படும் பட்சத்தில் விசாரித்த பின் தீர்ப்பு வழங்கும்.

எந்தவொரு பெண்ணாவது கற்பை இழந்துவிட்டாள், அல்லது கள்ளத் தொடர்பை வைத்துக் கொண்டுள்ளாள், அல்லது விபச்சாரத்தில் ஈடுபட்டு விட்டாள் என்று குற்றம் சுமத்தப்படுவதாக இருந்தால் அதற்காக நேரில் கண்ட நான்;கு சாட்சிகளைக் கொண்டு வருமாறு இஸ்லாம் கட்டளையிடுகிறது. நான்கு சாட்சிகளைக் கொண்டுவராது விட்டால் அக்குற்றச்சாட்டு தள்ளுபடி செய்யப்படுவதோடு அது அவதூற்றுக் குற்றமாகக் கருதப்பட்டு அக்குற்றத்தைச் சுமத்தியவருக்கு 80கசையடிகள் வழங்கப்படுவதோடு அவரது சாட்சிகள் எதுவும் இதற்குப் பின் ஏற்றுக் கொள்ளப்படவும் மாட்டாது.

‘எவர்கள் கற்பொழுக்கமுள்ள பெண்கள் மீது அவதூறு கூறி, பின்னர் நான்கு சாட்சிகளைக் கொண்டு வரவில்லையோ அவர்களுக்கு எண்பது கசையடி அடியுங்கள். மேலும் (இதன்பின்) ஒருபோதும் அவர்களது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ளாதீர்கள். இன்னும் அவர்கள் தான் பாவிகள். (அல்குர்ஆன் 24:4)

‘நிச்சயமாக எவர்கள் இறை நம்பிக்கையாளர்களான களங்கமற்ற கற்பொழுக்கமுள்ள பெண்கள் மீது அவதூறு கூறுகிறார்களோ அவர்;கள் இம்மையிலும் மறுமையிலும் சபிக்கப்பட்டுவிட்டனர். அவர்களுக்குக் கடுமையான வேதனை உண்டு’’. (அல்குர்ஆன் 24:23)

பெண்களின் மானத்தோடு மரியாதையோடு விளையாடுவதையும்

அவர்களது கற்பின் மீது களங்கம் சுமத்துவதையும் இஸ்லாம் பெரும்பாவமாகக் பிரகடனப்படுத்துகிறது.

'பேரழிவை ஏற்படுத்தும் ஏழுபெரும் பாவங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் என நபி முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது மக்கள், அல்லாஹ்வின் தூதரே! அவை யாவை என்று கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள்:

1) அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பது

2) சூனியம் செய்வது

3) முறையற்ற முறையில் அல்லாஹ் புனிதப்படுத்திய உயிரைக் கொல்வது.

4) வட்டி உண்பது

5) அனாதைகளின் சொத்துக்களை உண்பது

6) போரின்போது புறமுதுகு காட்டி ஓடுவது

7) இறை நம்பிக்கை கொண்ட பத்தினிப் பெண்கள் மீது அவதூறு கூறுவது என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரழி) (புகாரி: 6857, 2766, முஸ்லிம் 89)

இஸ்லாத்தைத் தழுவ வருபவரிடம் 'பெரும் பாவமான அவதூறு சொல்லமாட்டேன்'' என்று சத்தியம் செய்து தர வேண்டும் என்று நபி முஹம்மது (ஸல்) அவர்கள் உறுதிமொழி வாங்குவார்கள்.

நான் ஒரு குழுவினருடன் நபி முஹம்மது (ஸல்) அவர்களிடம் சென்று இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதாக உறுதி மொழியளித்தேன். அப்போது நபி (ஸல்) அவர்கள் 'அல்லாஹ்வுக்கு நீங்கள் எதையும் இணையாக்குவதில்லை;, திருடுவதில்லை,; குழந்தைகளைக் கொல்வ தில்லை,; உங்களிடையே அவதூறு கற்பித்து அதைப் பரப்புவதில்லை,; எந்த நற்செயலிலும் எனக்கு மாறு செய்வதில்லை'' என்று உங்களிடம் உறுதிமொழி வாங்குகிறேன் என்று கூறினார்கள். அறிவிப்பவர்: உபாதத் இப்னு ஸாமித் (ரழி) (நூல்: புகாரி 6801).

ஆண்களிடம் இவ்வாறு உறுதிமொழி எடுப்பது போலவே பெண்களிடமும் உறுதிமொழி வாங்கினார்கள்.

'நபியே! இறை நம்பிக்கை கொண்ட பெண்கள் உம்மிடம் வந்து

*அல்லாஹ்வுக்கு நாம் எதையும் இணைவைக்க மாட்டோம், திருட மாட்டோம், விபச்சாரம் செய்ய மாட்டோம், எமது குழந்தைகளைக் கொலை செய்ய மாட்டோம், நாங்கள் இட்டுக்கட்டி அவதூற்றை பரப்ப மாட்டோம், மேலும் நல்ல விடயத்தில் உமக்கு மாறு செய்ய மாட்டோம் என்றும் உறுதிமொழி கொடுத்தால் நீர் அவர்களிடம் உறுதிமொழி எடுப்பீராக. மேலும் அவர்களுக்காகப் பாவமன்னிப்புக் கோருவீராக. நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவன்; நிகரற்ற அன்புடையோன். (அல்குர்ஆன் 60:12)*

தன்னை முஸ்லிம் என்று பிரகடனப்படுத்திக் கொள்ளும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் இஸ்லாத்தின் இந்த அடிப்படைக் கொள்கையின் மீது உறுதியாக இருக்கவேண்டும். எனவே மணம் முடிக்காத ஆணோ பெண்ணோ விபச்சாரத்தில் ஈடுபட்டுவிட்டார் என்று கண்ணால் கண்ட நான்கு சாட்சிகளைக் கொண்டு நிரூபிக்கப்படும் பட்சத்தில் அவ்விருவருக்கும் நூறு கசையடிகள் கொடுக்கப்படுவதோடு நாடு கடத்தப் படுவார்கள். திருமணம் முடித்தவர்கள் விபச்சாரத்தில் ஈடுபட்டால் கல்லெறிந்து கொல்லப்;படுவர்.

*‘(திருமணம் முடிக்காத) விபச்சாரி, விபச்சாரன்; ஆகிய இருவரில் ஒவ்வொருவருக்கும் நூறு கசையடி அடியுங்கள். நீங்கள் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் விசுவாசம் கொள்வோராக இருந்தால் அல்லாஹ்வின் மார்க்கத்தில் அவ்விருவர் மீதும் உங்களுக்கு கருணை ஏற்பட வேண்டாம். அவ்விருவரின் தண்டனையை விசுவாசம் கொண்டோரில் ஒருசாரார் பார்த்துக் கொண்டிருக்கட்டும்.’’ (அல்குர்ஆன் 24:2)*

*‘இரண்டு பேர் அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்களிடம் ஒரு வழக்கைக் கொண்டு வந்தனர். அவர்களில் ஒருவர் அல்லாஹ்வின் வேதத்தைக் கொண்டு எங்களிடையே தீர்ப்பளியுங்கள் என்று கூற மற்றவரோ ஆம் அல்லாஹ்வின் தூதரே! எங்களிடையே அல்லாஹ்வின் வேதத்தைக்கொண்டு தீர்ப்பளியுங்கள் என்றார்.*

*பின்னர் முதலாவதாக பேசிய அந்த மனிதர் என்னைப் பேச அனுமதி அளியுங்கள் என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் ‘பேசுங்கள்’’ என்றார்கள். அவர், என் மகன் இவரிடம் கூலிக்காரனாக இருந்தான். அப்போது இவருடைய மனைவியுடன் விபச்சாரம் செய்து விட்டான். என் மகனைக் கல்லால் அடித்துக் கொல்ல வேண்டும் என்று மக்கள் என்னிடம் கூறினர். (இத்தண்டனைக்குப் பதிலாக) நூறு ஆடுகளையும் என்னுடைய அடிமைப் பெண்ணையும் பிணைத் தொகையாக வழங்கினேன்.*

பிறகு நான் அறிஞர்களிடம் விசாரித்த போது (திருமணம் முடிக்காத) என் மகனுக்கு நூறு கசையடிகளும் ஓராண்டு காலத்திற்கு நாடு கடத்தலும்தான் தண்டனையாகத் தரப்பட வேண்டும் என்றும் இந்த மனிதனின் மனைவி கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும் என்றும் என்னிடம் அவர்கள் தெரிவித்தார்கள் என்று சொன்னார்.

இதைக் கேட்ட அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள், என் உயிர் எவன் கையிலுள்ளதோ அந்த அல்லாஹ்வின் மீது சத்தியமாக! உங்கள் இருவருக்கிடையே நான் அல்லாஹ்வின் சட்டப்படியே தீர்ப்பளிக்கிறேன். உம்முடைய ஆடுகளும் உம்முடைய அடிமைப் பெண்ணும் உம்மிடமே திருப்பித்தரப்பட வேண்டும் என்று கூறிவிட்டு அவருடைய மகனுக்கு நூறு கசையடி வழங்கினார்கள்;. ஓராண்டு காலத்திற்கு நாடு கடத்தினார்கள். அங்கிருந்த உனைஸ் அல்அஸ்ஸமீ என்ற நபித்தோழரிடம் ‘உனைஸே! இந்த மனிதனின் மனைவியிடம் சென்று விசாரித்து அவள் (குற்றத்தை) ஒப்புக்கொண்டால் அவளுக்கு கல்லெறிந்து தண்டனை கொடுங்கள்” என்று சொன்னார்கள். அவ்வாறே உனைஸ் (ரழி)அவர்கள், அவளிடம் சென்று விசாரணை செய்த போது அவளும் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டாள். ஆகவே, அவளுக்கு உனைஸ் (ரழி) அவர்கள் கல்லெறிந்து தண்டனை வழங்கினார்கள். அறிவிப்பவர்: அபு ஹுரைரா (ரழி). (நூல்: புகாரி 6842, 6843, 6859)

மகன் செய்த குற்றத்திற்குத் தந்தை அபராதம் (பிணைத் தொகை) செலுத்தி விடுவித்துக் கொள்ள முனைந்தபோது அதனை நிராகரித்துவிட்டு சம்பந்தப்பட்ட இருவருக்கும் குற்றத்திற்குரிய தண்டனையை நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் நிறைவேற்றினார்கள்.

குற்றம் சாட்டப்பட்ட பெண்ணின் ஒப்புதல்வாக்கு மூலம் பெற்ற பின் அவளுக்குரிய தண்டனையை அமுல்நடாத்;தி சட்டத்தின் பிடியிலிருந்து யாரும் தப்பித்து விடமுடியாது என்பதைச் செயல்படுத்திக் காட்டினார்கள்.

சமூகச்சீரழிவை உண்டாக்கும் கொடிய குற்றங்களுக்கு உரிய தண்டனைகள் வழங்கப்பட வேண்டுமே தவிர அதிலிருந்து தப்பித்துக் கொள்ளும் வழியை அனுமதிக்கக்கூடாது. அனுமானத்தின் அடிப்படையிலான விசாரணைகளை விடுத்து சாட்சிகள் மூலம் குற்றங்கள் நிரூபிக்கப்படும் போது சட்டத்தை அமுல் நடாத்த வேண்டுமே தவிர வளைந்து கொடுக்கக்கூடாது என்பது இஸ்லாத்தின் ஆணித்தரமான கொள்கையாகும்.

அதேவேளை, மனைவி தவறான நடத்தையில் (விபச்சாரத்தில்)

ஈடுபட்டதாக கணவன் குற்றம் சுமத்தும் போது அதற்கான நேரடி நான்கு சாட்சிகள் இல்லை என்றாலும் அதனை தான் கண்ணால் கண்டதாகக் கணவன் கூறும் பட்சத்தில் அக்குற்றச்சாட்டை மனைவி மறுக்கலாம். அல்லது ஏற்றுக் கொள்ளலாம். குற்றத்தை ஏற்றுக்கொண்டால் அவளுக்கு மரண தண்டனை வழங்கப்படும். ஏற்கமறுத்தால் கணவனும் மனைவியும் தங்கள் தரப்பை உறுதிப்படுத்த அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்ய வேண்டும்.

அதாவது, கணவன் தன் மனைவி மீது சுமத்திய குற்றச் சாட்டில் தான் உண்மையாளனே (உண்மையையே சொல்கிறேன்) என்று நான்கு முறை அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து சொல்லிவிட்டு ஐந்தாவது முறையாக தான் பொய் சொல்வதாக இருந்;தால் அல்லாஹ்வின் சாபம் தன் மீது உண்டாகட்டும் என்று கூறவேண்டும்.

குற்றச்சாட்டை மறுக்கும் மனைவி, தன் மீது சுமத்திய குற்றச்சாட்டில் கணவன் பொய் சொல்கிறான் என நான்கு முறை அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து சொல்லி விட்டு ஐந்தாவது முறையாக 'அவன் (கணவன்) உண்மை சொல்பவனாக இருந்;தால் என் மீது அல்லாஹ்வின் கோபம் உண்டாகட்டும் எனக் கூறவேண்டும்.

சத்தியம் செய்யும் இம்முறைக்கு அரபியில் 'லிஆன்'' எனக் கூறப்படும். கணவன் மனைவியின் மீது குற்றம் சுமத்துவதால் முதலில் கணவன்தான் மக்கள் முன்னிலையில் (நீதி மன்றத்தில்) சத்தியம் செய்ய ஆரம்பிக்க வேண்டும்.

உண்மையிலேயே மனைவி தப்புச் செய்தாளா? அல்லது மனைவி மீது கொண்ட வெறுப்பினால் கணவன்; குற்றம் சுமத்துகிறானா என்பது யாருக்கும் தெரியாது. எனவேதான் சம்பந்தப்பட்ட இருவரும் 'லிஆன்'' செய்ய வேண்டும் என வேண்டப்படுகிறார்கள். அதன் மூலமாக சமுதாயத்தில் குறித்த அப்பெண் தவறாக விமர்சிக்கப்படுவது தடுக்கப் படுகிறது.

உண்மையான குற்றவாளி யார் என்பது உறுதியாக சமூகத்திற்குத் தெரியாதபோது பெண்ணை மாத்திரம் வஞ்சிக்கும் சமூகக் கொடுமையிலிருந்து அவளை இஸ்லாம் காக்கிறது.

இந்த இடத்தில் கூட பெண்கள் ஆண்களின் ஆதிக்கத்திற்கு அடிமையாகிவிடக் கூடாது என்பதில் இஸ்லாம் உரிய கவனம் செலுத்துகிறது.

'லிஆன்'' செய்த பின்பு அவர்கள் இருவருக்குமிடையிலான கணவன் மனைவி என்ற உறவு முறிவடைந்து விடுகிறது. அதன் பிறகு அவர்கள் இருவரும் மீண்டும் இணைந்து கொள்ள (திருமணம் செய்துகொள்ள) முடியாது என்றும் இஸ்லாம் கூறுகிறது.

ஒருமுறை நபி முஹம்மத் (ஸல்) அவர்களிடத்தில் அவரது தோழர் ஹிலால் இப்னு உமையா (ரழி) என்பவர், தனது மனைவி 'ஷரீக் பின் சஹ்மா'' என்பவருடன் இணைந்து இருந்ததாக குற்றம் சுமத்தி நீதி கேட்டு வந்தார்.

அப்போது நபி (ஸல்) அவர்கள் உன் குற்றச்சாட்டுக்கு ஆதாரத்தைக் (சாட்சியங்களை) கொண்டுவா. இல்லையெனில் உன் முதுகில் கசையடி கொடுக்கப்படும் என்று சொன்னார்கள்.

அதற்கு அவர், எங்களில் ஒருவர் தன்மனைவியுடன் அன்னிய மனிதன் இருப்பதைக் கண்டாலுமா? எனக்கேட்டார்.

ஆம்! நீ உன் குற்றச்சாட்டை நிரூபிக்க ஆதாரத்தைக் கொண்டுவா. இல்லையெனில் உன் முதுகில் கசையடி கொடுக்கப்படும் என்று நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்.

உங்களை சத்தியத்தைக் கொண்டு அனுப்பிவைத்த அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் உண்மையே சொல்கிறேன். எனது முதுகைக் கசையடியிலிருந்து காப்பாற்றும் செய்தியை அல்லாஹ் நிச்சயம் அருள்வான் என்று அவர் சொன்னார்;. அப்போது அல்லாஹ் பின்வரும் வசனங்களை நபி (ஸல்) அவர்களுக்கு இறக்கியருளினான்.

'தங்களைத் தவிர அவர்களுக்கு வேறுசாட்சிகள் இல்லாத நிலையில் எவர்கள் தமது மனைவியர் மீது அவதூறு கூறுகிறார்களோ அவர்களில் ஒருவரின் சாட்சியமாவது, நிச்சயமாக தான் உண்மையாளர்களில் உள்ளவன் என்று அல்லாஹ்வின் மீது நான்கு முறை சத்தியம் செய்து சாட்சி கூறுவதாகும். ஐந்தாவதாக தான் பொய்யர்களில் உள்ளவனாக இருப்பின் அல்லாஹ்வின் சாபம் தன்மீது உண்டாகட்டும் என அவன் சத்தியம் செய்வதாகும்.

நிச்சயமாக அவன் பொய்யர்களில் உள்ளவன் என்று அல்லாஹ்வின் மீது அவள் நான்கு முறை சத்தியம் செய்து சாட்சி கூறுவது அவளை விட்டும் தண்டனையைத் தடுத்து விடும். மேலும் ஐந்தாவதாக அவன் உண்மையாளர்களில் உள்ளவனாக இருப்பின் அல்லாஹ்வின் கோபம் தன்மீது உண்டாகட்டும் என்று அவள் சத்தியம் செய்வதாகும். உங்கள்

*மீது அல்லாஹ்வின் அருளும் அவனது கருணையும் இல்லாதிருப்பின் (உங்களுக்கு தண்டனை ஏற்பட்டிருக்கும்) நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவன் ஞானமிக்கவன். (அல்குர்ஆன் 24 : 6 – 10)*

இவ்வசனங்கள் அருளப்பெற்றதும் நபி (ஸல்) அவர்கள் ஹிலால் இப்னு உமையா (ரழி) அவர்களையும் அவர்களுடைய மனைவியையும் வரவழைத்தார்கள். அல்லாஹ் கூறிய பிரகாரம் சத்தியம் செய்யுமாறு இருவருக்கும் கூறினார்கள். அப்போது ஹிலால் (ரழி) அவர்கள் தான் சொன்னது உண்மையே என நான்கு முறை சத்தியம் செய்து ஐந்தாவது முறையாக நான் பொய் சொல்வதாக இருந்தால் அல்லாஹ்வின் சாபம் என்மீது உண்டாகட்டும் எனக் கூறினார்.

அப்போது நபி(ஸல்) அவர்கள் உங்கள் இருவரில் ஒருவர் பொய்யர் என்பதைஅல்லாஹ்அறிவான்.ஆகவே,உங்கள்இருவரில்பாவமன்னிப்புக் கோரி தவறு தன்னுடையதுதான் என்று ஒப்புக்கொண்டு அல்லாஹ்வின் பக்கம் திரும்புகின்றவர் யார் என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

பிறகு ஹிலால் (ரழி) அவர்களின் மனைவி எழுந்து நின்று நான்கு முறை சத்தியம் செய்துவிட்டு ஐந்தாவது முறையாக சத்தியம் செய்ய முனைந்த போது, அங்கிருந்த மக்கள் அவரை நிறுத்தி இது பொய்யான சத்தியமாக இருந்தால் அல்லாஹ்வின் தண்டனை உறுதியாகிவிடும் என்று கூறினார்கள். அப்பெண் சற்றே தாமதித்து சத்தியம் செய்யத் தயங்கினார்.;

அவள் சத்தியத்திலிருந்து வாபஸ் பெற்றுவிடுவாளோ என்று மக்கள் கருதினர். ஆனால், அப்பெண் ‘காலமெல்லாம் என் சமுதாயத்தாரை நான் இழிவுக்குள்ளாக்கப் போவதில்லை’’ என்று கூறி சத்தியம் செய்து முடித்தாள்.

அப்போது நபி(ஸல்) அவர்கள் இப்பெண்ணைக் கவனித்து வாருங்கள். இவள் கரிய விழிகளும் பெருத்த புட்டங்களும் தடித்த கால்களும் உடைய பிள்ளையைப் பெற்றெடுத்தால் அது (அவளது கணவன் குற்றம் சாட்டிய) ஷரீக் பின் ஸஹ்மாவுக்கே உரியதாகும் என்று சொன்னார்கள்.

அப்பெண் நபி (ஸல்) வர்ணித்தவாறே குழந்தையைப் பெற்றெடுத்தாள். இதையறிந்த நபி (ஸல்) அவர்கள், லிஆன் பற்றிய இறை சட்டம் வந்திராது விட்டால் அவளுக்குத் தண்டனை விதித்திருப்பேன் எனக் கூறினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் அவ்விருவரையும் கணவன் மனைவி என்ற பந்தத்திலிருந்து பிரித்து வைத்தார்கள். அபபெண்ணுக்கு பிறக்கும் குழந்தை அவளையே சாரும் என்றும் தீர்ப்பளித்தார்கள். அறிவிப்பவர்: இப்னு உமர் (ரழி) (நூல்: புகாரி 4748, 4746, 5309, 5311)

மனைவி நடத்தைக் கெட்டவள், கற்பை இழந்தவள் என்று கணவன் குற்றம் சுமத்திய பின் மீண்டும் அவனோடு அவள் சேர்ந்துவாழ வேண்டும் என்று கூறினால் கணவன் சொன்ன குற்றச்சாட்டு உண்மையாகிவிடும். எனவேதான் அவ்விருவரையும் மணப் பந்தத்திலிருந்து பிரித்து விடுகிறார்கள் நபி முஹம்மது (ஸல்) அவர்கள்.

'லிஆன்'' செய்தவர் தனது மனைவியை மணம்முடிக்கும் போது கொடுத்த மஹர் எனும் மணக்கொடையைப் பற்றி நபி முஹம்மது (ஸல்) அவர்களிடம் முறையிட்டு அதனைத் திருப்பிப் பெற்றுத் தருமாறு கேட்டார். அதற்கு நபியவர்கள் நீர் உம்முடைய மனைவி மீது சுமத்திய குற்றச்சாட்டில் உண்மையாளராக இருந்தால் அவளுடன் நீர் ஏற்கனவே தாம்பத்திய உறவு கொண்டுள்ளீர். அதற்கு அது நிகராகிவிடும். நீர் பொய் சொல்லியிருந்தால் அதன் காரணமாக அச்செல்வம் உம்மைவிட்டு வெகுதொலைவில் இருக்கிறது (மனைவிக்கு உரியதாகி விட்டது) என்று கூறினார்கள். (நூல்: புகாரி 5311)

கணவன் மனைவிக்கிடையில் 'லிஆன்'' மூலம் விவாகரத்து நடை பெற்ற பின்பும் கூட கணவன் மனைவிக்குக் கொடுத்த செல்வத்திலிருந்து ஒரு சதத்தைக் கூட திரும்பப் பெறமுடியாது. அச்செல்வம் முழுவதும் மனைவியையே சாரும் என நபி முஹம்மது (ஸல்) அவர்கள் தீர்ப்பு வழங்கினார்கள். பெண்ணுடைய மானத்தை ஏலம் போட்டிட இஸ்லாம் ஒருபோதும் இடம் தரவில்லை. விசாரணை என்ற பெயரில் ஏளனப் படுத்தவோ எள்ளி நகையாடவோ களம் அமைக்கவுமில்லை.

எனவே, பைபிள் வழங்கும் தீர்ப்பை விட அல்குர்ஆன் வழங்கிய தீர்ப்பே பெண்ணின் வாழ்வுரிமையைப் பாதுகாத்து கௌரவிப்பதுடன் அறிவுபூர்வமாகவும் திகழ்கின்றது.

அடுத்து, கற்பழிக்கப்பட்ட பெண்ணுக்கு ஐம்பது வெள்ளிக் காசுகளை அபராதமாகக் கொடுத்துக் கற்பழித்தவன் அவளையே மணம் முடித்துக் கொள்ள வேண்டும் என்ற பைபிள் தீர்ப்பைப் பற்றி கவனிப்போம்.

இஸ்லாத்தைப் பொறுத்தவரையில் கற்பழிக்கப்பட்ட பெண் தன்னை கற்பழித்த காமுகனையே கணவனாக்கிக் கொள்ள வேண்டும் என்று ஒரு போதும் அனுமதிக்கவில்லை. அவ்வாறு அனுமதிப்பது ஒவ்வொரு இளம் பெண்ணுடைய கற்பும் பறிக்கப்பட்டு சூறையாடப்படுவதற்கு சட்டரீதியான அங்கீகாரத்தை வழங்குவது போன்றாகிவிடும். அதற்கு மாற்றமாக கற்பழித்தவனுக்கு இஸ்லாம் தண்டனையை வழங்குகிறது.

அதன் மூலம் காமுகர்களின் அட்டகாசத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து பெண்கள் தலை நிமிர்ந்து கற்புடன் சுதந்திரத்துடன் வாழ வழி வகுக்கிறது.

நபி முஹம்மத் (ஸல்) அவர்களது காலத்தில் ஒரு பெண்மணி தொழுவதற்காகப் பள்ளிவாசலுக்குப் புறப்பட்டார். அப்பெண்ணை ஒருவர் போர்வையால் போர்த்திக் கற்பழித்துவிட்டார். அவள் சப்தமிட்டதும் அவன் ஓடி விட்டான்.

(சப்தத்தைக்கேட்ட) வேறொருவர்; அவளருகே ஓடிவர, அவர்தான் தன்னை கற்பழித்ததாக எண்ணி அப்பெண் ‘இவர் என்னைக் கற்பழித்து விட்டார்’’ என்று மக்களிடம் கூறினாள்.

அப்பெண் அடையாளம் காட்டிய அந்நபரை மக்கள் பிடித்து நபி (ஸல்) அவர்களிடம் கொண்டு வரவே அவருக்கு கல்லெறிந்து தண்டனை வழங்குமாறு உத்தரவிட்டார்கள்.

அப்போது அப்பெண்ணைத் தீண்டிய நபர் எழுந்து ‘அல்லாஹ்வின் தூதரே! நான்தான் அவளைத் தீண்டியவன்’’ என்று கூறினார். நபி (ஸல்) அவர்கள் பாதிக்கப்பட்ட அப்பெண்ணிடம் ‘நீ போய்விடு அல்லாஹ் உன்னை மன்னித்து விட்டான்’’ எனக் கூறி அனுப்பிவிட்டு தவறாகப் பிடித்து வரப்பட்ட அம்மனிதரிடமும் அழகிய வார்த்தைகளைக் கூறினார்கள். அப்பெண்ணைக் கெடுத்தவரைக் கல்லெறிந்து கொல்லுமாறு கட்டளையிட்டார்கள். (நூல்: திர்மிதி 1477)

‘கல்லெறிந்து கொல்லுதல்’’ என்ற சட்டம் காட்டுமிராண்டித் தனமானது என்று மேற்கத்திய (யூத, கிறிஸ்தவ) உலகம் விகாரமாக விமர்சனம் செய்து வருகிறது.

ஆனால் இஸ்லாத்திற்கு முன்பே பைபிளில் இச்சட்டம் சொல்லப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. இனியும் செயல்படுத்தியாக வேண்டிய கடமைப்பாடு அவர்களுக்குண்டு என்பதை மறக்கக்கூடாது.

# விவாகரத்து உரிமையற்றவள்

ஆண்களுக்கு சகல விடயங்களிலும் முன்னுரிமை வழங்கி சட்டங்களைக் கூறுவது போலவே விவாகரத்து உரிமையிலும் ஆண்களுக்கே முதலிடம் கொடுத்து பெண்களிடமிருந்து அந்த உரிமையைப் பறித்துள்ளது பைபிள்.

(இயேசுவாகிய) நான் உங்களுக்குச் சொல்கிறேன்; எவரும் தம்மனைவியை வேசித்தன முகாந்தரத்தினாலொழிய (வேசித்தனம் பண்ணினாலேயொழிய) வேறு எந்தக் காரணத்திற்காகவும் விலக்கி விடக் கூடாது. அப்படிச் செய்வோர் எவரும் அவரை விபச்சாரத்தில் ஈடுபடச் செய்கின்றனர். அப்படி தள்ளி விடப்பட்டவளை (விவாகரத்துச் செய்யப் பட்டவளை) மணப்போரும் விபச்சாரம்; செய்கிறனர். (மத்தேயு.5:32, லூக்கா.16:18)

இயேசு யூதேயப் பகுதிகளுக்கும் யோர்தான் அக்கரைப் பகுதிக்கும் வந்தார். மீண்டும் மக்கள் அவரிடம் வந்து கூடினர். அவரும் வழக்கம் போல மீண்டும் அவர்களுக்குக் கற்பித்தார்.

பரிசேயர் அவரை அணுகி 'கணவன் தன் மனைவியை விலக்கி விடுவது முறையா? என்று கேட்டு அவரைச் சோதித்தார். அவர் அவர்களிடம் மறுமொழியாக மோசே உங்களுக்கு இட்ட கட்டளை என்ன என்று கேட்டார்.

அவர்கள் 'மோசே மணவிலக்குச் சான்றிதழ் எழுதி அவரை விலக்கி விடலாம் என்று அனுமதி அளித்துள்ளார்'' என்று கூறினார்கள்.

அதற்கு இயேசு, அவர்களிடம் உங்கள் கடின உள்ளத்தின் பொருட்டே அவர் இக்கட்டளையை எழுதி வைத்தார்.

படைப்பின் தொடக்கத்திலேயே கடவுள் ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார். இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டு விட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்;திருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பர். இனி அவர்கள் இருவர் அல்ல ஒரே உடல். எனவே கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்'' என்றார்.

பின்னர் வீட்டில் இதைப்பற்றி மீண்டும் சீடர்கள்; அவரைக் கேட்டனர். இயேசு அவர்களை நோக்கி தன் மனைவியை விலக்கிவிட்டு வேறொரு பெண்ணை மணப்பவன் எவனும் அவருக்கு எதிராக விபச்சாரம் செய்கிறான். தன் கணவரை விலக்கி விட்டு வேறொருவரை மணக்கும் எவளும் விபச்சாரம் செய்கிறாள் என்றார். (மாற்கு: 10:1-12, மத்தேயு: 9:1-12)

பெண்களின் விவாகரத்து உரிமை சம்பந்தப்பட்ட விடயத்தில் பைபிள் கூறும் மிக முக்கியமான சட்டம் இது! இல்லற வாழ்க்கையில் இணைந்திருக்கும் கணவனும் மனைவியும் எக்காரணத்தைக் கொண்டும் பிரிந்து விடக்கூடாது. விவாகரத்துப் பண்ணக் கூடாது. மரணம் வரும் வரை இணைந்திருக்க வேண்டும் என்று இயேசு கூறுகிறார்.

இயேசுவின் இவ்வார்த்தைகள் விவாகரத்தின் மூலம் ஏற்படும் சமூக சீரழிவைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டு போதிக்கப்பட்ட உயர்ந்த போதனையாகத் தென்படுகின்றது என்று வாதிக்கலாம். விவாகரத்திற்குப் பின்னால் ஆண், பெண் இருவருடைய வாழ்வும் சீரழியக்கூடிய சூழல்களும் பாதிப்படையக் கூடிய வழிகளும் அதிகம். இதனால், ஏற்படும் பிரச்சினைகள் அதிகம். எனவே விவாகரத்தை ஊக்குவிக்காமல் என்ன பிரச்சினைகள் வந்தாலும் இருவரும் உடன்பட்டு வாழும் போக்கை ஊக்குவிப்பதே சிறந்தது. அதனைத்தான் இயேசு போதிக்கிறார் என்று காரணங்கள் கூறலாம். ஆனால், இது நியாயம்தானா? நடைமுறைச் சாத்தியம்தானா? என்பதை சிந்திக்க வேண்டும்.

கணவன் மனைவிக்கிடையில் ஏற்படும் பிரச்சினைகள், மனக் கசப்புக்கள், தகராறுகள் எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு எவ்விதமான பிரச்சினைகள் வந்தாலும் அவைகளையும் சமாளித்துக் கொண்டு வாழ வேண்டும் என்று கூறுவது கேட்பதற்கு தத்துவம் போல் தோன்றினாலும் நடைமுறை வாழ்வுக்கு ஏற்புடையதாக இருக்குமா? என்பதைக் கவனிக்க வேண்டும்.

இயேசுவுடைய இப்போதனையை ஏற்றுக்கொண்ட கிறிஸ்தவ சமுதாயத்தில்விவாகரத்துக்கள்நடைபெறாமலாஇருக்கின்றன? குறிப்பாக மேற்கத்திய ஐரோப்பிய கிறிஸ்தவ நாடுகளிலும் நாளொருவண்ணம் பொழுதொரு மேனியாக விவாகரத்து நடந்து கொண்டுதானே இருக்கிறது. ஒரு சட்டையை கழற்றிவிட்டு அடுத்த சட்டையை மாற்றிக் கொள்வது போல் திருமணம் விவாகரத்து என்று மாறி மாறி நடந்து வருகிறது. இயேசுவினுடைய போதனை நடைமுறைக்கு ஏற்றதாக இல்லை என்பதற்கு அம்மக்களின் வாழ்வு ஒரு சாட்சியாக இருக்கிறது.

கணவன் மனைவியாக தொடர்ந்தும் சேர்ந்து வாழ முடியாது என்ற நிலைவந்தால் பிரிந்து வாழவேண்டும் என்ற நிலைக்கு வந்துதான் ஆகவேண்டும். ஏற்றம் ஒன்று இருந்தால் இறக்கம் ஒன்று இருந்துதானே ஆகவேண்டும். ஒத்துப்போகாத இரு உள்ளங்களும் ஒதுங்கிப் போகவேண்டிய வழிகளைகாட்டித் தானே ஆகவேண்டும். அதுதானே நியதி! துரதிஷ்டவசமாக கிறிஸ்தவ மதம் அந்நியதியை அநீதி என்கிறது.

கணவனின் நடத்தைகள் செயற்பாடுகள் பிடிக்கா விட்டாலும் விவாகரத்தைக் கோரமுடியாது. கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்ற அடிப்படையில் வாழ வேண்டும். மரணம் வரை மனதைக் கல்லாக்கிக் கொண்டு காலத்தை ஓட்ட வேண்டும். மனைவியின் நியாயமானகோரிக்கையோஅல்லது விவாகரத்து கோரும் உரிமையையோ பைபிள் வழங்கவில்லை. கணவனுடைய ஆதிக்கத்திற்கு அடங்கி அவள் வாழவேண்டும்.

'அந்த ஆதிக்க முறைக்கு'' கூறும் வார்த்தைதான் 'தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்'' என்ற அருள்வாக்கு!

முறையாக கணவனிடமிருந்து பிரிந்துபோக வழியில்லாத போது 'விபச்சாரத்தில் ஈடுபடுதல்'' என்ற முறையற்ற செயலை செய்தால் தான் விடுதலைக்கு வழிகிடைக்கிறது. இதைத் தவிர அப்பெண்களுக்கு வேறு மார்க்கம் இல்லை!

மனைவியிடமிருந்து விவாகரத்தை எதிர்பார்க்கும் கணவன் அவளை விபச்சாரத்தில் ஈடுபடுத்த வேண்டும் அல்லது விபச்சாரத்தில் ஈடுபட்டாள் என்று வீண்பழி சுமத்த வேண்டும். இவ்விரண்டில் ஒன்றை செய்தால்தான் அவனால் விவாகரத்தை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும்.

சில நேரம் மனைவியினுடைய நடவடிக்கைகளில் உண்மையிலேயே வெறுப்படைந்து இக்காரியத்தை செய்யலாம். அல்லது மனைவியை பிடிக்காமல் போகும் போதுகூட இக்காரியத்தை செய்யலாம். எது எப்படி இருப்பினும் ஒரு அப்பாவிப் பெண்ணை விபச்சாரியாக சித்தரித்தால்தான் விவாகரத்து பெற முடியும் என்பதால் அக்காரியத்தை கணவன் செய்துதான் ஆகுவான். அவனைப் பொறுத்த வரையில் மனைவியிட மிருந்து விடுதலை தேவை! அதனைப் பெற்றுக்கொள்ள எதை வேண்டு மானாலும் செய்ய அவன் தயாராக இருப்பான். அதன் காரணமாக அப்பாவி பெண் விபச்சாரி என்ற பட்டத்தை சுமக்க வேண்டியவளாக மாறி விடுகிறாள்.

மனைவி நடத்தைக் கெட்டவளாக இருந்தால் அவளை விவாகரத்து

செய்வதில் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் விபச்சாரம் செய்யாத, அதன் பக்கமே நெருங்காத கற்பொழுக்கமுள்ள பெண்ணை (மனைவியை) விவாகரத்துப் பண்ணுவதற்காக விபச்சாரியாக சித்தரிப்பது பெரும் அநீதியாகும். இந்த அநீதியை செய்தால்தான் வழிபிறக்கும் என்றிருக்கும் போது கணவனால் வேறு என்னதான் செய்ய முடியும்?

பைபிள் கூறும் காரணத்திற்கு ஏற்ப மனைவியை விவாகரத்து செய்யக் கூடிய சூழ்நிலை அமையாதபோது கணவன் வேறுவிதத்தில் தனக்குரிய சுகத்தையும் வாழ்வையும் அமைத்துக் கொள்ள வேண்டிய (சின்ன வீட்டை செடப்பண்ண வேண்டிய) கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டு விடுகிறான். இப்பாவத்தை செய்வதற்கு தூண்டுதலாக இச்சட்டம் அமைந்து விடுகிறது.

அதுபோல் கணவனது நடத்தைகள் பிடிக்காவிட்டால் அவனை விட்டும் பிரிந்து வாழ்வதற்கு தனது கற்பைப் பணயம் வைத்து விடுதலை பெற வேண்டிய நிலைக்கு மனைவி தள்ளப்படுவதும் பரிதாபத்திற்குரியதாகும்.

இந்நிலையைத் தவிர்த்துவிட்டு கணவனை விவாகரத்து செய்து வேறொருவரை மணம் முடித்தால் அவள் ‘விபச்சாரம் செய்தவளாவாள்’’ என்றும் விவாகரத்து செய்யப்பட்ட பெண்ணை மணந்தவன் ‘விபச்சாரம் செய்தவனாவான்’’ என்றும் இயேசு குற்றம் சுமத்துகிறார். விவாகரத்துக்குப் பின் மறுவாழ்வு பெறுபவளும் மறுவாழ்வு கொடுப்பவனும் ‘விபச்சாரக் குற்றத்தின் கீழ் கண்டிக்கப்படுகின்ற’’ பாவமாக காட்டப்படுகிறது.

இயேசு கூறும் விவாகரத்து சட்டத்தை மறுதலிக்கும் போது அவருடைய சமூகத்தினர்; (பழைய ஏற்பாட்டின்) மோசேயுடைய சட்டத்தை எடுத்துக் கூறி விவாகரத்தை மோசே அனுமதித்திருக்கும் போது நீங்கள் ஏன் மறுக்கின்றீர்கள் என்ற அடிப்படையில் கேட்கிறார்கள்.

அதற்கு இயேசு கூறும் காரணம் ‘உங்கள் கடின உள்ளத்தின் பொருட்டே உங்கள் மனைவியரை விலக்கிவிடலாம் என்று மோசே உங்களுக்கு அனுமதி அளித்தார். ஆனால், ஆதி முதலாய் அப்படி இருக்க வில்லை’’ என்றார். (மத்தேயு: 19:8)

ஆரம்பத்தில் விவாகரத்துப் பண்ணும் முறை இருக்கவில்லை. யூத மக்களின் கடின உள்ளத்தின் செயற்பாடு காரணமாகத்தான் விவாகரத்து கொடுக்க வேண்டியதாயிற்று. கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்கக் கூடாது என்று விளக்கம் கூறி விவாகரத்து உரிமையை மறுதலிக்கிறார் இயேசு.

பைபிள் போதனைப்படி விவாகரத்துப் பண்ணும் உரிமை மனைவிக்கு

இல்லை. கணவனுக்கு தான் உண்டு! அதுவும் மனைவி 'விபச்சாரம் புரிந்தவள்'' என்று நிரூபிக்கப்பட்டால் மாத்திரம்தான் முடியும்!

இச்சட்டத்தின் பிரகாரம் கணவன் மனைவி இருவரும் பாதிக்கப் பட்டாலும் பெரும்பாலும் மனைவிதான் அதிகமதிகம் பாதிப்புக்கு உள்ளாகிறாள். திருமண வாழ்க்கைக்குள் வரும் பெண்கள் இருதலைக் கொள்ளியாக வெந்து சாகக்கூடியவளாக ஆகிவிடுகிறாள்.

மனைவி நடத்தை கெட்ட பெண் என்பதற்காக விவாகரத்து செய்வது சரிதான். விவாகரத்து பெறவேண்டும் என்பதற்காக அவளை நடத்தை கெட்ட பெண்ணாக ஆக்குவதும் ஆக்க இடம் கொடுப்பதும் முறையாகுமா?

யூத, கிறிஸ்தவ மதங்களைப் பொறுத்தவரை விவாகரத்து பெறும் உரிமையைப் பெண்களுக்கு வழங்கவில்லை.

## இஸ்லாத்தின் பார்வையில்....

இஸ்லாம், விவாகரத்து உரிமையை கணவன் மனைவி ஆகிய இருவருக்கும் வழங்கியுள்ளது.

மனைவியின் நடத்தைகள், செயற்பாடுகள், நடவடிக்கைகள் பிடிக்கா விட்டாலோ அல்லது கணவனின் கட்டளைகளுக்கு மனைவி கட்டுப் படாமல், மாறுசெய்பவளாக வாழ்ந்தாலோ அவளை விவாகரத்து செய்யும் உரிமையை கணவனுக்கு வழங்கியுள்ளது. கணவனது நடவடிக்கைகள், செயற்பாடுகள் பிடிக்காத போது அவனை விவாகரத்து செய்யும் உரிமையை மனைவிக்கு வழங்கியுள்ளது. எனவே, இரண்டு பேரில் ஒருவர் விவாகரத்தை விரும்பும் போது அதனை செயற்படுத்த இரு பாலாருக்கும் இஸ்லாம் சமஉரிமை வழங்கியுள்ளதைக் கவனிக்க வேண்டும்.

திருமணத்தை ஒரு ஒப்பந்தம் என்றே இஸ்லாம் கூறுகின்றது. 'உங்களிடம் உறுதியான ஒப்பந்தத்தை அவர்கள் (மனைவியர்) எடுத்திருக்க நீங்கள் ஒருவர் மற்றவருடன் இரண்டறக் கலந்திருக்கிறீர்கள்''... *(அல்குர்ஆன் 4 : 21)*

இரண்டு பேர் சேர்ந்து செய்துகொண்ட ஒரு உடன்படிக்கைக்கு, இருவரில் ஒருவர் மாறு செய்யும் போது சம்பந்தப்பட்டவர் அதனை முறித்துக் கொள்ள உரிமையுண்டு. இதனடிப்படையிலேயே கணவன் மனைவி இருவருக்கும் விவாகரத்து உரிமையை இஸ்லாம் வழங்கியுள்ளது.

கணவனுக்கு இஸ்லாம் வழங்கியுள்ள விவாகரத்து உரிமை பற்றிக் கவனிப்போம்:

இல்லற வாழ்க்கையில் கணவன் மனைவிக்கிடையில் பிரச்சினைகள், தகராறுகள் வரத்தான் செய்யும். அதற்காக விவாகரத்துப் பண்ணும் முடிவை முதலில் எடுத்துவிடக் கூடாது என இஸ்லாம் கணவனைப் பணிக்கிறது.

பல கஷ்டங்களுக்கும் துன்பங்களுக்கும் மத்தியில் தான் பெற்றோர்கள் தங்களது பெண் பிள்ளைகளுக்குத் திருமணத்தை நடாத்தி வைக்கிறார்கள். இதற்காக இரவுபகலாக உழைத்து சேமித்து மிச்சப்படுத்தி தமது மகளைக் கரைசேர்க்கிறார்கள். திருமணத்தின் போதும் விவாகரத்தின் போதும் அச்சுமைகளுக்கும் பாதிப்புக்களுக்கும் ஆண்களை விட பெண்கள்தான் அதிகம் ஆளாகி விடுகிறார்கள். எனவே, எந்தப் பெற்றோரும் தனது மகளின் வாழ்வு விவாகரத்தில் முடிவதை விரும்புவதில்லை. எப்படியாவது கணவனுடன் மனைவியைச் சேர்த்து வைக்கவே விரும்புகின்றனர். உலகிலுள்ள எல்லா பெற்றோரின் மனோநிலையும் இதுதான்.

மனிதர்களது இந்த மனோநிலைக்கு ஏற்பவே இஸ்லாமும் விவாகரத்துச் சட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வந்தது. மனைவியின் செயற்பாடுகள் பிடிக்கவில்லை என்பதற்காக ஒரேயடியாக அவளை வெறுத்து விவாகரத்து செய்யமுனையும் திட்டத்தை ஒத்திப்போடுமாறு கேட்கிறது. கணவனுக்கு அந்த உரிமை இருந்தாலும் கூட அவளுடன் சேர்ந்து வாழும் வழிகளைக் பரிசீலிக்குமாறு பணிக்கின்றது.

முதலில் மனைவியுடைய போக்கைப் புரிந்து அவளை நல்வழிப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு இஸ்லாம் பணிக்கிறது.

*‘நம்பிக்கை கொண்டவர்களே! பெண்களை பலவந்தமாக நீங்கள் உரித்தாக்கிக் கொள்வது உங்களுக்கு ஆகுமானதல்ல. அவர்கள் பகிரங்கமான ஏதேனும் மானக்கேடான செயலை செய்தாலேயன்றி அவர்களுக்கு நீங்கள் வழங்கியவற்றில் சிலதை பறித்துக்கொள்வதற்காக அவர்களை துன்புறுத்தாதீர்கள். அவர்களுடன் நல்லமுறையில் வாழ்க்கை நடத்துங்கள். நீங்கள் அவர்களை வெறுத்தாலும் பொறுத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் நீங்கள் ஒன்றை வெறுக்க அல்லாஹ் அதில் அதிகமான நன்மைகளை வைத்திருக்கக்கூடும்”. (அல்குர்ஆன் 4:19)*

‘விசுவாசம் கொண்ட கணவன் விசுவாசம் கொண்ட தம் மனைவியை

*வெறுக்கவேண்டாம். அவளிடம் ஒரு குணத்தை வெறுத்தால் வேறொரு (நற்)குணத்தைக் கொண்டு பொருந்திக் கொள்வானாக'' என நபி (ஸல்) அவாகள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி) (நூல்: முஸ்லிம் 1469)*

கணவனது கட்டளைகளுக்கு மனைவி அடிபணியாமல் அவனது வேண்டுதல்களுக்குச் செவியேற்காமல் தனது தவறுகளை சரிசெய்யாமல் மாறுசெய்பவளாக நடந்தால் அவளுக்கு அவளது தவறைப் புரிந்து கொள்ளும் விதத்தில் சுட்டிக் காட்டி நற்பண்புகளை பாராட்டி அன்பாய் அறிவுரை கூற வேண்டும். அது பயன்தராவிட்டால் அவளுடன் இல்லறத்தில் ஈடுபடும் 'உடல் சுகத்தை'' தவிர்ந்து கொண்டு அவளைத் திருத்த வேண்டும். அவளிடம் காணப்படும் நாணல் கோணல்களை அலட்டிக் கொள்ளாது பொறுமையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

இவ்விரு சந்தர்ப்பங்களிளும் மேற்கொள்ளப்பட்ட உளவியல் நடவடிக்கைகள் பயன்தராத போது மூன்றாவது நடவடிக்கையாக காயம் ஏற்படாத வகையில் அடிக்க அனுமதிக்கப்படுகிறது. இந்த அனுமதிகூட அளவோடு நிதானத்தோடு பிரயோகிப்பதற்காகவே பணிக்கப்படுகிறது. இத்தண்டனை என்பது மனைவியை திருத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய ஆரம்ப படித்தரமாக கூறாது இறுதி வழிமுறையாகவே கூறப்படுகிறது. அறிவுரீதியான உளவியல் ரீதியான வழிமுறைகள் அத்தனையும் பலனற்றுப் போகும் போதே உடல்ரீதியான அணுகு முறையை அனுமதிக்கிறது. இந்த அணுகுமுறையை கண்டிப்பாக மேற் கொள்ள வேண்டும் என்று கூறப்படவில்லை. ஆரம்ப படித்தரத்திலேயே மனைவியை விவாகரத்து கூட செய்து விடலாம். ஆனாலும் அவளுடன் வாழ்வதற்கான வழியை காணவே மூன்றாவது படித்தரமாக தண்டித்தலைப்பற்றி கூறப்படுகிறது.

மனைவியை தண்டித்;தல் அல்லது கண்டித்தல் எனும் போது அத்துமீறி நடப்பதாகவோ தனது பலத்தை காட்டுவதாகவோ வஞ்சகம் தீர்ப்பதாகவோ இருக்கக் கூடாது. மிருகத்தனமாக நடந்து கொள்வதாகவும் அமையக் கூடாது. அடி உதை என்ற நிலையிலும் அமைந்து விடக்கூடாது. திருந்தி வாழ்வதற்கான வழியை கொண்டு வருவதாகவே காணப்பட வேண்டும். மனைவியை பழிவாங்குவதாகவோ அல்லது கணவன் மீது வெறுப்பை ஏற்படுத்துவதாகவோ இருந்து விடவும் கூடாது. பிரச்சனைகளின் தன்மைகளை குறைப்பதற்காகத்தான் தீர்வு கூறப் படுகிறதே தவிர குழப்பத்தை விளைவிப்பதற்காகவோ வன்முறையை

தூண்டுவதற்காகவோ அல்ல. அடித்தல் எனும் போதே 'காயப்படுத்தாத முறையிலும் பாதிப்பு ஏற்படுத்தாத வகையிலும் அடிப்பது'' என்ற வார்த்;;தையே கையாளப்படுகிறது என்பதை கவனிக்க வேண்டும்.

மேலும் மனைவியின் முகத்தில் அடிப்பதையும் பிறர் முன்னிலையில் கண்டிப்பதையும் மோசமான தீயவார்த்தைகளால் திட்டுவதையும் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள். இதன் மூலம் பெண்மையை களங்கப்படுத்தும் எக்காரியத்தையும் மேற்கொள்ள கணவனுக்கு அனுமதி தரப்படவில்லை.

இம்மூன்று படித்தரங்களும் பயன்தராவிட்டால் அவளது குடும்பத்தில் ஒரு வரையும் கணவனது குடும்பத்தில் ஒருவரையும் நடுவர்களாக நியமித்து இருவருடைய பிரச்சினைகளையும் பேசி இணக்கப்பாட்டை ஏற்படுத்த *(Family Counsilling)* மேற்கொள்ள முனைய வேண்டும். இம்முயற்சிகள் யாவும் தோல்வியடையும் போது கணவன் மனைவியை விவாகரத்து செய்ய முனைய வேண்டும் என்று இஸ்லாம் கூறுகின்றது.

'பெண்களை நிர்வகிக்க ஆண்கள் தகுதியுடையோராவர். அவர்களில் சிலரை மற்றும் சிலரை விட அல்லாஹ் சிறப்பித்திருப்பதாலும் (ஆண்களாகிய) அவர்கள் தங்கள் செல்வங்களிலிருந்து செலவழிப்பதாலும் ஆகும். எனவே நல்லொழுக்கமுள்ள பெண்கள் கட்டுப்பட்டு நடப் போராகவும் (கணவனில்லாது) மறைவாக இருக்கும் சமயத்தில் அல்லாஹ்வின் பாதுகாவல் கொண்டு தம்மை பாதுகாத்துக் கொள்வோராகவும் இருப்பர். எவர்கள் கணவருக்கு மாறுசெயவார்கள் என்று நீங்கள் அஞ்சுகிறீர்களோ அவர்;களுக்கு உபதேசம் செய்யுங்கள்;. (திருந்தாவிட்டால்) படுக்கைகளில் அவர்களை வெறுத்துவிடுங்கள். (அதிலும் திருந்தாவிட்டால்) அவர்களுக்கு (இலேசாக) அடியுங்கள். அவர்கள் உங்களுக்குக் கட்டுப்பட்டால், அவர்களுக்கு எதிராக எவ்வழியையும் தேடாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் உயர்ந்தவனும் வல்லமை உடையவனாகவும் இருக்கின்றான்''. (அல்குர்ஆன் 4:34)

இன்னும் அவ்விருவருக்குமிடையில் பிளவை நீங்கள் அஞ்சினால் அவனது குடும்பத்திலிருந்து ஒரு நடுவரையும் அவளது குடும்பத்தி லிருந்து ஒரு நடுவரையும் சமாதானம் செய்ய அனுப்புங்கள். இவ்விருவரும் நல்லிணக்கத்தை விரும்பினால் அல்லாஹ் அவ்விரு வருக்குமிடையில் இணக்கத்தை ஏற்படுத்துவான். நிச்சயமாக அல்லாஹ் நன்கு அறிந்தவனாகவும் மிக நுட்பமானவனாகவும் இருக்கின்றான். (அல்குர்ஆன். 4:35)

'அறிந்து கொள்ளுங்கள்! மனைவியர்களுக்கு நன்மை நாடுங்கள்! நிச்சயமாக அவர்கள் உங்களிடம் அடைக்கலம் புகுந்தவர்கள். இதனைத் தவிர வேறெதனையும் நீங்கள் அவர்களிடமிருந்து சொந்தப்படுத்திக் கொள்ளவில்லை. எனினும், அவர்கள் பகிரங்கமாக மானக்கேடான காரியங்களை செய்தால் தவிர. அவர்கள் அவ்வாறு செய்தால் படுக்கைகளில் அவர்களை வெறுத்து விடுங்கள். காயப்படுத்தாத முறையில் அடியுங்கள். இதன் மூலம் அவர்கள் உங்களுக்குக் கட்டுப்பட்டு விட்டால் அவர்கள் விடயத்தில் வேறு வழிகளைத் தேடாதீர்கள்.

அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக நீங்கள் உங்கள் மனைவியர் களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளும் உண்டு. மனைவியர் உங்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளும் உண்டு.

உங்கள் விரிப்பில் நீங்கள் விரும்பாதவர்களை உட்காராமலிருக்கச் செய்வதும் நீங்கள் வெறுக்கும் எவரையும் உங்கள் வீடுகளில் அனுமதிக்காமலிருப்பதும் உங்கள் மனைவியர் உங்களுக்கு செய்ய வேண்டிய கடமையாகும்.

உங்கள் மனைவியருக்கு அழகிய முறையில் ஆடை மற்றும் உணவும் வழங்குவது கணவராகிய உங்கள் மீதுள்ள கடமையாகும் என நபி(ஸல்) அவர்கள் தனது இறுதி ஹஜ்ஜின் சொற்பொழிவில் கூறினார்கள். அறிவிப்பவர்: அம்ர் இப்னு ஆஸ் (ரழி) (நூல்: திர்மிதி 1163.)

அல்லாஹ்வின் தூதரே! எங்களது மனைவியருக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகள் என்ன? என நான் கேட்டேன். அதற்கு நபியவர்கள், நீ சாப்பிடும் போது உன் மனைவிக்கும் சாப்பாடு கொடுப்பாயாக. நீ ஆடை அணியும் போது அவளுக்கும் ஆடை அணிவிப்பாயாக! அவளது முகத்தில் அடிக்காதீர்; கெட்ட வார்த்தைகளால் பேசாதீர். (உன்) வீட்டில் தவிர வெளியில் அவளை கண்டிக்காதீர்; எனக் கூறினார்கள். அறிவிப்பவர்: முஆவியா இப்னு ஹைதர் (ரழி) (நூல்:அபூதாவூத் :2142)

ஒரு முஃமின் தன் முஃமினான மனைவியை வெறுக்க வேண்டாம். அவளிடம் ஒரு குணத்தை வெறுத்தால் மற்றோரு குணத்தின் மூலம் அவளிடம் அவன் திருப்தியுறுவான். என நபி (ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர். அபூ ஹுரைரா (ரழி) (நூல்:முஸ்லிம் 1469)

உங்களில் சிறந்தவர் தங்கள் மனைவியரிடம் சிறந்தவராக இருப்பவரே என நபி (ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அம்ரு (ரலி) (நூல். இப்னுமாஜா 1978)

*அல்லாஹ்வை விசுவாசிப்பவர்களில் (ஈமானால்) நம்பிக்கையால் முழுமை பெற்றவர் அவர்களில் அழகிய குணமிக்கவர். உங்களில் சிறந்தவர் மனைவியரிடம் சிறந்தவராக நடந்தவர்தான் என நபி (ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரழி) (நூல்: திர்மிதி 1162)*

மனைவிக்குரிய உரிமைகளைப் பேணி கடமைகளைச் செய்து சேர்ந்து வாழக்கூடிய எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டும் அவை அனைத்தும் தோல்வியில் முடியும் போதே மனைவியை தலாக் கூறிட இஸ்லாம் வழி காட்டுகின்றது.

மனைவியை பார்த்து தலாக்! தலாக்!! தலாக்!!! என்று ஒரே தடவையில் மூன்று முறை சொன்னாலும் சரி. முப்பது முறை சொன்னாலும் சரி. கணவன், மனைவி உறவு உடனே முறிந்து விடுவதில்லை. தலாக் நிகழ்ந்து விடுவதுமில்லை.

மாறாக தகுந்த இரு சாட்சிகள் முன்னிலையில் கணவன் மனைவிக்கு (தலாக்) விவாகரத்து அளித்திட வேண்டும். அச்சந்தர்ப்பத்தில் மனைவி மாதவிடாயிலிருந்து சுத்தமடைந்தவளாக இருக்க வேண்டும். பிறகு மனைவி தன்னுடைய மூன்று மாதவிடாயக் காலங்கள் முடியும் வரை (அதிலிருந்து சுத்தமடையும் வரை) -கணவன் மனைவி ஆகிய இருவரும் குடியிருக்கும் வீட்டில்- காத்திருக்க வேண்டும். (காத்திருக்கும் அக்கால எல்லையை 'இத்தா'' என அரபியில் கூறப்படும்.) அவளது கருவறையின் நம்பகத்தன்மையையும் அவளது கருவுக்குரிய உரிமையாளனையும் வாரிசையும் அடையாளம் காட்டுவதும் இதனது நோக்கங்களில் ஒன்றாகும்.

இத்தாவின் கால எல்லைக்குள் மனம் திருந்தி, வருந்தி சேர்ந்து வாழ வேண்டும் என்று இருவரும் இணக்கம் கொண்டால் சேர்ந்து வாழலாம். அல்லது பிரிந்து போகவேண்டும் என்று முடிவு செய்தால் மூன்று மாதவிடாய்களிலிருந்து சுத்தமடைந்த பின் பிரிந்து போகலாம். பிரிந்து போகும் போதே 'தலாக்'' சட்டபூர்வமாகி விடுகிறது. அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது.

நபியே! நீங்கள் பெண்களை விவாகரத்துச் செய்தால் அவர்களின் இத்தாவைக் கணக்கிடக்கூடிய (மாதவிடாய் இல்லாத) காலத்தில் விவாகரத்துச் செய்யுங்கள். மேலும் இத்தாவை நீங்கள் கணக்கிட்டுக் கொள்ளுங்கள். மேலும் உங்கள் இரட்சகனான அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். அவர்கள் பகிரங்கமான ஏதேனும் மானக்கேடானதைச் செய்தாலேயன்றி அவர்களை நீங்கள் அவர்களது வீடுகளை விட்டும்

வெளியேற்ற வேண்டாம். அவர்கள் வெளியேறவும் வேண்டாம். இவை அல்லாஹ்வின் வரம்புகளாகும். எவன் அல்லாஹ்வின் வரம்புகளை மீறுகின்றானோ அவன் தனக்குத்தானே அனியாயம் செய்துக் கொண்டான். (சேரந்து வாழ) இதன்பின்னரும் அல்லாஹ் ஒரு வழியை உண்டாக்கலாம் என்பதை நீர் அறியமாட்டீர்.

அவர்களின் (இத்தா) காலக்கெடுவின் எல்லையை அவர்கள் நெருங்கி விட்டால் அவர்களை உரிய விதத்ததில் வைத்துக் கொள்ளுங்கள். அல்லது உரிய முறையில் அவர்களைக் பிரித்து விடுங்கள். உங்களில் நீதமுள்ள இருவரை சாட்சியாகவும் வைத்துக் கொள்ளுங்கள். அல்லாஹ்வுக்காக சாட்சியத்தை நிலை நிறுத்துங்கள். யார் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பிக்கை கொள்கிறாரோ அவருக்கு இதைக்கொண்டு உபதேசிக்கப்படுகின்றது. எவர் அல்லாஹ்வை அஞ்சிக்கொள்கின்றாரோ அவருக்கு அவன் ஒரு வழியை ஏற்படுத்துவான். (அல்குர்ஆன்: 65:1-2)

‘விவாகரத்துச் செய்யப்பட்ட பெண்கள் மூன்று மாதவிடாயக் காலம் தங்களுக்காக எதிர்பார்த்திருக்க வேண்டும். அவர்கள் அல்லாஹ் வையும் இறுதி நாளையும் நம்புவர்களாக இருந்தால் தங்களது கருவறைகளில் அல்லாஹ் படைத்ததை மறைப்பது அவர்களுக்கு ஆகுமானதல்ல. அவர்கள் இதற்குள் இணக்கப்பாட்டை விரும்பினால் அவர்களை மீண்டும் மீட்டிக்கொள்ள அவர்களின் கணவன்மார்களே முழு உரிமை உடையவர்களாவர். (மனைவியர்களாகிய) இவர்கள் மீது முறைப்படி கடமைகள் இருப்பது போலவே இவர்களுக்கான உரிமைகளும் இருக்கின்றன. ஆயினும் ஆண்களுக்கு அவர்களைவிட ஒருபடி உயர்வுண்டு. அல்லாஹ் யாவற்றையும் மிகைத்தவன் ஞானமிக்கவன். (அல்குர்ஆன் 2:228)

நீங்கள் (உங்கள்) மனைவியர்களை (மீளக்கூடிய) தலாக் கூறி அவர்களின் இத்தா காலக்கெடுவின் எல்லையை அவர்கள் நெருங்கி விட்டால் அவர்களை உரியவிதத்தில் வைத்துக் கொள்ளுங்கள். அல்லது நல்ல முறையில் அவர்களை விட்டு விடுங்கள். (மாறாக) வரம்பு மீறி அவர்களைத் துன்புறுத்துவதற்காக அவர்களை உங்களிடம் வைத்துக் கொள்ளாதீர்கள். இவ்வாறு யார் செய்கிறாரோ நிச்சயமாக அவர் தனக்கே அநியாயம் செய்து கொண்டார். அல்லாஹ்வின் வசனங்களை கேலியாக எடுத்துக் கொள்ளாதீர்கள். உங்கள் மீதுள்ள அல்லாஹ்வின் கொடையையும் உங்கள் மீது அவன் இறக்கிய வேதத்தையும் ஞானத்தையும் நினைவு கூறுங்கள். அதன் மூலம் உங்களுக்கு அவன் உபதேசிக்கின்றான்.

*இன்னும் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் யாவற்றையும் நன்கறிந்தவன் என்பதையும் நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். (அல்குர்ஆன் 2:231)*

கணவன் மனைவியை தலாக் கூறி இத்தாவுடைய காலமும் முடிந்த பிறகு மறுபடியும் சேர்த்து கொள்வதற்கு (மணம் முடிப்பதற்கு) இரு சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலே கூறியவாறு கணவன் மனைவியை தலாக் கூறி மனைவி மூன்று மாதவிடாய்களிலிருந்து தூய்மையடைந்ததன் பின் கணவன் மனைவி என்ற உறவு முறிந்துவிட்டாலும் இரண்டாவது தடவையாக சேர்ந்து வாழ இருவரும் விரும்பும் பட்சத்தில் சட்டபூர்வமாக இணைந்து வாழ இஸ்லாம் அனுமதிக்கிறது.

*'(மீட்டிக் கொள்ள உரிமை பெற்ற) தலாக் இரண்டு தடவைகளே. பினனர்; உரிய விதத்தில் அவர்களை (மனைவியர்களாக) வைத்துக் கொள்லாம். அல்லது நல்லமுறையில் விட்டுவிடலாம்". (அல்குர்ஆன் 2:229)*

இரண்டாம் முறையாகவும் சேர்ந்து வாழும் போது பிரச்சினைகள் ஏற்பட்டு கணவன் மனைவியை தலாக் கூறிடும் போது மனைவி மூன்று மாதவிடாய்களிலிருந்து தூய்மையடையும் வரை காத்திருக்க வேண்டும். இச்சந்தர்ப்பத்திலும் இணைந்து வாழ முடிவு செய்தால் இணைந்து வாழலாம். இணங்கி வாழ முடியாவிட்டால் மூன்று மாதவிடாயக்; காலங்கள் முடிந்ததும் விவாகரத்து சட்டபூர்வமாகிவிடும்.

தலாக்கிற்கான இரு சந்தர்ப்பங்களையும் இவ்வாறு பயன்படுத்திய பிறகு மறுபடியும் அவர்கள் சேர்ந்து வாழ முடியாது. சேர்ந்து வாழ வேண்டும் என்று விரும்பினால் மனைவி வேறொருவரை மணம் முடித்து இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டு அக்கணவர் விரும்பி விவாகரத்து செய்த பிறகுதான் மனைவி தனது முன்னாள் கணவரை மணக்க முடியும்.

*'(இரு தடவைகள் தலாக் சொன்ன பின்;) மூன்றாம் முறையாக அவளை அவன் விவாகரத்துச் செய்தால் அவள் வேறு கணவனை மணமுடிக்கும் வரை இவனுக்கு அவள் ஆகுமானவளாக மாட்டாள். அ(வ்விரண்டாம் கண)வன் இவளை விவாகரத்துச் செய்து முதறக்கணவரும் இவளுமாகிய இருவரும் அல்லாஹ்வின் வரம்புகளை பேணமுடியும் என்று எண்ணினால் அவர்கள் இருவரும் (மணவாழ்விற்கு) மீள்வதில் குற்ற மில்லை. இவை அல்லாஹ்வின் வரம்புகளாகும். அறிந்து கொள்கின்ற சமூகத்திற்கு அவன் இவற்றை தெளிவு படுத்துகிறான்." (அல்குர்ஆன். 2:230)*

இஸ்லாம் கூறும் தலாக் சட்டம் மிக இலகுவானதும் நடை முறைக்கு எளிமையானதுமாகும். தலாக் பற்றி சரிவர புரிந்து கொள்ளாத ஒரு சில முஸ்லிம்களின் செயற்பாடுகளை வைத்தே இஸ்லாத்தின் மீது சேற்றை வாரி வீச சிலர் முனைகின்றனர். தலாக் சட்டத்தின் மூலம் ஒரு பெண்ணுடைய வாழ்வுக்கு எத்தகைய பாதுகாப்பு அரணை இஸ்லாம் போட்டிருக்கிறது என்பதை நடுநிலையோடு பார்க்கவேண்டும்.

மணம் முடிக்காமல் ஒரு வீட்டில் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வதோ அல்லது குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு சேர்ந்து வாழ்ந்து பிரிந்து விடுவோம் என்று ஒப்பந்தம் போடுவதோ அல்லது விவாகரத்தின் பின் 'புரிந்துணர்வு'' என்ற அடிப்படையில் கூடி வாழ்வதையோ இஸ்லாம் அனுமதிக்கவில்லை. மேற்கத்திய உலகின் இந்த அனாச்சாரம் மேலும் மேலும் பெண்மையை நாசப்படுத்தி பெண்களின் உரிமைகளை இல்லா தொழிக்க வழி சமைக்குமே தவிர எந்த நன்மையையும் பெற்றுக் கொடுக்காது. பெண்களை ஆண்கள் எவ்வகையிலும் பலவீனப்படுத்தி பயன்படுத்தி விடக் கூடாது என்பதற்காகவே இஸ்லாம் அத்தனை வழிகளையும் பெண்கள் சார்பாக பொறுப்பேற்றுள்ளது.

திருமணத்தின் போது கணவன் 'மஹர்'' எனும் மணக் கொடை அல்லது ஜீவனாம்சத்தை மனைவியின் விருப்பத்திற்கும் சம்மதத்திற்கும் ஏற்ப வழங்கி விட்டுத்தான் மணம் முடிக்க வேண்டும். மஹரை உடனே பெற்றுக் கொள்வதோ அல்லது தவனை முறையில் பெற்றுக்கொள்வதோ கூட்டல் குறைவுகள் செய்வதோ அல்லது தள்ளுபடி செய்வதோ மனைவியின் உரிமைக்குட்பட்ட விடயமாகும்.

*'(மணம் முடிக்க தடுக்கப்பட்ட) இவர்களைத்தவிர ஏனையோரை நீங்கள் விபச்சாரத்தில் ஈடுபடாதவர்களாகவும் கற்பொழுக்கம் உடையவர்களாகவும் உங்கள் செல்வங்களை (மஹராக)க் கொடுத்து (திருமணம் மூலம்) அடைந்து கொள்வது உங்களுக்கு ஆகுமாக்கப்பட்டுள்ளது. ஆகவே (மனைவியர்களாகிய) அவர்களில் எவருடன் நீங்கள் இன்பம் அனுபவிக் கின்றீர்களோ அதற்காக அவர்களின் மணக் கொடைகளைக் கட்டாயமாக அவர்களிடம் கொடுத்து விடுங்கள். (அதனை) நிர்ணயித்தபின் நீங்கள் ஒருவருக்கொருவர் (கூட்டவும் குறைக்கவும்) சம்மதித்துக் கொண்டதில் உங்கள் மீது குற்றமில்லை. நிச்சயமாக அல்லாஹ் நன்கறிந்தவனாகவும் ஞானமிக்கவனாகவும் இருக்கின்றான். (அல்குர்ஆன்: 4:24)*

தலாக்கிற்கு பின் மனைவியின் இத்தாவுடைய காலங்களில் அவளுக் குரிய முழுச் செலவையும் பராமரிப்பையும் பாதுகாப்பையும் கணவன்

பொறுப்பேற்க வேண்டுமே தவிர கொடுக்கப்பட்ட மஹரிலிருந்து உனது முழுசெலவுகளையும் கவனித்துக்கொள் என்று கூறி ஒதுங்கி விட முடியாது. கொடுத்த மஹரை திரும்ப பெற்றுக் கொள்ளவும் முடியாது. இதன் மூலம் பெண்களை வாழ வைக்கும் மற்றுமொரு நன்மையை இஸ்லாம் பெற்றுக் கொடுத்துள்ளது.

*'மனைவியர்களுக்கு நீங்கள் கொடுத்தவற்றில் எதனையும் எடுத்துக் கொள்வது உங்களுக்கு ஆகுமானதல்ல." (அல்குர்ஆன் 2: 229)*

மணம் முடித்து இல்லறத்தில் ஈடுபடுமுன் விவாகரத்து நடந்து விட்டால் மனைவிக்கு இத்தா கடமையல்ல. அதே வேளை நிர்ணயித்த மஹரில் அரைவாசியை கணவன் விட்டுக் கொடுப்பதும் தனது வசதிக்கும் சக்திக்கும் ஏற்ப ஏதேனும் வசதிகளை செய்து கொடுப்பதும் கட்டாயமாகும்.

*'நீங்கள் (உங்கள்) மனைவியரைத் தீண்டாமலோ அல்லது அவர்களுக்கு மஹரை நிர்ணயம் செய்யாமலோ அவர்களைத் விவாகரத்துச் செய்வது உங்கள் மீது குற்றமில்லை. எனினும் வசதியுள்ளவர் தனது சக்திக்கு ஏற்பவும் வசதியற்றவர் தனது சக்திக்கு ஏற்பவும் சிறந்த முறையில் அவர்களுக்கு ஏதேனும் வசதியை அளித்து விடுங்கள். (இது) நன்மை செய்பவர்கள் மீது கடமையாகும்.*

*நீங்கள் அவர்களுக்கு மஹரை நிர்ணயம் செய்து அவர்களைத் தீண்டுவதற்கு முன் விவாகரத்துச் செய்து விட்டால் அப்பெண்களோ அல்லது திருமண ஒப்பந்தம் யார் கையில் இருக்கிறதோ அ(க்கண) வரோ விட்டுக் கொடுத்தாலே தவிர. நீங்கள் நிர்ணயம் செய்த மஹரில் அரைவாசியை அப்பெண்களுக்கு கொடுப்பது கடமையாகும். எனினும் நீங்கள் அதை விட்டுக் கொடுப்பதே பயபக்திக்கு மிக நெருக்கமாகும். மேலும் உங்களுக்கிடையில் தயாளதன்மையுடன் நடந்து கொள்வதை மறந்து விட வேண்டாம். நீங்கள் செய்பவற்றை நிச்சயமாக அல்லாஹ் பார்ப்பவனாவான். (அல்குர்ஆன்:2:236. 237)*

*ஒரு மனைவியின் இடத்தில் வேறொரு மனைவியை (விவாகரத்தின் மூலம்) மாற்றிக்கொள்ள (மணம்முடிக்க) நீங்கள் நாடினால் அவர்களில் ஒருத்திக்கு ஒரு செல்வக் குவியலையே (மஹராக) கொடுத்திருந்தாலும் அதிலிருந்து எதையும் எடுத்துக் கொள்ளாதீர்கள். அநியாயமாகவும் பகிரங்கமான குற்றமாகவும் அதை நீங்கள் பறித்துக் கொள்வீர்களா? (அல்குர்ஆன்: 4:20)*

பொதுவாக உலகில் விவாகரத்துக்குப் பிறகுதான் ஜீவனாம்சம் பற்றிப்

பேசப்பட்டு வலியுறுத்தப்படுகின்றது. மனைவி மீது கொண்ட கோபம் மற்றும் வெறுப்பினால் விவாகரத்துப் பண்ணிய பின் ஜீவனாம்சம் கொடுக்க 99% வீத கணவன்மார்கள் விரும்புவதில்லை. செயற்படுத்த முனைவதில்லை. பல்வேறுப்பட்ட காரணங்களை கூறி அதிலிருந்து தப்பித்துக் கொள்ளவே வழிகாண்கிறார்கள். விவாகரத்து செய்யப்பட்ட பெண்களின் அவலநிலையை அன்றாடம் நீதிமன்றங்களில் காணவே செய்கிறோம். ஆண்களது மோசடி மற்றும் ஏமாற்று வழிகளிலிருந்து மனைவியர்களைப் பாதுகாக்க முன்கூட்டியே ஜீவனாம்சத்தைப் பெற்றுக் கொடுக்க இஸ்லாம் ஏற்பாடு செய்து கொடுத்துள்ளது. விவாகரத்தினால் பெண்கள் பாதிக்கப் படுவதைத் தடுப்பதற்காகவே அத்தனை வழிகளையும் இஸ்லாம் கையாண்டுள்ளது. திருமணத்திற்கான ஒப்பந்தம் (Registar) பதிவு நடைபெற்று குடும்ப வாழ்வை ஆரம்பிக்கமுன் விவாகரத்து நடந்தாலும் பேசப்பட்ட மஹரிலிருந்து கொடுக்கப் படவேண்டும் என்பதிலிருந்து பெண்களுக்கு இஸ்லாம் வழங்கியுள்ள வாழ்வுரிமையை அறிவுஜீவிகளால் புரிந்து கொள்ள இயலும்;.

விவாகரத்தின் போது மனைவிக்குரிய வசதிகளை செய்து கொடுப்பது போலவே பிள்ளை இருப்பின் அப்பிள்ளைக்குமுரிய பாதுகாப்பு மற்றும் செலவுகளையும் பொறுப்பேற்பதும் கணவன் மீது கட்டாயமாக்கியுள்ளது.

*‘பால்குடியை நிறைவு செய்ய விரும்புகின்ற (கண)வருக்காக (தலாக் விடப்பட்ட) தாய்மார்கள் தம் குழந்தைகளுக்கு இரண்டு வருடங்கள் பூரணமாகப் பாலூட்ட வேண்டும். (பாலூட்டும் தாய்மார்களாகிய) அவர்களுக்கு முறைப்படி உணவளிப்பதும் அவர்களுக்கு உடையளிப்பதும் பிள்ளையின் தந்தை மீது கடமையாகும். எந்தவொரு ஆத்மாவும் அதன் சக்திக்கு மேல் சிரமப் படுத்தப்படமாட்டாது.*

*தாய் தன் பிள்ளைக்காகவோ தந்தை தன் பிள்ளைக்காகவோ சிரமத்திற்குள்ளாக்கப்பட மாட்டார்கள். (தந்தை மரணித்துவிட்டால்) இது போன்ற கடமை அவரது வாரிசுக்கும் உண்டு. அவ்விருவரும் மனம் விரும்பியும் ஆலோசனை செய்தும் பால் குடியை நிறுத்திவிடக் கருதினால் அவ்விருவர் மீதும் எந்தக் குற்றமுமில்லை.*

*நீங்கள் உங்களுடைய குழந்தைகளுக்குச் செவிலித்தாய் மூலம் பாலூட்ட விரும்பி (பெற்ற தாய்க்குக்) கொடுக்க வேண்டியதை உரிய முறைப்படி கொடுத்து விட்டால் (அதிலும்) உங்கள் மீது குற்றம் கிடையாது. நீங்கள் அல்லாஹ்வை அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை பார்ப்பவன் என்றும் அறிந்து கொள்ளுங்கள். (அல்குர்ஆன்: 2:233)*

*‘விவாகரத்துச் செய்யப்பட்ட பெண்களுக்கு நல்ல முறையில் வாழ்க்கை வசதிகள் வழங்க வேண்டும். இது (அல்லாஹ்வை அஞ்சும்) பயபக்தியாளர்கள் மீது கடமையாகும்.'' (அல்குர்ஆன். 2:241)*

திருமணத்தின் போதும் விவாகரத்தின் போதும் பெண்ணின் வாழ்வை உத்திரவாதப்படுத்திடவும் பாதுகாத்திடவும் அனைத்து வழிகளையும் இஸ்லாம் செய்து கொடுத்துள்ளது. இதுபோன்ற உரிமைகளும் உத்தர வாதங்களும் யூத கிறிஸ்தவ மதங்களிலோ அல்லது ஏனைய மதங்களிலோ சித்தாந்தங்களிலோ உண்டா?

கணவனுக்கு விவாகரத்து செய்யும் உரிமையை கொடுத்துள்ளது போலவே பெண்ணுக்கும் விவாகரத்து உரிமையை இஸ்லாம் கொடுத்துள்ளது. இதனை அரபியில் ‘குல்உ'' என கூறப்படும்.

*‘(கணவன் மனைவியாகிய) அவ்விருவரும் அல்லாஹ்வின் வரம்புகளைப் பேணமுடியாது என அஞ்சினாலும் அல்லாஹ்வின் வரம்பு களை அவ்விருவரும் பேணமாட்டார்கள் என (நடுவர்களாகிய) நீங்கள் அஞ்சினாலும் மனைவி (தானாக விரும்பி கணவனுக்கு) ஏதேனும் ஈடாகக் கொடுத்து (பிரிந்து) விடுவதில் இருவர் மீதும் குற்றமில்லை. (அல்குர்ஆன்: 2:229)*

முஸ்லிம்களில் அப்துல்லாஹ் பின் உபையின் சகோதரி (ரலி)க்குத் தான் முதன் முதலில் ‘குல்உ'' நடந்தது. அச்சகோதரி அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே! எனக்கும் என் கணவருக்கும் எவ்விதத்திலும் பொருத்தமில்லை. (எங்களிருவருக்கும் திருமணம் முடிந்ததும் நான் இருந்த) கூடாரத்தின் திரையை விலக்கிப் பாரத்த போது அவர் பலருடன் வந்துகொண்டிருந்தார். அவர்களில் இவர் மிகவும் கறுப்பாகவும் மிகவும் குள்ளமானவராகவும் அருவருப்பான தோற்றமுடையவராகவும் இருந்தார் என்று கூறினார்.

அப்போது அவருடைய கணவர் அல்லாஹ்வின் தூதரே! எனது சிறந்த சொத்தான தோட்டத்தை அவருக்கு மணக் கொடையாக (மஹராக) அளித்துள்ளேன். அதை அவர் என்னிடம் திருப்பித் தந்து விட்டால் நான் அவருக்கு விவாகரத்து அளித்து விடுகிறேன் என்று கூறினார். அப்போது நபி (ஸல்) அவர்கள் அவருடைய துணைவியிடம் நீ என்ன சொல்கிறாய்? என்று கேட்டார்கள். அவர் ஆம் தந்துவிடுகிறேன். அவர் விரும்பினால் இன்னும் அதிகமாகக் கொடுக்கத் தயாராக இருக்கின்றேன் என்று கூறினார். பின்னர் தோட்டத்தை திருப்பி ஒப்படைத்ததும் அவர்கள் இருவரையும்

*முறைப்படி நபி (ஸல்) அவர்கள் பிரித்து வைத்தார்கள். (நூல்: தப்ஸீர் இப்னு கஸீர், தப்ஸீர் இப்னு ஜரீர்)*

*ஸாபித் பின் கைஸ் (ரலி) அவர்களின் துணைவியார் நபி (ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே! (என் கணவர்) ஸாபித் பின் கைஸின் குணத்தையோ மாரக்கப்பற்றையோ நான் குறை கூறவில்லை. ஆனால் நான் இஸ்லாத்தில் இருந்து கொண்டே இறைநிராகரிப்புக்குரிய செயலைச் செய்துவிடுவேனோ என்று அஞ்சுகிறேன் என்று கூறினார். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், ஸாபித் உனக்கு (மணக் கொடையாக) அளித்த தோட்டத்தை நீ அவருக்கு திருப்பித் தந்து விடுகிறாயா என்று கேட்டார்கள். அவர் ஆம் (தந்து விடுகிறேன்) என்று கூறினார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஸாபிதிடம் தோட்டததை ஏற்றுக் கொண்டு அவளை ஒருமுறை தலாக் சொல்லி விடுங்கள் என்று கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள். (நூல்: புகாரி 5273)*

*கன்னிகழிந்த பெண்ணான என்னை என் தந்தை (ஒருவருக்கு) மண முடித்து வைத்தார்கள். எனக்கு இதில் விருப்பமிருக்க வில்லை. ஆகவே நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் போனேன். அவர்கள் அத்திருமணத்தை ரத்துச் செய்தார்கள். (நான் விவாகரத்தை பெற்றுக் கொண்டேன்) அறிவிப்பவர். கன்ஸா பின்த் கிதாம். (ரலி) (நூல்: புகாரி 5138)*

*பரீரா எனும் அடிமை பெண்ணை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் மனைவி ஆயிஷா (ரலி) அவர்கள் வாங்கி விடுதலை செய்தார்கள். பரீராவின் கணவர் முகீஸ் அடிமையாக இருந்தார். (நூல்: புகாரி 5284)*

*(பரீரா தம்மைப் பிரிந்துவிட நினை;கிறார் என்பதை அவரது கணவர் முகீஸ் அறிந்ததும்) தமது தாடியில் கண்ணீர் வழியும் அளவிற்கு அழுத வண்ணம் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்ததை இப்போதும் நான் காண்பதைப் போன்றுள்ளது. அப்போது நபி(ஸல்) அவர்கள் அப்பாஸ் (ரலி) அவர்களிடம் அப்பாஸ் அவர்களே! முகீஸ் பரீராவின் மீது வைத்துள்ள நேசத்தையும் பரீரா முகீஸின் மீது வைத்துள்ள கோபத்தயும் கண்டு நீங்கள் வியப்படைய வில்லையா? என்று கேட்டார்கள். (முகீஸிடமிருந்து பரீரா பிரிந்து விட்டபோது) நபி (ஸல்) அவர்கள், முகீஸிடம் நீ திரும்பிச் செல்லக்கூடாதா என்று பரீராவிடம் கேட்டார்கள்;. அதற்கு பரீரா 'அல்லாஹ்வின் தூதரே எனக்குத் தாங்கள் கட்டளையிடுகிறீர்களா?" என்று கேட்டார். இல்லை பரிந்துரைக்கவே செய்கிறேன் என்று நபி (ஸல்)*

*கூறினார்கள். அப்போது பரீரா (அப்படியாயின்) அவர் எனக்குத் தேவையில்லை என்று கூறிவிட்டார். அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரலி) (நூல்: புகாரி 5283)*

கணவன், மனைவி இருவரும் பிரிந்து வாழவேண்டும் என்று முடிவு செய்த பின் பிரிந்து வாழ்வது தான் நல்லது. அதன் பின் வேறொரு புதிய வாழ்வை அவர்கள் விரும்பும் பிரகாரம் ஆரம்பிப்பதை இஸ்லாம் ஊக்குவிக்கிறது. அல்லாஹ்வின் தூதர் நபி முஹம்மத்(ஸல்) அவர்கள் பரீரா (ரலி) அவர்களிடம் பரிந்துரைக்கத் தான் விரும்பினார்களே தவிர கட்டளையிட விரும்பவில்லை என்பதை கவனிக்க வேண்டும். திருமணத்தையும் இலகுவாக்கி விவாகரத்தையும் எளிதாக்கி நடைமுறைக்கு சாத்தியமான வாழ்வு முறையை இஸ்லாம் காட்டுகின்றது.

❀❀❀

# மறுமணத்திற்கு தகுதியற்றவள்

சமூகத்தில் மிகவும் நலிந்து போனவர்களின் பட்டியலில் விதவைகள் முக்கிய இடம் வகிப்பவர்கள். வாழ்க்கைத் துணையை இழந்து, இன்பங் களையும், சுகங்களையும் தொலைத்து விட்டு, எதிர்கால வாழ்வைப் பற்றி நம்பிக்கையிழந்து மறுவாழ்வுக்காகக் காத்திருப்பவர்கள்.

இப்பெண்களைப் பற்றி சிந்திப்பவர்களும் அவர்களுக்காக உழைப் பவர்களும் மிகவும் அரிது. உடல் உளரீதியாக பாதிப்படைந்த இப்பெண்களுக்கு உரிய துணைகளைத் தேடிக் கொடுத்து மறுமணம் செய்துவைப்பது அல்லது வாழ்வுக்கான வழிகளை ஏற்படுத்திக் கொடுப்பதே சிறந்த பரிகாரமாகும்.

இல்லையேல் இவர்கள் சமூகத்தில் ஒரு சுமையாக கணிக்கப்படுவது மட்டுமன்றி சிலநேரம் சமுதாயக் கட்டுக்கோப்பையும் ஒழுக்க விழுமியங் களையும் சீர்குலைக்கக் கூடியவர்களாகவும் உருவாகிவிடுவார்கள். எனவே விதவைகளின் மறு வாழ்வை பற்றிச் சிந்திப்பது சமூகத்தின் தலையாயக் கடமையாகும்.

விதவைகளுக்கான மறுவாழ்வு (மறுமணம்) பற்றி அக்கறை கொள்ளும் போது அவர்களது சம்மதத்துடனேயே நடைபெற வேண்டும் என்பது முக்கிய அம்சமாகும். 'விதவை'' என்கின்ற காரணத்தை முன்வைத்து அவர்களது சம்மதமில்லாமல் அவர்கள் விரும்பாத ஒரு வாழ்க்கைக்குள் அவர்களைத் தள்ளிவிட முடியாது. கட்டாயத் திருமணம் செய்து வைக்கவும் கூடாது. அவர்களது உணர்ச்சிகளுக்கும் உணர்வுகளுக்கும் கண்டிப்பாக மதிப்பளித்தாக வேண்டும்.

துரதிஷ்டவசமாக யூத கிறிஸ்தவ மதங்கள் விதவைகளின் வாழ்வுக்கு ஒளியூட்டுவதற்கு மாற்றமாக இருட்டறைக்குள் தள்ளி விடுகின்ற நற் செய்திகளே கூறுகின்றன.

கணவன் இறக்கும் போது மனைவிக்கு பிள்ளைபேரு இல்லை யென்றால் அவனது மரணத்திற்குப்பின் அவனது சகோதரனாகிய மைத்துணரையே (மச்சானை) மனைவி மணம் முடித்து அவன் மூலம் பிள்ளைகளைப் பெற்றெடுக்க வேண்டும். அப்பிள்ளைகள் மரணித்துப் போன ''கணவனின் வாரிசுகள்'' என்று அழைக்கப்படுமே தவிர மறுமணம்

முடித்தவரின் (மைத்துணரின்) பெயர் சொல்லும் பிள்ளைகளாக –வாரிசுகளாக- அழைக்கப்பட மாட்டாது. இத்திருமணத்திற்கு இப்பெண்ணின் சம்மதமோ அல்லது மைத்துணரின் சம்மதமோ கேட்கப்படவும் மாட்டாது.

அண்ணனின் விதவை மனைவியாகிய அண்ணியை மணம் முடிக்க சகோதரன் மறுத்தால் பஞ்சாயத்துத் தலைவருக்கு முன்னால் மக்கள் மன்றத்தில் வைத்து இவள் தனது செருப்பைக் கழற்றி அவனது முகத்திலும் துப்பி அசிங்கப்படுத்த வேண்டும். அன்றிலிருந்து அவனது வீடு 'செருப்படி கழற்றப்பட்டவனின் வீடு'' என்று சமூகத்தில் அடையாளப் படுத்தப்படும். இதுதான் விதவைப் பெண் விடயத்தில் பைபிள் கூறும் வாழ்வுரிமை! பின்வரும் பைபிள் வாக்கியங்களை நிதானமாகப் படியுங்கள்.

'உடன் பிறந்தோர் சேர்ந்து வாழ்கையில் அவர்களில் ஒருவன் மகப் பேறின்றி இறந்து போனால் இறந்தவனின் மனைவி குடும்பத்திற்கு வெளியே அன்னியனுக்கு மனைவியாக வேண்டாம். அவள் கொழுந்தனே (அதாவது மைத்துணர்) அவளைத் தன் மனைவியாக ஏற்று அவளோடு கூடி வாழ்ந்து கணவனின் உடன் பிறந்தோன் செய்ய வேண்டிய கடமையை அவளுக்குச் செய்யட்டும். அவளுக்குப் பிறக்கும் ஆண் தலைப்பேறு இறந்து போன சகோதரனின் பெயரிலேயே வளரட்டும். இதனால் அவன் பெயர் இஸ்ரயேலிலிருந்து அற்றுப் போகாது.

இறந்தவனின் உடன்பிறந்தான் தன் அண்ணியை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லையெனில், அவள் நகர்வாயிலில் உள்ள தலைவர்களிடம் சென்று, தன் அண்ணன் பெயரை இஸ்ரேலில் நிலைநிறுத்தும் படி ஒரு கணவனின் தம்பிக்குரிய கடமையை எனக்குச் செய்ய என்(மைத்து ணருக்கு) கொழுந்தனுக்கு விருப்பமில்லை என்று கூறுவாள்.

அப்போது நகரத் தலைவர்கள் அவனைக் கூப்பிட்டு அவனோடு பேசுவர். அவனோ விடாப்பிடியாக அவளை ஏற்றுக்கொள்ள எனக்கு விருப்பமில்லை என்று கூறினால் அவன் அண்ணி அவனை அணுகி தலைவர்களின் கண் முன்பாக அவள் காலிலுள்ள மிதியடிகளைக் கழற்றி அவன் முகத்தில் துப்பி 'தன் சகோதரனின் வீட்டைக் கட்டாதவனுக்கு இப்படியே செய்யப்படும்'' என்று கூறுவாள். இஸ்ரயேலில் அவனது பெயர் மிதியடி கழற்றப் பட்டவனின் வீடு என்றழைக்கப்படும். *(உபாகமம் 25:1-10)*

இச்சட்டம் விதவைப் பெண்களை வாழவைக்கும் சீர்திருத்தச்சட்டமோ சமுதாய மறுமலர்ச்சிக்கான திட்டமோ அல்ல என்பது சாதாரணமாகச் சிந்திக்கத் தெரிந்த எவருக்கும் விளங்கி விடும்.

திருமணத்தின் மூலம் இரு உடல்கள் ஒன்று சேர்வது போல், இரு உள்ளங்களும் ஒன்றிணைய வேண்டும். உடல் ஒருவனுக்கும் உள்ளம் இன்னுமொருவனுக்கும் என்றால் அது திருமணமாக இருக்காது. இருவரும் மனதாலும் உடலாலும் இணையும் போதே திருமணவாழ்வு வசந்தமாகும்.

பைபிளின் இச்சட்டத்தை மேலோட்டமாக நோக்கினால் விதவைப் பெண்களை வாழவைக்கும் சிறப்பான சட்டம் போல் தோன்றும். சற்று உன்னிப்பாக பார்த்தால்தான் அப்பெண்களின் வாழ்வு சூன்யமாக்கப் படுவதோடு அவர்களுக்குரிய உரிமைகள் பறிக்கப்பட்டு பாழடிக்கப் படுகின்றன என்பது தெரியவரும்.

திருமணம் முடித்த தம்பதிகளுக்கு பிள்ளைப்பேறு கிடைக்க வில்லை யானால் கணவனிடமோ அல்லது மனைவியிடமோ உடல் ரீதியான ஏதேனும் கோளாறுகள் இருக்கலாம். இவ்விருவரில் யாரிடத்தில் என்ன கோளாறுகள் உள்ளன என்பதை கண்டறியாமல் அப்பெண்ணின் கணவனின் மரணத்திற்குப் பின் அவனது மைத்துணரை மணமுடித்து பிள்ளை பேற்றை கொடுக்க வேண்டும் என்று கூறுவது எவ்வளவு பெரிய கொடுமை.

அம்மைத்துணரும் அவளை மணமுடித்து பிள்ளைப் பாக்கியம் கிடைக்க வில்லையென்றால் அவனது மரணத்திற்குப் பிறகு அதற்கடுத்த மைத்துணரை மணம் முடித்திட வேண்டும். இப்படியே மைத்துணர்கள் முடியும் வரை மணந்து கொண்டே இருக்க வேண்டும். எந்த மைத்துனர் மூலமாவது பிள்ளை பிறந்தால் அப்பிள்ளை மரணித்துப் போன மூத்த சகோதரனின் வாரிசாக கணிக்கப்படுமே தவிர இவனது வாரிசாக சொல்லப்படமாட்டாது. ஒருவனின் பிள்ளையை இன்னுமொருவன் சொந்தம் கொண்டாடும் அநியாயம் வேதாகமத்தில் தவிர வேறு எங்கும் இருக்க முடியாது.

அண்ணியை மணம்முடிக்க விரும்பாத சகோதரன் தான் விரும்பும் பெண்ணைத்தான் மணம் முடிப்பேன் என்று தனது கருத்தைச் சொல்லும் போது அதனை கவனத்தில் கொள்ளாது அவனது முகத்தில காறிதுப்பி செருப்பை கழற்றி காட்டுவது அவனது சுயமரியாதையை நாசப் படுத்துகின்ற காரியம் மட்டுமல்லாது அவனது வாழ்க்கையையே குழி தோன்றிப் புதைக்கின்ற மிகப்பெரும் அவமானம். அப்பெண்ணும் தான் விரும்புகின்ற ஒருவரை தேர்ந்தெடுத்து மணக்க முடியாதவளாக இருக்கிறாள். இரண்டு பேருடைய வாழ்வும் சூன்யமாக்கப்படுகிறது.

பைபிளின் பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள இச்சட்டத்தை எவ்வித மாறுதலுமின்றி புதிய ஏற்பாட்டில் (கிறிஸ்தவ மதச் சட்டமாக) இயேசு அங்கீகரிக்கிறார்.

'சதுசேயர் (என்பவர்) இயேசுவை அணுகி, போதகரே ஒருவர் மகப் பேறின்றி இறந்து போனால் அவருடைய மனைவியைக் கொழுந்தனே (மைத்துணரே) மனைவியாக ஏற்றுக் கொண்டு தம் சகோதரருக்கு வழிமரபு உருவாக்க வேண்டும் என்று மோசே உரைத்திருக்கிறார்.

எங்களிடையே சகோதரர் எழுவர் இருந்தனர். மூத்தவர் திருமணம் செய்து மகப்பேறின்றிக் காலமானதால் அவருடைய மனைவியை அவர் சகோதரர் திருமணம் செய்ய வேண்டிய தாயிற்று.

அப்படியே இரண்டாம், மூன்றாம் ஏழாம் சகோதரர் வரை அனைவருக்கும் நடந்தது. அவர்கள் அனைவருக்கும் பின்பு அப்பெண்ணும் இறந்தாள்.

அப்படியானால் உயிர்த்தெழும் போது அவர் அந்த எழுவருள் யாருக்கு மனைவியாய் இருப்பார்? அவர்கள் யாவரும் அவரை மனைவியாகக் கொண்டிருந்தனரே என்று கேட்டார்.

இயேசு மறுமொழியாக உங்களுக்கு மறைநூலும் தெரியாது; கடவுளின் வல்லமையும் தெரியாது. எனவேதான், தவறான கருத்தைக் கொண்டிருக் கிறீர்கள். ஏனெனில் உயிர்த்தெழுந்தவர்களுள் யாரும் திருமணம் செய்து கொள்வதில்லை. அவர்கள் விண்ணகத் தூதரைப் போல் இருப்பார்கள். (மத்தேயு 22:24, மாற்கு 12:19, லூக்கா 20:25)

மணம்முடிக்கும் படி பணிக்கப்படும் அந்த மைத்துனரின் வயது பற்றியோ அல்லது இவளது வயது பற்றியோ- அவர்களது சம்பந்தம் பற்றியோ- கவனத்தில் எடுப்பதில்லை. மைத்துணர்களில் ஏழுபேரை மணந்த போதும் பிள்ளைபேறு கிட்டவில்லை என்றாலும் வேறொருவரை மணக்காது மரணம் வரை காத்திருக்க வேண்டும்.

விதவைப் பெண்களின் வாழ்வு இவ்வாறு இறுக்கப்படுவதால் விபரீதங்கள்தான் உருவாகுமே தவிர அனுகூலங்கள் உருவாகப் போவ தில்லை. விருப்பத்திற்கு மாறாக நடக்கும் திருமணம் சீர்கேட்டை உருவாக்கும் என்பதற்கான சான்றுகளை இதே பைபிளில் தெளிவாக காணமுடிகிறது.

'யூதா தம் தலைமகன் ஏர் என்பவனுக்குத் தாமார் என்னும் ஒரு

பெண்ணை மணமுடித்து வைத்தார். யூதாவின் தலை மகன் ஏர் ஆண்டவர் முன்னிலையில் கொடியவனாய் இருந்ததால், ஆண்டவர் அவனைச் சாகடித்தார்.

அப்போது யூதா தம் மகன் ஓனானை நோக்கி, நீ உன் சகோதரன் மனைவியோடு கூடிவாழ். சகோதரனுக்குரிய கடமையைச் செய்து, உன் சகோதரனுக்கு வழி மரபு தோன்றச் செய் என்றார்.

அந்த வழிமரபு தனக்குரியதாய் இராதென்று அறிந்து. ஓனான் அவளோடு உடலுறவு கொள்கையில் தன் சகோதரனுக்கு வழிமரபு தோன்றாதவாறு தன்விந்தைத் தரையில் சிந்தி வந்தான். அவன் செய்தது தம்பார்வையில் தீயதாய் இருந்ததால், ஆண்டவர் அவனையும் சாகடித்தார்.

ஆதலால், யூதா தம்மருமகள் தாமரை நோக்கி என் மகன் சேலா பெரியவனாகும் வரை உன் தந்தை வீட்டில் விதவையாய்த் தங்கியிரு என்றார். ஏனெனில் அவனும் தன் சகோதரனைப் போல் சாவானோ என்று அஞ்சினார். தாமாரும் அவ்விதமே தன் தந்தை வீட்டிற்குச் சென்று அங்கு தங்கியிருந்தாள்.

பல நாட்களுக்குப் பின் சூவாவின் மகளான யூதாவின் மனைவி இறந்தாள். யூதா அவளுக்காகத் துக்கம் கழித்த பின் தம்மந்தைக்கு உரோமம் சுத்திகரிப்பவர்கள் இருந்த திம்னாவுக்குத் தம் அதுல்லாமிய நண்பன் ஈராவுடன் சென்றார்.

அப்போது உன் மாமனார் தம் ஆடுகளுக்கு உரோமம் சுத்திகரிக்கத் திம்னாவுக்குப் போகிறார் என்று தாமாருக்குச் செய்தி அறிவிக்கப்பட்டது.

சேலா பெரியவனாகியும் தம்மை அவனுக்கு மனைவியாகக் கொடுக்க வில்லை என்று அவள் கண்டு தமது கைம்மைக் கோலத்தைக் களைந்து விட்டு முக்காடிட்டுத் தம்மை மறைத்துக் கொண்டு திம்னாவுக்குச் செல்லும் பாதையில் இருந்த ஏனயிம் நகர் வாயிலில் அமர்ந்து கொண்டாள்.

யூதா அவளைக் கண்ட போது அவள் முகம் மூடியிருந்ததால் அவள் ஒரு விலைமாது என்று நினைத்தார். அவர் திரும்பி பாதையோரம் அவளிடம் சென்று அவர் தம்மரு மகளென்று அறியாமல் தம்முடன் உடலுறவு கொள்ளுமாறு அழைத்தார்.

அதற்கு அவள் என்னோடு உடலுறவு கொள்வதற்கு என்ன தருவீர்? என்று கேட்டாள். அவர் என் மந்தையிலிருந்து உனக்கு ஒரு வெள்ளாட்டுக்

கிடாய் அனுப்புகிறேன் என்றார்.

அதற்கு அவள், நீர் அதை அனுப்புமட்டும் எனக்கு ஓர் அடைமானம் தருவீரா? என்ற கேட்டாள். அடைமானமாக உனக்கு நான் என்ன தர வேண்டும்? என்று அவர் கேட்க அவள் உம்முடைய முத்திரை மோதிரத் தையும் இடைவாளையும் கைக்கோலையும் தரவேண்டும் என்றாள். அவருக்;கு அவற்றைக் கொடுத்தபின் அவளுடன் உடலுறவு கொண்டார்.

அவளும் கருவுற்றாள். பின்பு அவள் எழுந்துபோய் தம் முக்காட்டை எடுத்து விட்டு விதவைக்குரிய ஆடைகளை அணிந்து கொண்டாள்.

அவரிடம் தாம் கொடுத்திருந்த அடைமானத்தைத் திரும்பப் பெறுமாறு, யூதா தம் அதுல்லாமிய நண்பன் மூலம் ஒரு வெள்ளாட்டுக் கிடாயை அனுப்பினார். அவனோ அவளைக் காணவில்லை.

அங்கிருந்த ஆட்களை நோக்கி, ஏனயிம் அருகே வழியில் இருந்த விலைமாது எங்கே? என்று கேட்க, அவர்கள் இங்கே விலைமாது எவளுமில்லை என்றனர். அவன் யூதாவிடம் திரும்பி வந்து நான் அவளைக் காணவில்லை. மேலும் அங்கிருந்த ஆள்கள், இங்கு விலைமாது எவளுமில்லை என்றனர்.

மூன்று மாதம் சென்ற பின்னர், உம் மருமகளாகிய தாமார் வேசித்தனம் பண்ணினாள். வேசித்தனத்தினால் கருவுற்றிருக்கிறாள்'' என்று யூதாவுக்கு அறிவிக்கப்பட்டது. அப்பொழுது அவர், அவளை இழுத்துக் கொண்டு வாருங்கள். அவள் எரிக்கப்பட வேண்டும் என்றார்.

அவ்வாறே அவளை இழுத்துக்கொண்டு வருகையில் அவள் தம் மாமனாருக்கு, இந்தப் பொருட்கள் எவனுடையவையோ அவனாலேயே நான் கருவுற்றிருக்கிறேன். இந்த முத்திரை மோதிரமும் இடைவாளும் கைக்கோலும் யாருடையவை என்று பாரும் என்று சொல்லியனுப்பினாள். யூதா அவற்றைப் பார்த்தறிந்து, அவள் என்னைக் காட்டிலும் நேர்மையான வள். அவளை நான் என் மகன் சேலாவுக்கு மணமுடிக்காமல் போனேனே! என்றார். ஆயினும் அதற்குப் பின் அவர் அவளோடு உடலுறவு கொள்ள வில்லை.

தாமதருக்குப் பேறுகாலம் வந்தபோது, அவள் வயிற்றில் இரட்டைப் பிள்ளைகள் இருந்தன. அவள் பிள்ளை பெறுகிற வேளையில் ஒரு பிள்ளை கையை வெளியே நீட்டியது. மருத்துவப் பெண் அதன் மணிக் கட்டில் கருஞ் சிவப்பு நூலைக்கட்டி இதுவே முதலில் வந்தது என்றாள்.

*ஆனால், அது தன் கையைத் திரும்ப உள்ளே இழுத்துக் கொண்டபின், மற்ற பிள்ளை வெளிப்பட்டது, அப்பொழுது அவள் நீ கருப்பையைக் கிழித்துக் கொண்டு வந்தவன் அல்லவா என்று சொன்னாள். எனவே அவனுக்குப் பெரேட்சு என்று பெயரிடப்பட்டது. பின் கருஞ்சிவப்பு நூல் கையில் கட்டப்பெற்ற அவன் சகோதரன் வெளிப்பட அவனுக்கு செராகு என்று பெயரிடப் பட்டது. (ஆதியாகமம் : 38:1-30)*

விதவைப் பெண்ணுக்கு அவளது விருப்பத்தின் பிரகாரம் மணம் முடித்து வைக்காமல் தடைபோட்டால் ஏற்படும் விளைவு மிகவும் பார தூரமானதும், தீயதாகவும் அமையும் என்பதற்கு இதைவிட வேறு சாட்சி வேண்டுமோ?

மூத்த மகன் ஏர் என்பவன் இறக்கும் போது அவனுக்கு வாரிசு இல்லை என்பதற்காக அவனுக்கு அடுத்துள்ள மகனான ஓனானை மருமகளுக்கு மணம் முடித்து வைக்கிறார் யூதா. இவளோடு உறவு கொண்டு பிள்ளையைப் பெற்றெடுத்தால் அப்பிள்ளை தனது பெயர் சொல்லும் வாரிசாக இல்லாமல் இறந்துபோன அண்ணனின் பெயர் சொல்லும் வாரிசாக இருக்குமே என்ற ஆதங்கத்தினால் உடலுறவு கொள்ளும் போது விந்தை வெளியில் கொட்டி விடுகிறான் ஓனான். கடவுளின் பார்வையில் இச்செயல் தப்பாக தெரிந்ததால் அவனை சாகடித்து விடுகிறார்.

அடுத்து இளைய மகனாகிய லேசாவை மணம்முடித்து கொடுக்க வேண்டும். சிறுவனாக இருக்கும் அவன் வாலிப பருவத்தையடையும் வரை இவள் காத்திருக்க வேண்டும். இவனை மணமுடித்து கொடுத்தால் இழக்க நேரிடுமோ என பயப்படுகிறார் தந்தை யூதா. பருவ வயதை அடைந்த மைத்துணன் லேசாவை தனக்கு மணம் முடித்துத் தரவில்லை என்பதற்காக முகமூடி வேஷம் போட்டு மாமனாரோடு கள்ள உறவை மேற்கொண்டு தன் உடல் சுகத்தை தீர்த்து பாடம் கற்பித்ததோடு கர்ப்பம் தரித்து பிள்ளையை பெற்றெடுத்து அவனுக்கு முன் நிற்கவேண்டிய நிலை அவளுக்கு உருவாகின்றது.

விதவைப் பெண்ணின் உணர்ச்சிகளை மதித்து உரிய கால்வாயை அமைத்துக் கொடுக்கா விட்டால் என்ன நடக்கும் என்பதற்கு இப்போதனை சிறந்த படிப்பினையாகும். மகனுக்கு வாரிசு தேடப்போய் கடைசியில் மாமனாருக்கு வாரிசை பெற்று கொடுக்க வேண்டியதாயிற்று!

மாமனாராகிய யூதா பஞ்சாயத்துத் தலைவர். அவர் உரிய முறையில் மணம்முடிக்காது கள்ள உறவை தேடிக் கொள்ளும் போது, விதவைப்

பெண் உணர்ச்சிகளை அடக்கி காத்திருப்பாளா? அவளுக்குரிய வாழ்வை அவளது விருப்பத்தின் பிரகாரம் நடாத்திக்கொள்ள அனுமதிக்காவிட்டால் மாமனாரோடு சின்ன வீடு செடப் பண்ண வேண்டிவரும் என்பதற்கு இந் 'நற்செய்தி போதனையே" சிறந்த சான்றாகும்.

மனைவி இன்றி தனிமரமாக (தபுதாரராக) இருக்கும் மாமனார் யூதா, தம் உணர்ச்சிளை அடக்கி தம்கற்பை பாதுகாக்க முடியாமல் விலைமாதை நாடுகிறார். அதே உணர்ச்சிகளை உடைய மருமகள் வேசிதனம் பண்ணி கருதரித்துள்ளாள் எனறு சொன்னதும் 'அவளை இழுத்துக் கொண்டு வாருங்கள். அவள் எரிக்கப்பட வேண்டும்" என்று கர்ஜிக்கிறார். அவள் கருவுக்கு காரணமாவன் நான் தான் என்பதை புரிந்து கொண்டதும் அடங்கி விடுகிறார்.

தனக்கு பிறக்கும் குழந்தை தன்னுடைய பெயர் சொல்லும் வாரிசாக இருக்காது என்பதற்காக மனம் உடைந்து போன ஓனான், மனைவியுடன் உடலுறவு கொள்ளும் போது தன் விந்தை கீழே கொட்டுகிறான். கடவுளின் பார்வையில் இது தப்பாக தெரிந்ததால் ஓனானை சாகடித்து விடுகிறார். ஆனால் மாமன் மருமகளின்; கள்ள உறவும் அதன் மூலம் உருவான கருவும் கடவுளின் பார்வையில் எப்படி தெரிந்தது என்பது பற்றியோ அதற்கான தண்டனைகள் என்ன என்பது பற்றியோ எதுவும் தெரிவிக்கப் படவில்லை. மாறாக இந்த உறவின் மூலம் பிறந்த இரட்டை குழந்தைகள் பற்றியும் அதனது பெயர்கள் பற்றியும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (பார்க்க: ஆதியாகமம்: 38:27-30)

புதிய ஏற்பாட்டில் (New TestmenT) இயேசுவின் பரம்பரை பட்டியல் பற்றி குறிப்பிடும் போது இந்த யூதா, தாமார் என்ற மாமன் மருமகள் உறவின் மூலம் பிறந்த இரு குழந்தைகளான பெரேட்சு மற்றும் செராக் ஆகியோரின் வழிதோன்றலில் இயேசு வந்ததாக குறிப்பிடப்படுகின்றது. (மத்தேயு: 1:3)

விரசமான இக்கதையை எடுத்துக் காட்டிவிட்டு அடுத்த பக்கமாக விதவைகளின் வாழ்வுரிமையைப் பறிக்கும் சட்டத்தை பைபிள் கூறுவதன் நோக்கம் என்ன என்பதை யூத கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்கள் சிந்திக்க வேண்டும்.

## இஸ்லாத்தின் பார்வையில்;

இஸ்லாத்தைப் பொறுத்தவரை விதவைப் பெண்களுக்கான அல்லது விவாகரத்து பெற்ற பெண்களுக்கான மறுமணத்தை ஆர்வமூட்டி அதனை அவர்களது சம்மதத்துடன் மேற்கொள்ளுமாறு கட்டளையிடுகிறது.

ஜாஹிலியா காலத்தில் ஒரு மனிதர் இறந்து விட்டால் அவருடைய மனைவியின் மீது அதிக உரிமை உடையவர்களாக அவருடைய குடும்பத்தார் இருந்துவந்தனர். அவர்களில் சிலர் விரும்பினால் அவளைத் தாமே மணம் முடித்துக் கொள்ளுவர். அல்லது வேறொருவருக்கு மண முடித்துக் கொடுத்து விடுவர். அல்லது மணமுடித்து வைக்காது விட்டு விடுவர். ஆக அவளுடைய வீட்டாரை விட (இறந்த கணவனின் வாரிசுகளான) அவர்கள் தாம் அவள் மீது அதிக உரிமையுடையவர்களாக இருந்தார்கள். அப்போது ‘விசுவாசிகளே! பெண்களை பலவந்தமாக நீங்கள் உரித்தாக்கிக் கொள்வது உங்களுக்கு ஆகுமானதல்ல.’’ என்ற அல்குர்ஆன்: 4:19 வசனம் அருளப்பட்டது என இப்னு அப்பாஸ் (ரழி) அறிவிக்கும் செய்தி புகாரியில் (4579) பதிவாகியுள்ளது.

விதவை பெண்களை பலவந்தமாக அடைய முற்படுவதும் அவர்களது சம்மதமில்லாமல் மணம் முடிப்பதும் மண முடித்து வைப்பதும் தடுக்கப் பட்டது. அவர்களது உணர்வுகள் காயப்படுத்தப் படுவதிலிருந்து காப்பாற்றப் பட்டார்கள்.

‘ஒரு கன்னிப் பெண்ணை அவளுடைய வீட்டார் மணம் முடித்து கொடுக்கும் போது அவளிடம் அனுமதி பெற வேண்டுமா? இல்லையா? என நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர்கள் ஆம். அவளிடம் அனுமதி பெறவேண்டும் என்றார்கள். அவ்வாறாயின் அவள் வெட்கப்படுவாளே என்று நான் கேட்டேன். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அவள் மௌனமாக இருந்தால் அதுவே அவளது சம்மதமாகும் என்றார்கள். (அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி) (நூல்: புகாரி 5137, 6946 முஸ்லிம் 2774)

‘கன்னி கழிந்த பெண்ணை அவளது உத்தரவு பெறப்படாமல் மண முடித்து வைக்க வேண்டாம் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி) (நூல்: முஸ்லிம். 2773)

விதவை பெண் தன் காப்பாளரை விட தனது விஷயத்தில் (முடிவு செய்ய) மிகவும் தகுதி வாய்ந்தவள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: ஆயிஷா (ரழி) (நூல்: (முஸ்லிம். 2775)

வாழக்கைத்துணையை இழந்து விட்டிருப்பவர்கள் தனித்து வாழ்வதை விட துணையோடு வாழ்வதே பாதுகாப்பான அரணாகும் என்று வழி காட்டப்பட்டது. ‘உங்களில் வாழ்க்கைத் துணையில்லாதவர்களுக்கும் உங்களின் ஆண் அடிமைகளிலும் உங்களின் பெண் அடிமைகளிலுமுள்ள நல்லவர்களுக்கும் நீங்கள் திருமணம் செய்து வையுங்கள். (அல்குர்ஆன்: 24: 32)

விதவைப் பெண்களின் வாழ்வுக்காக உழைப்பவனை சத்தியத்தை நிலைநாட்ட போராடுபவனின் அந்தஸ்துக்கு உயர்த்திப் பேசுகிறது இஸ்லாம். ‘விதவைகளுக்காகவும் ஏழைகளுக்காகவும் உழைப்பவன் சத்தியத்தை நிலைநாட்ட போராடுபவன் போலாவான் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) (நூல்: புகாரி 5353)

ஒரு பெண் விவாகரத்து பெற்றபின்பும் கூட அவள் விரும்பும் மண வாழ்வை அமைத்துக் கொள்ள இஸ்லாம் அனுமதிப்பதுடன் அவளை பலவந்தப்படுத்தி அவள் விரும்பாத வாழ்வை அமைத்து கொடுப்பதை கண்டிக்கிறது.

மஃகல் பின் யஸார் (ரலி) என்ற நபித்தோழரின் சகோதரியை அவருடைய கணவர் விவாகரத்துச் செய்து இத்தா காலம் முடிவதற்குள் திரும்ப அழைத்துக் கொள்ளவில்லை. இத்தா முடிந்ததும் விவாகரத்து சட்டப்பூர்வமாகி இருவரும் பிரிந்து விட்டனர். பிறகு இருவரும் சட்டப்;படி இணைந்து கொள்ள விரும்பினர். ஆனால் மஃகல் பின் யஸார் (ரலி) விரும்பவில்லை. அப்போது பின்வரும் அல்குர்ஆன் வசனம் அருளப்பட்டது.

‘நீங்கள் பெண்களை விவாகரத்து செய்து அவர்கள் தங்கள் (இத்தா) காலக்கெடுவின் எல்லையை நிறைவு செய்து (மீண்டும்) அவர்கள் தமக்குள் நல்ல முறையில் உடன்பட்டுக் கொண்டால் (அப்)பெண்கள் தங்களது கணவர்களை (மறுமுறை) மண முடிப்பதை (பொறுப்புதாரி களாகிய) நீங்கள் தடுக்காதீர்கள். உங்களில் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நமபிக்கை கொள்பவர் இதைக் கொண்டு உபதேசிக்கப்படுகிறார். இதுதான் உங்களுக்கு மிகத் தூய்மையானதும் பரிசுத்தமானதுமாகும். அல்லாஹ் தான் நன்கறிந்தவன். நீங்களோ அறியமாட்டீர;கள். (அல்குர்ஆன் 2:232)

விதவை பெண்ணும் விவாகரத்துப் பெற்ற பெண்ணும் அனுபவிக்கப் படும் பொருளாக்கப்படுவதிலிருந்து காப்பாற்றி சமூகத்தில் அந்தஸ்துப் பெற்ற பெண்ணாக வாழவைப்பதை இஸ்லாம் உத்தரவாதப்படுத்துகிறது.

பிறக்கின்ற குழந்தை அதனுடைய தாய் தந்தையின் பெயர் சொல்லும் வாரிசாக இருக்குமே தவிர இன்னுமொருவரின் வாரிசாக அழைக்கப் படமாட்டாது என குர்ஆன் உறுதியாக கூறுகிறது. ‘அவர்களை அவர்களது தந்தையர்(பெயர்)களுடனேயே அழையுங்கள். அதுவே அல்லாஹ்விடத்தில் மிக நீதமானதாகும்’’. (அல்குர்ஆன். 33:5)

# சொத்துரிமை தடுக்கப்பட்டவள்

பெண்ணுரிமை விவகாரத்தில் முக்கிய இடம் வகிப்பது சொத்துரிமை. உலகிலுள்ள அத்தனை சமூகங்களாலும் மதங்களாலும் பெண்களுக்கு மறுக்கப்பட்ட பிரதான உரிமை இது.

சொத்துரிமைப் பற்றிப் பேசும் போதெல்லாம் முதலில் ஆண்களைப் பற்றித்தான் பேசுவார்கள். அவர்களுடைய பங்குகள்; பற்றியே விவாதிப் பார்கள். தந்தைக்குப் பிறகு மகன் வாரிசுக்குரியவன் என்று கூறுவார்கள். பெண்ணைப் பற்றியோ அவளது உரிமை பற்றியோ அவளுக்குரிய பங்கு பற்றியோ யாரும் சிந்திக்க மாட்டார்கள். உலகில் முதன்மை மதம் என்று வர்ணிக்கப்படும் கிறிஸ்தவ மத வேதநூலான பைபிளின் போதனையும் இதனைத்தான் உறுதிப்படுத்துகின்றது.

சொலாபுகாதி என்பவரின் ஐந்து புதல்வியர் மோசேயிடம் வந்து எங்கள் தந்தை செய்த பாவத்திற்காகவே இறந்து போனார். அவருக்கு புதல்வர்கள் இல்லை. அதனால் தந்தையுடைய சொத்;துக்களைப் பெண் பிள்ளை களாகிய எங்களுக்கும் அவருடைய சகோதரர்களுக்கிடையிலும் பங்கு வைத்துத்தர வேண்டும் என்று முறையிடுகிறார்;கள். இதுபற்றி பைபிள் பின்வருமாறு கூறுகிறது.

‘மோசே அவர்கள் வழக்கை ஆண்டவரிடம் கொண்டு வந்தார். ஆண்டவர் மோசேயிடம் கூறியது, சொலாபுகாதின் புதல்வியர் கேட்பது சரியே. அவர்கள் தந்தையின் சகோதரரிடையே அவர்களுக்கும் வாரிசுரிமைச் சொத்தில் பங்கு கொடுத்து அவர்கள் தந்தையின் வாரிசுரிமைச் சொத்து அவர்களுக்குக் கிடைக்கச்செய்.

நீ இஸ்ரயேல் மக்களிடம் கூறு. மகன் இல்லாமலே ஒருவன் இறந்து விட்டால் அவன் உரிமைச் சொத்து அவன் மகளுக்குச் சேரவேண்டும். அவனுக்கு மகளும் இல்லையெனில் அவன் உரிமைச் சொத்தை அவன் சகோதரருக்குக் கொடுக்க வேண்டும்.

அவனுக்கு சகோதரரும் இல்லையெனில் அவன் உரிமைச் சொத்தை அவன் தந்தையின் சகோதரருக்குக் கொடுக்க வேண்டும்.

அவன் தந்தைக்கும் சகோதரர் இல்லையெனில் அவன் உரிமைச் சொத்தை

அவன் குடும்பத்தில் அவனுக்கடுத்த உறவினனுக்குக் கொடுக்க வேண்டும். அவன் அதை உடைமையாக்கிக் கொள்வான் ஆண்டவர் மோசேக்குக் கட்டளையிட்ட படி இது இஸ்ரயேல் மக்களுக்கு நியமமாகவும் விதியாகவும் விளங்கும். *(எண்ணாகமம் 27:1-11)*

இச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள பிரகாரம் தகப்பன் விட்டுச் செல்லும் சொத்துக்கு மகன்தான் வாரிசாவான். தகப்பனுக்குப் பிறகு மகனும் மகளும் இருந்தாலும், மகளுக்கு அச்சொத்தில் எதுவும் கிடைக்காது. மகன் இல்லாமல் மகள் மட்டும் இருந்தால் முழு சொத்துக்கும் அவள் வாரிசாவாள்.

ஒரு குடும்பத்தில் ஒரு சகோதரர் ஒரு சகோதரி அல்லது பல சகோதரிகள் மற்றும் தாயும் இருந்தால் இப்பெண் பிள்ளைகளுக்கும், தாய்க்கும் தகப்பன் விட்டுச் செல்லும் சொத்தில் ஒரு பைசாவிற்குக் கூட உரிமை கொண்டாட முடியாது.

பைபிளில் வாரிசுரிமைச் சட்டம் முழுவதும் ஆண்களை மாத்திரமே கவனத்தில் கொண்டு இயற்றப்பட்டுள்ளதே தவிர பெண்களின் நலன் கருதி அல்ல.

சகோதரன் இல்லாத போது சொத்துக்கு நேரடி வாரிசாக வரக்கூடிய சகோதரி, அச்சொத்தை வைத்துக்கொண்டு தனது தந்தையின் குடும்பத்தினதும் குலத்தினதும் சொந்தங்களில் மணக்க வேண்டுமே தவிர வேறு குடும்பத்தில் அல்லது வேறு குலத்தில் தான் விரும்பியவரை மணக்க முடியாது. காரணம் அச்சொத்து குடும்பத்திற்கு வெளியில் போய் விடும் என்பதேயாகும். ஆண்டவர் மோஸேக்கு இட்ட இக்கட்டளையை இச்சகோதரிகள் செயல்படுத்திய விபரத்தையும் எண்ணாகமம் 36:1-13ல் காணலாம்.

அதுபோல் போவாசு என்பவர் தன்னுடைய உறவினர் பெண்ணான நகோமி ரூத் என்னும் விதவைப் பெண்ணை மண முடிப்பதை பற்றி கூறும்போது, மக்லோனின் மனைவியாயிருந்த மோவாபியப் பெண் ரூத்தை என் மனைவியாக ஏற்றுக் கொள்கிறேன். இறந்தவனின் உரிமைச் சொத்து அவர் பெயரிலேயே தொடர்ந்து இருக்கவும் அப்பெயர் அவருடைய உறவின் முறையிலும் ஊரிலும் நீடித்திருக்கவும் இதைச் செய்கிறேன் என்றார். *(ரூத்து4:10);*

இங்கே ஆண் மகனை முதன்மைப்படுத்தி, அவனது குடும்ப அல்லது குலப் பெயர்களைக் காப்பாற்றுவதைக் கவனத்தில் கொண்டே பெண்ணுக்கு வாரிசுசட்டம் செயற்படுத்துவதைப் பார்க்கலாம்.

இச்சட்டத்தைத்தான் உலகில் பல்வேறு கொள்கை சார்ந்தவர்களும் மதங்களையுடையவர்களும் அவர்களது வசதிக்;கேற்ப பின்பற்றி வருகி றார்கள். யாருமே ஆண் மகனுக்கும், பெண் பிள்ளைக்கும் சொத்தை பங்கீடு செய்து கொடுப்பதில்லை.

முஸ்லிம் பெண்களை குறிவைத்து பெண்ணிலை வாதம் பேசுபவர்கள், பெண்களின் நலனுக்காகக் கூக்குரலிடுபவர்கள் அதற்குத் துணையாக ஊது குழல்களாக இயங்கிவரும் மீடியாக்கள் தங்களது சமூகத்தால் (ஆணாதிக் கத்தால்) நசுக்கப்பட்டுப்போன பெண்களின் சொத்துரிமைகளுக்காக குரல் கொடுப்பதில்லை.

முஸ்லிமல்லாதவர்களின் கைகளில்தான் மீடியாவின் சக்தி; (பலம்) இன்று காணப்படுகிறது. முஸ்லிம் பெண்களின் ஹிஜாப் ஆடையை பிற் போக்குத்தனம் என்றும் அடிமைச் சின்னம் என்றும் விவரணப்படுத்து பவர்கள் அவர்கள் சார்ந்த மதங்களின் கொள்கைகளால் நசுக்கிவிடப்பட்ட அவர்களுடைய பெண்களின் சொத்துரிமைகளைப் பற்றி ஏன் பேசக்கூடாது? விவாதிக்கக் கூடாது?

பெண்களைப் பற்றி புரட்சிக்கீதம் பாடுபவர்கள் அவர்களுக்காக கோஷம் எழுப்புபவர்கள் இந்த அநீதிக்கெதிராக குரல் எழுப்பி மறுசீரமைப்புத் திட்டத்தை ஏன் கொண்டுவரக் கூடாது? தங்களை புத்திஜீவிகள் முற்போக்குவாதிகள் என்று அடையாளப் படுத்துபவர்கள் கூட (ஆண் பெண் இருசாரார்;) இவ்விடயத்தில் ஏன் மயான அமைதி காக்கின்றனர்?

பெண்கள் மூலையில் முடங்கிக் கிடக்காது வீட்டை விட்டு வெளியேற வேண்டும். தொழில் வாய்ப்பில் ஈடுபட வேண்டும் சம அந்தஸ்தை வகிக்க வேண்டும் உயர் பதவிகள் பெற வேண்டும் பிள்ளைகளைப் பெற்றெடுக்கும் இயந்திரமாக மாத்திரம் இருக்கக் கூடாது என்றெல்லாம் கோஷம் எழுப்பியவர்கள் என்ன காரணத்திற்காக இப்போலி கோஷங்களை எழுப் பினார்கள் என்று இப்போதுதான் புரிகிறது.

தந்தை விட்டுச் செல்லும் சொத்தில் உனக்கு எப்பங்குமில்லை. முழுச் சொத்தும் ஆண் மகனுக்குத் தான் போய்ச் சேரும். அவன் தான் அதற்கு சொந்தக்காரன். அவன் போடும் பிச்சையில் நீயும் உன் தாயும் காலம் கழிக்க வேண்டும். அவன் விரும்பினால் சொத்தை பங்கிடுவான் விரும்பினால் பதுக்கி வைப்பான் அது பற்றிக் கேள்வி கேட்க முடியாது.

எனவே உன் வாழ்வுக்கு நீயே வழிதேட வேண்டும் என்று நேரடியாக

பெண்களிடத்தில் கூற முடியாததால் உன்னுடைய உரிமையை ஆண்களாகிய நாங்கள் பறித்துக் கொண்டுள்ளோம் என்பதை வெளிப் படையாக தெரிவிக்க முடியாததால் ஆண்-பெண் சமத்துவம் சரிசமம் என்ற வார்த்தை ஜாலங்களால் பெண்களை வீட்டை விட்டு வெளியேற்றி விட்டார்கள்.

பாவம் இப்பெண்கள் வார்த்தை ஜாலங்களால் மயங்கி தங்களது அடிப்படை உரிமைகளை இழந்து வீதிக்கு வந்து விட்டார்கள். சிலசமயம் இப்பெண்கள் தங்களது மானம் மரியாதையை இழந்து கற்பைப் பறிகொடுத்து, பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகி வீதி வீதியாக அலைந்து தொழில் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு பெண் பருவ வயதையடையும் வரைதான் பெற்றோரது அல்லது சகோதரனது செலவீனங்களில் வாழ முடியும். வயதுக்கு வந்தபின் அவளுடைய வாழ்வுக்கு ஜீவனோபாயத்திற்கு அவளே பொறுப்பாளியாக வேண்டும். எதிர்கால வாழ்வை அமைத்துக் கொள்ளவும் திருமணத்திற் கான செலவினங்கள் மற்றும் ஏற்பாடுகளைக் கவனித்துக் கொள்ளவும் அவள் தொழில் புரிந்தாக வேண்டும் என்ற கட்டாய நிலையை அமைத்து விட்டார்கள்.

ஏன் தொழில் புரிகிறீர்கள்; எதற்காகக் கஷ்டப்பட்டு உழைக்கிறீர்கள் என்று தொழிலுக்குச் செல்லும் பெண்களிடம் கேட்டுப் பாருங்கள். இது எங்களுடைய வாழ்க்கைப் பிரச்சினை நாங்களே சம்பாதித்தாக வேண்டும் எங்களுக்கென்று ஒரு வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டும் எங்களுக் காக யாரும் செலவிட மாட்டார்கள் அதுமட்டு மல்லாமல் எங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்பு இது என்றுதான் கூறுவார்கள்.

எப்பெண்ணும் சந்தோசமாக வேலைக்குச் செல்வதில்லை. அல்லது வீட்டில் இருப்பதனால் நேரம் வீணாகிப் போகுது தொழிலுக்குப் போனால் பணம் கிடைக்கும் என்ற நோக்கத்திற்காகவும் போவதில்லை. அவள் தொழிலுக்குப் போக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்கு ஆளாகித்தான் போகிறாள்.

சமுதாயக் கட்டுக்கோப்பும் மதவாத சிந்தனையும் ஆண்களுக்கு சார் பாகிப் போனதாலும் பெண்களின் சொத்துரிமையை பறித்து வீதிக்கு இறக்கியதாலும் அவர்கள் தொழிலுக்குப் போகிறார்கள்; போக வேண்டும் என்ற கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டுப் போகிறார்கள்.

எனவே, அவர்களை பராமரிக்க அவர்களது செலவினங்களைப்

பொறுப்பேற்க யாருமில்லை என்று நிரூபணமான போது அவர்களது அடிப்படை உரிமையாகிய சொத்துரிமைகளைப் பெற்றுக் கொடுக்க எவரும் முன்வரவில்லை என்ற போதுதான் உழைப்பாளியாக உருமாறினாள் உருமாற்றப் பட்டார்கள்.

பெண்களுக்காக சம உரிமை, சம அந்தஸ்துப் பற்றி பேசுபவர்கள் பெண்கள்மீதுள்ளஅபிமானத்தினாலோஉண்மையானஅக்கறையினாலோ அல்ல. வீட்டில் நேரத்தை போக்குவதை விட தொழிலில் ஈடுபட்டால் சமூகம் முன்னேறும் நாடு வளர்ச்சியடையும் என்ற நோக்கிலுமல்ல என்பது வெள்ளிடைமலை. ஆணாதிக்கத்தின் அடக்குமுறையை மூடி மறைப்பதற்காகப் போட்ட நாடகம் தான் சரிசமம் சமத்துவ கோஷம்.

இன்று பெண்கள் பல துறைகளில்; முன்னேறி பற்பல சாதனைகளையும் படைத்திருக்கிறார்கள். பெண்களின் உரிமைக்காக பல மாதர் சங்கங்களும் இயக்கங்களும் தேசிய, சர்வதேச ரீதியில் செயற்பட்டும் வருகின்றன. போதாக்குறைக்கு பெண்களை நினைவு கூறும் முகமாக சர்வதேசரீதியில் ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 8ம் திகதி மகளிர் தினமும் கொண்டா டப்பட்டு வருகிறது. இத்தனை இருந்தும் இழந்துபோன அடிப்படை உரிமையாகிய சொத்துரிமையை பெற்றுக்கொள்ள முடியவில்லை.

இன்று அவர்கள் தங்களுடைய மதக்கொள்கைகளுக்கு அப்பால் சென்றே தங்களுக்கென பிரத்தியேக உரிமைகளை சாசனங்களை சட்டப் பூர்வமாக்கி அதனூடாக உரிமைப் போராட்டங்களை முன்னெடுக் கிறார்;களே தவிர இழந்து போன உரிமைகளை பெற்றெடுக்க மதக் கோட்பாட்டின் அடிப்படையில் நின்று போராடவில்லை என்பது கசப்பான உண்மை.

தன்னைப் பெற்றெடுத்து வளர்த்து ஆளாக்கிய தந்தையின் சொத்தி லிருந்து ஒரு பங்கு கூட பெறமுடியாமல் அந்நிய பெண்ணாக மாறிப் போன கொடுமையை உலகில் எவரும் தடுத்து நிறுத்த முன்வரவில்லை. இஸ்லாமிய மார்க்கம் மட்டுமே 7ம் நூற்றாண்டில் செய்து முடிக்க முன்வந்;தது.

## இஸ்லாத்தின் பார்வையில்

இஸ்லாத்தின் பிரகாரம் மகன் இருந்தாலும், இல்லா விட்டாலும் தகப்ப னுடைய சொத்துக்கு மகளும் பங்குதாரராக வருவாள் என போதிக்கிறது.

நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் வாழ்ந்த அன்றைய சமூக சூழலில்

ஆண்கள் சகல விதங்களிலும் பெண்களை அடக்கியாண்டு உரிமைகளைப் பறித்துக் கொண்டிருந்தார்கள். 'பலமுள்ளவன் தான் சரியானவன்'' என்ற தத்துவத்தின் அடிப்படையில் தகப்பனோ சகோதரனோ விட்டுச் செல்லும் சொத்துக்களில் பெண்களுக்குரிய பங்கினை வழங்காது பலாத்காரமாகச் சூறையாடிக் கொணடுமிருந்தார்கள்.

தந்தையைப் பறிகொடுத்து விட்டு தவிக்கும் அநாதைப் பிள்ளைகளுக்கும், கணவனை இழந்து விட்டு கண்ணீரோடு வாழும் விதவைப் பெண்களுக்கும் அச்சொத்திலிருந்து எதுவும் கிடைக்க மாட்டாது. இவர்கள் அடுத்தவர்களிடத்தில் கையேந்தி மற்றவர்களின் தயவில் வாழக்கூடிய பரிதாபகரமான நிலை காணப்பட்டது. இந்நிலையில் இக்கொடுமைக்கு ஆரம்ப கட்டத் தீர்வாக அல்லாஹ் பின்வரும் வசனத்தை அருளினான்.

*'உங்களில் ஒருவருக்கு மரணம் நெருங்கும் போது அவர் ஏதேனும் செல்வத்தை விட்டுச் செல்வாராயின் அவர் பெற்றோருக்கும் நெருங்கிய உறவினர்களுக்கும் நல்ல முறையில் (மரண சாசனம்) வஸீய்யத் செய்வது உங்கள் மீது விதியாக்கப்பட்டுள்ளது. பயபக்தியாளர்களுக்கு இது கடமையாகும்.*

*எவர் அ(ம்மரணசாசனத்)தை செவியேற்ற பின்பும் அதை மாற்றி விடுகின்றாரோ அதன் குற்றம் அதை மாற்றியவர்களையே சாறும். நிச்சயமாக அல்லாஹ் யாவற்றையும் செவியுறுபவன் நன்கறிந்தவன்.*

*ஆனால் வஸீய்யத் செய்பவரிடம் அநீதத்தையோ பாவத்தையோ எவரேனும் அஞ்சி (சம்பந்தப்பட்ட) அவர்களுக்கிடையே (வஸீய்யத்தை சீர் செய்து) சமாதானம் செய்தால் அவர் மீது குற்றமில்லை. நிச்சமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவன் நிகரற்ற அன்புடையவன். (அல்குர்ஆன் 2:180-182)*

இதனடிப்படையில் சொத்துக்களை விட்டுச் செல்பவர் தன்னுடைய பெற்றோர் மனைவி பிள்ளைகள் மற்றும் உறவினர்களுக்கு அச்சொத்திலிருந்து பங்கு கிடைக்கக் கூடியதாக மரண சாசனம் செய்ய வேண்டும். அதன் பத்திரமும் எழுதப்பட வேண்டும் என்ற சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. மரண சாசனத்தில் அநீதி காணப் படுமானால் அதனை சீர்படுத்துவதற்கும் உரிமை வழங்கப்பட்டது.

மரணசாசனம் தெரிவிக்க ஏதேனும் பொருளைப் பெற்றுள்ள எந்த முஸ்லிமுக்கும் அவர் தமது மரண சாசனத்தை எழுதி வைக்காமல் இரண்டு இரவுகளைக் கழிப்;பதற்குக் கூட அனுமதியில்லை என நபி

முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு மஸ்ஊத் (ரழி) (நூல்: புகாரி)

இதன் மூலம் பெண்களுக்கும் நியாயமாக பங்கீடு கிடைக்க வழிகாட்டப் பட்டது.

இச்சட்டம் நடைமுறையில் இருந்த காலகட்டத்தில் ஸஅத் இப்னு ரபீஃஆ (ரழி) என்பவரின் மனைவி தனது இரு பெண் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு நபி முஹம்மது (ஸல்) அவர்களிடம் வந்து ‘அல்லாஹ்வின் தூதரே! இதோ இவ்விருவரும் ஸஃத் இப்னு ரபீஆவின் புதல்வியர்கள். இவர்களுடைய தந்தை உங்களுடன் உஹது யுத்தத்திலே பங்குகொண்டு கொல்லப்பட்டு விட்டார்.

இவர்களுடைய தந்தையின் சகோதரர் இவர்களுடைய முழுச் சொத்தையும் எடுத்துக் கொண்டார். இவர்களுக்காக எதையும் விட்டுச் செல்லவில்லை. இவர்களுக்கென சொத்து எதுவும் இல்லையென்றால் அவர்களைத் மணம் முடித்துக் கொடுக்கவும் முடியாது என்று முறையிட்டார்.

இந்த முறைப்பாட்டை செவியேற்ற நபி முஹம்மது (ஸல்) அவர்கள் நிச்சயமாக அல்லாஹ் இதற்கோர் தீர்வை வழங்குவான் எனக் கூறினார்கள். இச்சந்தர்ப்பத்தில் இப்பெண்மணியின் முறையீட்டிற்குப் பதில் கூறுமுகமாக பின்வரும் சட்டம் அருளப்பட்டது.

1. இரு பெண்களுக்குரிய பங்கு போன்றது ஒரு ஆணுக்குண்டு என உங்கள் பிள்ளைகள் விடயத்தில் அல்லாஹ் உங்களுக்கு (சொத்துப் பங்கிடும் முறைப்பற்றி) கட்டளையிடுகின்றான்.
   - (இறந்தவர் விட்டுச்செல்லும் சொத்துக்கு ஆண்பிள்ளை இல்லாமல்) இரண்டு பெண்கள் அதற்கு மேற்பட்டவர்கள் இருந்தால் அவர் விட்டுச்சென்றதில் மூன்றில் இருபங்கு (2/3) அப்பெண்களுக்குண்டு.
   - ஒரே ஒருபெண் மட்டும் இருந்தால் அவளுக்கு அதில் அரைவாசிப் (பங்கு) உரியது.
2. இறந்தவருக்குப் பிள்ளை இருப்பின் அவர் விட்டுச் சென்றதில் (அவருடைய) தாய், தந்தைக்கு ஆறில் ஒரு (1/6) பங்குண்டு.
   - அவருக்கு பிள்ளை இல்லாமல் அவரது பெற்றோரே அவருக்கு வாரிசாக இருப்பின் அவரது தாய்க்கு மூன்றில் ஒரு (1/3) பங்குண்டு. (மீதி தந்தைக்குரியது)

- *இறந்தவருக்கு (பிள்ளைகள் இல்லாமல்) சகோதரர்கள் இருப்பின் அவரது தாய்க்கு ஆறில் ஒரு (1/6) பங்குண்டு.*
- *(இவ்வாறு பங்கீடு செய்வது) அவர் செய்த மரணசாசனம் அல்லது அவரது கடன் ஆகியவற்றை நிறைவேற்றிய பின்னரேயாகும்.*
- *(சொத்துப் பங்கீடு பெறுவதில்) உங்கள் பெற்றோர், மற்றும் பிள்ளைகளில் உங்களுக்கு அதிகமாக பயனளிப்பதில் மிக நெருக்கமானவர்கள் யார்? என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள்.*

  *'இவை அல்லாஹ்வினால் விதிக்கப்பட்டவையாகும். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிந்தவனாகவும், ஞானமிக்கவனாகவும் இருக்கிறான். (அல்குர்ஆன் 4:11)*

***3.*** *(இறந்துபோன) உங்கள் மனைவியருக்கு பிள்ளை இல்லையெனில் அம்மனைவியர் விட்டுச் சென்றதில் (கணவராகிய) உங்களுக்கு அரைவாசி (1/2) உண்டு.*

- *அவர்களுக்கு பிள்ளை இருப்பின் அவர்கள் விட்டுச் சென்றதில் (கணவராகிய) உங்களுக்கு நாலில் ஒரு (1/4) பங்குண்டு. (இது) அவர்கள் செய்த மரணசாசனம் அல்லது கடன் என்பவற்றை நிறைவேற்றிய பின்னரேயாகும.*
- *உங்களுக்கு (கணவனாகிய நீங்கள் இறந்தபின்) பிள்ளை இல்லை யெனில் நீங்கள் விட்டுச் சென்றதில் (மனைவியர்களான) அவர்களுக்கு நாலில் ஒரு (1/4) பங்குண்டு.*
- *உங்களுக்கு பிள்ளை இருப்பின் நீங்கள் விட்டுச் சென்றதில் (மனைவி யர்களான) அவர்களுக்கு எட்டில் ஒரு (1/8) பங்குண்டு. (இது) நீங்கள் செய்த மரண சாசனம் அல்லது கடன் என்பவற்றை நிறைவேற்றிய பின்னரேயாகும்.*

***4.*** *(பெற்றோர் பிள்ளைகள் ஆகிய) வாரிசுகள் இல்லாத ஒரு ஆணோ அல்லது ஒரு பெண்ணோ மரணித்து அவருக்கு ஒரு சகோதரன் அல்லது ஒரு சகோதரி இருந்தால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆறில் ஒரு (1/6) பங்குண்டு. அவர்கள் இதை விட அதிகமாக இருந்தால் மூன்றில் ஒரு (1/3) பங்கில் அவர்கள் பங்குதாரர்களாவார்கள். (இது) பாதிப்பு அற்றவிதத்தில் செய்யப்பட்ட மரணசாசனத்தையும் அல்லது கடனையும் நிறைவேற்றிய பின்னரேயாகும்.*

*இது அல்லாஹ்விடமிருந்துள்ள கட்டளையாகும். அல்லாஹ் யாவற்றையும் நன்கறிந்தவனும் சகிப்புத் தன்மையுடையவனுமாவான். (அல்குர்ஆன் 4:12)*

இவ்வசனம் அருளப்பட்டதும் நபி முஹம்மது (ஸல்) அவர்கள் ஸஃத் இப்னு ரபீஃஆவின் சகோதரரை வரவழைத்து அவர் எடுத்துச் சென்ற சொத்தை பின்வருமாறு பங்கீடு செய்தார்கள்.

இரு பெண் பிள்ளைகளுக்கும் (தலா ஒருவருக்கு 1/3 என்ற பங்கு வீதத்தில்) 2/3 பங்குகளும், இவர்களின் தாய்க்கு எட்டில் ஒருபங்கும் (1/8) பங்கும் மீதியை ஸஃத் (ரழி) அவர்களின் சகோதரர்களுக்கும் கொடுத்தார்கள். (நூல்: அஹ்மத், அபூதாவூத், திர்மிதி, இப்னு மாஜா)

தனக்கும் தனது பெண் பிள்ளைகளுக்கும் சொத்துரிமை விவகாரத்தில் உரிய பங்கு கிடைக்கவில்லையென்று ஒரு பெண் மணி நீதி கேட்டு வந்த போது அப்பெண் மணிக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுக்கவே வாரிசு உரிமைச் சட்டம் அருளப்பட்டது.

மகன், மகள், சகோதர சகோதரி, மனைவி, தாய் தந்தை ஆகியோருக்கு இச்சட்டத்தின் மூலம் சொத்துக்களில் பங்கு கிடைக்க வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டது.

இதைவிட பெண்ணுக்குரிய அந்தஸ்த்தும் உரிமையும் வேறு எங்கும் எந்த மதத்திலும் கோட்பாட்டிலும் காண முடியாது.

இவ்வாரிசுரிமைச் சட்டம் அருளப்பட்டபின் மரண சாசனத்தின்; மூலம் சொத்துக்கள் பங்கீடு செய்யும் சட்டம் ரத்துச் செய்யப்பட்டதோடு வாரிசுகளுக்கு சொத்துக்கள் சம்பந்தமாக மரண சாசனம் செய்யவோ எழுதவோ அல்லது சிபாரிசு செய்யவோ தடுக்கப்பட்டது. வாரிசுகளுக்கு எத்தனை வீதம்பங்கு கொடுக்க வேண்டும் என்று அல்லாஹ் விபரித்துக் கூறியுள்ளானோ அதே அடிப்படையிலும் இத்திருமறைக் குர்ஆனுக்கு விளக்கவுரையாக நபி முஹம்மது (ஸல்) அவர்கள் எப்படிச் செயல்படுத்தி பங்கு வைத்துக் காட்டினார்களோ அதே அடிப்படையிலும் தான் உலகம் அழியும் வரை பங்கீடு செய்யப்பட வேண்டும். இதில் எவரும் மாற்றம் செய்ய முடியாது.

வாரிசுகள் அல்லாத வேறு எவருக்கேனும் அல்லது நற்பணி களுக்கேதும் சொத்தில் குறிப்பிட்ட ஓரளவு கொடுக்க வேண்டும் என்று விரும்பினால் அதுசம்பந்தமாக வஸீய்யத் செய்வது தடுக்கப் படவில்லை.

உதாரணமாக, சமூகத்தின் கல்வி அறிவு வளர்ச்சிக்காக மறுமலர்ச்சித் திட்டங்களுக்;காக அல்லது ஏழை எளியவர்கள் அநாதைகள் விதவைகள் பாதிக்கப்பட்டவர்கள் போன்றோரின் நலன்களைக் கவனத்திற் கொண்டு அவர்களது மேம்பாட்டிற்காக ஒருவர் தனது சொத்தில் குறிப்பிட்ட ஒரு

பங்கை மரணசாசனம் செய்ய விரும்பினால் அவர் தாராளமாக செய்யலாம். ஆனால் மொத்த சொத்தையும் தர்மஸ்தாபனங்களுக்கோ பொது நிருவனங்களுக்கோ எழுதி வைத்து விட முடியாது. அவரது மரண சாசனம் மொத்தச் சொத்தில் மூன்றில் ஒரு பங்கிற்கும் (1/3) அதிகமில்லாமல் இருப்பதையே இஸ்லாம் விரும்புகின்றது.

ஸஃத் இப்னு அபீவக்காஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்; நான் (நபியவர்களின் இறுதி ஹஜ்ஜின் போது மக்காவில்) நோயுற்று விட்டேன். நபி (ஸல்) அவர்கள் என்னை நலம் விசாரிக்க வந்தார்கள். அப்போது நான் அல்லாஹ்வின் தூதரே! என் செல்வம் அனைத்தையும் மரணசாசனம் செய்ய விரும்புகின்றேன். எனக்கு இருப்பதெல்லாம் ஒரு மகள்தான். (எனவே என்சொத்தில்) பாதிப் பாகத்தை மரணசாசனம் செய்யட்டுமா?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள் பாதி அதிகம்தான் என்றார்கள். அப்படி என்றால் மூன்றில் ஒரு பங்கு(1/3) என்று கேட்டேன். மூன்றில் ஒரு பங்கா? அதுவும் அதிகம்தான். நீங்கள் உங்கள் வாரிசுகளை தன்னிறை வுடையவர்களாக விட்டுச் செல்வது அவர்களை மக்களிடம் கையேந்தும்படி ஏழைகளாக விட்டுச் செல்வதை விட நல்லதாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்: புகாரி)

பெண் பிள்ளைகளுக்குரிய சொத்தை பெற்றுக் கொடுப்பதற்கும் தன்னிறைவுள்ளவர்களாக அவர்களை ஆக்குவதற்கும் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் உரிய கவனம் செலுத்தினார்கள்.

வாரிசுகளை நிர்ணயிப்பதில் ஒவ்வொரு சமுதாயத்திலும் வெவ் வேறான அளவு கோல்கள் இருப்பதைப் பார்க்கின்றோம். வாரிசுகள் என்போர் யார்? அவர்கள் எந்த அடிப்படையில் வாரிசுகளாகிறார்கள்? அவர்களில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டியவர்கள் யார்? அவர்களில் யாருக்கு எந்தளவு பங்கு கொடுக்கப் படவேண்டும் என்ற விபரங்க ளெல்லாம் இஸ்லாம் தெளிவுப் படுத்துகிறது.

சொத்துக்களுக்கு மனிதன் சொந்தக்காரனாக இருந்தாலும் அவனாக முடிவு செய்து விரும்பிய விதத்தில் வாரிசுக்ளுக்கிடையில் பங்கிட முடியாது. இஸ்லாம் தயாரித்துத் தந்திருக்கின்ற பட்டியல் முறையில் தான் பங்கீடு செய்ய வேண்டும். சொத்துக்கள் தலைமுறை தலை முறையாக குடும்பத்திற்குள் மாறிவருவதல்ல முக்கியம். அச்சொத்துக் களால் பலபேருடைய வாழ்வும் உரிமைகளும் பாதுகாக்கப்படுவதே முக்கியம்.

எனவே, ஆண் பிள்ளைகளுக்கு மட்டும் மொத்த சொத்துகளையும்

வழங்கிடாமல் பெண்களுக்கும், பெற்றோருக்கும் உடன் பிறந்த சகோதர சகோதரிகளுக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கும் உரிய முறையில் பங்கு வைத்து பங்குதாரர்களாக ஆக்குவதன் மூலமே குடும்பம் சீர்குலையாமல் சீரழிவுக்குள்ளாகாமல் பாதுகாக்க முடியும். ஒருவரை ஒருவர் தாங்கி நிற்கக்கூடிய வகையில் சொத்தைப் பங்கிடுவதன் மூலமே பொருளாதார சுபீட்சத்தினையும் சந்தோசமான கட்டுக்கோப்பான குடும்ப வாழ்வையும் உருவாக்கிட முடியும். அதன் காரணமாகவே வாரிசுகள் என்போர் யார்? என்ற பட்டியலை இஸ்லாம் தயாரித்துத் தந்துள்ளது.

தந்தை மரணித்து விட்டால் அக்குடும்பத்தைப் பராமரிக்கும் பொறுப்பு ஆண் பிள்ளையைச்சாரும். ஆண் பிள்ளை இல்லையென்றால் தந்தையின் சகோதரனைச் சாரும். அவர் அக்குடும்பத்திற்கு- பராமரிப்பாளராக- வாரிசு தாரராக ஆக்கப்படுகின்றார். அதனால் தான் தந்தை விட்டுச் செல்லும் சொத்துக்களை பங்கு வைக்கும் போது அச்சொத்தின் மீதிப் பங்கிற்கு இவர் பங்காளியாக ஆக்கப்படுகின்றார். இதன் மூலம் ஆண் துணையில்லாத குடும்பத்திற்கு இவர் மூலம் பாதுகாப்பு அரண் போடப்படுகின்றது.

இச்சிறப்பான சட்டத்தின் வாயிலாகவே பெண் சமுதாயம் பாதுகாக்கப் படுகின்றது. தங்களுடைய ஜீவனோபாயத்தை தாங்களே தேடிக்; கொள்வதற்காக தங்கள் வாழ்வை வளமாக்கிக் கொள்வதற்காக தொழில் தேடிச்செல்லும் முஸ்லிமல்லாத பெண்களுக்குள்ள நிலை இஸ்லாமியப் பெண்ணுக்கு வராது. வாரிசுரிமைச் சட்டத்தின் மூலம் அவள் பாதுகாக்கப் படுகின்றாள்.

முஸ்லிமான ஒரு பெண்ணும் முஸ்லிமல்லாத ஒரு பெண்ணும் தொழிலுக்குச் செல்வதில் அடிப்படையில் வேற்றுமை உண்டு. முஸ்லி மல்லாத பெண்ணைப் பொறுத்தவரை அவள் அவளது வாழ்வை அமைத்துக்கொள்ள சம்பாதித்தேயாக வேண்டும். அவளைப் பொறுப்பேற்று வளர்ப்பதற்கு வாழ்வை அமைத்துக் கொடுப்பதற்கு எவரும் இல்லை. சொத்தில் ஒரு பங்குமில்லை. ஆகவே அவள் சார்ந்திருக்கும் மதவாதச் சிந்தனையும் சமூகக்கோட்பாடும் அவளுக்கு எதிராக உருவாக்கப்பட் டுள்ளதால் அவள் பருவ வயதை அடைந்த பின் வீட்டை விட்டு வெளியேறியாக வேண்டும். இஸ்லாமிய பெண்ணுடைய நிலை இதை விட முற்றிலும் மாறுபட்டுள்ளது.

அவளை பொறுத்தவரை அவள் வீட்டிலிருந்து கொண்டே சகல உரிமைகளையும் அனுபவிப்பதற்கு வழி காட்;டப்பட்டிருக்கிறாள். வறுமை மற்றும் தேவை அல்லது மேலதிக வருமானம் கருதி அவள்; தொழிலைத்

தேடிக்கொள்ள விரும்பினால் அதற்கு தடையேதும் இல்லை. தங்களது மார்க்க கொள்கை ஒழுக்கவியல் மற்றும் கற்பையும் பேணிக் கொள்ளும் வகையில் நடந்து கொள்ள முடியுமான சூழல் இருக்குமானால் தொழிலுக்குச் செல்லலாம் என்ற அனுமதி அவளுக்கு வழங்கப் பட்டிருக்கிறது.

வாரிசுரிமைச் சட்டத்தின் இறுதி வசனத்தில் அல்லாஹ் கூறும் போது 'உங்கள் சொத்துக்கு மிகவும் நெருக்கமானவர்கள் பயன் தரக்கூடியவர்கள் யார்? என்பதை நீங்கள் அறியமாட்டீர்கள்'' என்று கூறுவதன் விளக்கம் எவ்வளவு அற்புதமானது என்பதனை இங்கே சிந்திக்கக் கடமைப் பட்டுள்ளோம்.

நாம் மேலே இலக்கமிட்டு வரிசைப்படுத்திக் காட்டிய வாரிசுரிமைச் சட்டத்தின் நான்காவது சட்டத்தினை மேலும் தெளிவுபடுத்தி இன்னுமொரு வசனமும் அருளப்பட்டது. இச்சட்டத்தில் ஒருவர் விட்டுச் செல்லும் சொத்துக்கு அதற்கு வாரிசுகளான தாய், தந்தை, மனைவி, பிள்ளைகள் ஆகியோர் இல்லாமல் சகோதர சகோதரிகள் மட்டும் இருந்தால் அவர்களிடையே எப்படி பங்கீடு செய்வது என்று பின்வருமாறு விளக்கப் பட்டது. (இச்சட்டத்திற்கு கலாலா எனப்படும்)

'நபியே! உம்மிடம் அவர்கள் 'கலாலா'' பற்றி மார்க்கத் தீர்ப்புக் கோருகின்றனர். கலாலா குறித்து அல்லாஹ் உங்களுக்குத் தீர்ப்பளிப்பான் எனக் கூறுவீராக.

- பிள்ளை இல்லாத ஒருவன் தனக்கு ஒரு சகோதரி இருக்கும் நிலையில் மரணித்தால் அவன் விட்டுச் சென்றவற்றில் அரைவாசி அவளுக்குண்டு. (ஒரு பெண் மரணித்து) அவளுக்குப் பிள்ளை இல்லாமல் இருந்தால் (சகோதரனான) அவன் அவளுக்கு வாரிசாவான்.
- அவர்கள் இரு பெண்களாக இருந்தால் அவன் விட்டுச் சென்றதில் மூன்றில் இருபங்கு (2/3) அவ்விருவருக்குமுண்டு. அவர்கள் ஆண்கள் பெண்கள் என சகோதரர்களாக இருப்பின் அவர்களில் இரு பெண்களுக் குரிய பங்கு போன்றது ஒரு ஆணுக்குண்டு;. நீங்கள் வழிதவறாது இருப்பதற்காக அல்லாஹ் இவ்வாறு உங்களுக்குத் தெளிவுப் படுத்துகின்றான். அல்லாஹ் யாவற்றையும் நன்கறிந்தவனாவான் (அல்குர்ஆன் 4:176)

வாரிசுரிமை தொடர்பாக இறுதியாக இறங்கிய வசனம் இது என பராஃ (ரழி) அவர்கள் குறிப்பிடுகிறார்கள். (நூல்: புகாரி 4605)

வாரிசுரிமைச் சட்டத்தின் அனைத்து விளக்கங்களையும் அல்லாஹ் விளக்கிக் கூறி விட்டு இச்சட்டத்திற்கு புறம்பாக செயல்படுகின்றவர்கள் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள். நிரந்தரமான நரகில் இருப்பார்கள் என எச்சரிக்கின்றான்.

'இவை அல்லாஹ் விதித்த வரம்புகள் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் எவர் வழிப்பட்டு நடக்கிறாரோ அவரை சுவர்க்கச் சோலைகளில் நுழையச் செய்வான். அவற்றின் கீழ்ப் பகுதியில் ஆறுகள் ஓடும். அதில் அவர்கள் நிரந்தரமாக இருப்பார்கள். இதுவே மகத்தான வெற்றியாகும்.

யார் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் மாறு செய்து அவனது வரம்புகளை மீறுகின்றானோ அவனை நரகத்தில் அவன் நுழைவிப்பான். அவன் அதில் நிரந்தரமாக இருப்பான். அவனுக்கு இழிவு தரும் வேதனையும் உண்டு. *(அல்குர்ஆன் 4:13-14)*

சொத்துக்களை ஆண் பிள்ளைகளுக்கு மட்டும் அல்லது பெண்பிள்ளைகளுக்கு மட்டும் கொடுக்க முடியாது. சகல பிள்ளைகளுக்கும் வாரிசுதாரர்களுக்கும் உரிய முறையில் பங்கு வைத்தாக வேண்டும். மாறு செய்பவர்கள் குற்றத்திற்குரிய வர்களாகிவிடுவர்.

இறந்தவர் விட்டுச் செல்லும் சொத்தை பங்கு வைக்கமுன் அவருடைய கடனையும் மரணசாசனத்தையும் முதலில் நிறைவேற்ற வேண்டும் என்பதும் முக்கிய நிபந்தனையாகும். பெற்றோர் தங்களது பிள்ளைகள் மீது அன்புகாட்டுவதை விட அல்லாஹ் தன்படைப்புக்கள் மீது அதிக அன்புள் ளவனாக உள்ளான் என்பதை இச்சட்டங்கள் காட்டவில்லையா?

பெண்களுக்கு சொத்தில் பங்கு கொடுத்த இஸ்லாம் ஆண்களை விடக் குறைவாக கொடுத்தது ஏன்? என்ற சந்தேகம் எழுவது இயற்கையே அதனை நிவர்த்தி செய்வது நல்லது என நிகை;கிறேன்.

பொருளீட்டுவதானது ஆண்கள் மீது இஸ்லாம் சுமத்தியுள்ள கடமையாகும். பெண்கள் மீது அக்கடமை சுமத்தப்படவில்லை.

ஆண் சம்பாதித்து தன்னுடைய தாய் தந்தை சகோதர சகோதரிகள் மற்றும் மனைவி என்ற வட்டத்திற்குள் உள்ள அக்குடும்பத்தை காப்பாற்ற வேண்டிய பொறுப்புள்ளவனாக இருக்கிறான். அவனுடைய உழைப்பின் கீழேயே பெண் பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறாள். அப்பெண்ணை மணம்முடித்து வைக்க வேண்டிய பொறுப்பும் செலவினங்களும் அவனையே சாரும். கணவனால் தலாக் சொல்லப்பட்டால் மீண்டும்

அவளை பராமரிக்கும் பொறுப்பும் மணமுடித்;து வைக்கும் கடமையும் அவனை வந்தடைகிறது.

இவன் ஒரு பெண்ணை மணக்கும் போது அவளுக்குரிய மஹரை கொடுத்து வாழ்வதற்கான வசதிகளையும் செய்து கொடுத்து தன்னுடைய பிள்ளைகள் மற்றும் குடும்பத்தையும் பராமரிக்கக் கூடியவனாக இருக் கிறான். மனைவி விவாகரத்துச் செய்யப்பட்டால் அப்போதும் அவளுக்கு ஏதேனும் வசதிகள் அல்லது உதவிகள் செய்திட வேண்டும்.

சொத்துப் பங்கீட்டின் போது தந்தை, சகோதரர்கள், கணவர், பிள்ளைகள்;, போன்றோரிடமிருந்து இவளுக்குரிய பங்குகளை பெற்றுக் கொள்ளும் அதே வேளை மகளாக, மனைவியாக, தாயாக, சகோதரியாக இருக்கும் நிலை களிலும் அவளுக்குரிய பங்குகள் வந்து சேர்கின்றன. சொத்தில் தனக் குரிய பங்குகளை பெறும் அதே வேளை கணவராக வருபவரிடத் திலிருந்தும் மஹராகவும் ஒரு பகுதியை பெற்றுக் கொள்ளும் உரிமை படைத்தவளாக திகழ்கிறாள்.

வெளிப்படையாக பாரக்கும் போது பெண் குறைவாகவும் ஆண் அதிகமாகவும் பெறுவதாகவே தோன்றும். இஸ்லாம் கூறும் காரண காரியங்களை கவனித்தால் பெண் அனைத்து உரிமைகளையும் அதிகமாக அனுபவிப்பதை காணலாம்.

பொருளீட்டுவதற்கான உரிமை ஆண்களுக்குக் கொடுக்கப்பட்டடுள்ளது போல் பெண்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. மனைவியுடைய சம்பாத்தி யத்தை அவளுடைய அனுமதியில்லாமல் கணவன் தொடமுடியாது. அவளாக கணவனுக்குக் கொடுத்தால் அது தர்மம் செய்த நன்மை சாரும் என இஸ்லாம் கூறுகிறது.

பெண்களே! நீங்கள் தர்மம் செய்யுங்கள். உங்களின் நகைகளாக இருப்பினும் சரியே! தர்மம் செய்யுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதைக் கேட்ட நான் (என் கணவரான) அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் அவர்களிடம் வந்தேன். நீங்கள் வறுமையில் உள்ளீர்கள். நபி (ஸல்) அவர்கள் தர்மம் செய்யும்படி எங்களுக்கு ஏவினார்கள். எனவே, அவர்களிடம் நீங்கள் சென்று (என் தர்மத்தை நீங்கள்) பெறலாமா? எனக் கேட்டு வாருங்கள். அது சரியாக இருந்தால் என்னிடமிருந்து அதைக் கொடுப்பது போதுமாகும். இல்லையெனில் மற்றவருக்கு நான் அதைக் கொடுப்பேன் என்று கூறினேன். அப்போது அவர் நீபோய் கெட்டு வா என்று கூறினார்.

*நான் நபி (ஸல்) அவர்களின் வீட்டுக்குச் சென்றேன். வீட்டு வாசலில் அன்ஸாரிப் பெண் ஒருவர் நினறு கொண்டிருந்தார். என் தேவையை போலவே அவர் தேவையும் இருந்தது. அப்போது எங்களிடம் பிலால் (ரழி) வந்தார்கள். நாங்கள் அவரிடம் நீங்கள் நபி (ஸல்) அவர்களிடம் சென்று இரு பெண்கள் வந்து தங்களிடம் உள்ள தர்மப் பொருளை தங்களின் கணவர்களுக்கோ, தங்கள் மடியில் வளரும் அனாதைகளுக்கோ கொடுக்க விரும்புவது கூடுமா? என்று உங்களிடம் கேட்பதற்காக வாசலில் நிற்கின்றோம் என்ற செய்தியை கூறுங்கள். நாங்கள் யார் என்ற விபரத்தை அவர்களிடம் கூறாதீர்கள் என்று கூறினோம்.*

*பிலால் (ரழி) நபி (ஸல்) அவர்களிடம் சென்று இது பற்றிக் கேட்டார்கள். அப்போது அவரிடம் நபி (ஸல்) அவர்கள் அவ்விரு வரும் யார்? என்று கேட்டார்கள். ஒருவர் அன்ஸாரிப் பெண், மற்றவர் ஸைனப் என்று பிலால் (ரழி) கூறினார்கள். எந்த ஸைனப் என்று நபி (ஸல்) கேட்க, அப்துல்லாஹ்வின் மனைவி என பிலால் (ரழி) கூறினார்கள். அப்போது நபியவர்கள் 'உறவினரை ஆதரித்தல், தர்மம் செய்தல் என இரண்டுவகைக் கூலிகள் அந்த இரண்டு பெண்களுக்கும் உண்டு என்று கூறினார்கள். (அறிவிப்பவர்: ஸைனப் அத்தகபீ (ரழி), (நூல்: புகாரி-1466, முஸ்லிம்-1000)*

*நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் உருவாக்கி வளர்த்து விட்ட பெண் சமூகத்தின் சுதந்திரத்தை பாருங்கள். சட்டரீயாக சொத்துப் பங்கீட்டின் ஒழுங்குகள் அனைத்தும் செய்து கொடுக்கப்பட்ட பிறகும் அவள் சம்பாதிக்கும் உழைப்பில் இருந்து கணவனுக்கு கொடுக்க வேண்டிய கட்டாயம் இல்லை. அவளாக விரும்பி கொடுத்தால் தர்மத்துடைய நன்மை கிடைக்கும் என்று கூறுகிறார்கள். பெண்களுக்கான உரிமைகளை வழங்கி அவர்களை வாழ வைத்த மார்க்கம் எது என்பதை இப்போதாவது உங்கள் மன சாட்சி பிரகாரம் கூறுங்கள்.*

# மார்க்கம் படிக்க தகுதியற்றவள்

மதத்தின் பெயரால் பெண்கள் அடக்கி ஒடுக்கப்படுகிறார்கள் என்பதற்கு இன்னுமொரு சாட்சி தான் தேவாலயங்களில் வேதாகமம் படிக்கும் போது பெண்கள் தலையை மூடிக் கொண்டு அமைதியாக இருக்க வேண்டும்; தங்களுக்கு ஏற்படுகின்ற சந்தேகங்களுக்கு விளக்கம் கேட்கக் கூடாது. ஏதாவது கற்றுக்கொள்ள விரும்பினால் வீட்டுக்குப் போய் கணவன் மார்களிடத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். மார்க்க உபதேசம் பண்ணவும் கூடாது. கணவனின் அதிகாரத்திற்கு உட்பட்டே அடங்க வேண்டும். தேவாலயங்களில் பேசுவது கேள்வி கேட்பது அயோக்கியத் தனமாகும் என்று விமர்சிக்கிறது பைபிள்.

‘ஜெபம் பண்ணுகிற போதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற போதாவது, தன் தலையை மூடிக்கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரியும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள். (இழிவுபடுத்துகிறாள்). அது அவளுக்கு தலை சிரைக்கப்பட்டது போலிருக்குமே. *(1கொரிந்தியர்11: 3-5)*

சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக் கடவர்கள். பேசும் படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை. அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும். வேதமும் அப்படியே சொல்கிறது அவர்கள் ஒரு காரியத்தை கற்றுக் கொள்ள விரும்பினால் வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக் கடவர்கள். ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கிய மாயிருக்குமே. *(1சொரிந்தியர். 14:34)*

ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து அமைதலோடு கற்றுக்கொள்ளக்கடவள். உபதேசம் பண்ணவும் புருஷன் மேல் அதிகாரஞ் செலுத்தவும் ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை. அவள் அமைதலாயிருக்கவேண்டும். *(1திமேத்தியு 2:11,12)*

தேவாலயத்தில் அனைத்து விதமான சுதந்திரங்களும் ஆண்களுக்குத் தான் உண்டு. அங்கே ஆண்கள் தான் பேசுவார்கள் பெணகள் பேச முடியாது. பெண்கள் முக்காடு போட்டு அமைதியாக இருந்து விட்டு வீட்டுக்கு வந்து கணவர்களிடம் தான் பேச வேண்டும் என்பது மதரீதியான அடக்கு முறையை தவிர வேறென்ன?

## இஸ்லாத்தின பார்வையில்

இஸ்லாத்தைப் பொறுத்தவரை முஸ்லிம் பெண்கள் பள்ளி வாசலுக்கு வருவது மார்க்கத்தைப் பற்றி பேசுவது போதிப்பது கேள்விகள் கேட்பது அயோக்கியத்தனம் என்று பழிக்கவுமில்லை அடக்கவுமில்லை. மாறாக பெண்களும் இஸ்லாமிய மார்க்கத்தை; கற்க வேண்டும்; அதனை அடுத்தவர்களுக்கு எத்தி வைக்க வேண்டும்; பிரச்சாரம் செய்ய வேண்டும்; தங்களுக்கு ஏற்படுகின்ற சந்தேகங்களைக் கேட்டு நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்று தான் ஆர்வமூட்டி தூண்டுகின்றது.

*ஒவ்வொரு முஸ்லிமும் (ஆணும் பெண்ணும்) கல்வியைத் தேடிப் பெற்றுக் கொள்வது கடமை என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அனஸ் இப்னு மாலிக் (ரலி) (நூல்: இப்னுமாஜா.220)*

மார்கக் கல்வி, உலகக் கல்வி என்ற இரு கல்வியையும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் கற்றேயாக வேண்டும். கல்வி கற்பது அடிப்படை உரிமை என்பது மட்டுமன்றி கடமையென்றும் நபி முஹம்மது (ஸல்) அவர்கள் விளக்கப் படுத்துகிறார்கள்.

*‘நம்பிக்கையாளர்களான ஆண்களும் பெண்களும் அவர்களில் சிலர் மற்றும் சிலருக்கு உதவியாளர்களாவார். அவர்கள் நன்மையை ஏவுகின்றனர். தீமையை விட்டும் தடுக்கின்றனர். தொழுகையை நிலை நாட்டி ஸகாத்தையும் கொடுத்து அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட்டு நடக்கின்றனர். அவர்களுக்கே அல்லாஹ் அருள்புரிவான்; நிச்சயமாக அல்லாஹ் யாவற்றையும் மிகைத்தவன் ஞானமிக்கவன். (அல்குர்ஆன்:9:71)*

அல்குர்ஆனின் இவ்வசனத்தின் மூலம் சமுதாயத்தின் மிக முக்கிய ஒரு பொறுப்பு ஆண் பெண் இரு சாரார் மீதும் மதரீதியாக சுமத்தப் படுகிறது. ‘நன்மையை ஏவித் தீமையைத் தடுத்தல்’’ என்பதே அப்பொறுப்பு. இப்பொறுப்பை நிறை வேற்ற இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட ஆணும் பெண்ணும் தயாராக வேண்டும் என்ற கட்டளை தெளிவாகவே பிறப்பிக்கப் படுவதோடு பெண்கள் வாய் மூடி மௌனிகளாக முடங்கி விடக்கூடாது என்ற உத்தரவும் இடப்படுகிறது.

ஆரோக்கியமான ஒரு சமூக கட்டமைப்பை கட்டியெழுப்புவதற்கு ஆண், பெண் இருபாலாரது ஒத்துழைப்பும் இன்றியமையாதது என்பதை இவ்வசனத்தின் மூலம் அல்லாஹ் உலகிற்கு எடுத்துக் காட்டுகின்றான்.

ஆண்களுக்கு முன்னால் பெண்கள் அடங்கி, ஒடுங்கி வாய்மூடி இருக்க

வேண்டும் என்ற மௌடீகக் கொள்கையையும் இவ்வசனத்தின் மூலம் அல்லாஹ் தகர்த்தெறிகிறான்.

'நன்மையை ஏவித் தீமையைத் தடுத்தல்'' எனபது ஒரு சாதாரண பணியல்ல; பொறுப்பு வாய்ந்த பணி. சமூகத்தின்; உயர்வு தாழ்வை (எழுச்சி வீழ்ச்சியை) கொண்டிருக்கும் இப்பணியின் மூலம் சமூக விழிப்புணர்வை இஸ்லாம் ஆரம்பித்து வைத்தது!

தனிமனித குடும்ப சமூக வாழ்வு சீராக அமைய வேண்டுமானால் அவ்வாழ்வைப் பாழ்படுத்தக்கூடிய இஸ்லாத்திற்குப் புறம்பான அத்தனை காரியங்களையும் களைந்து சூழலைப் பாதுகாத்திட வேண்டும்.

மார்க்கம் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் மாத்திரமின்றி சமுதாயத்தின் அனைத்துத் துறைகளிலும் இப்பணியை செய்தாக வேண்டும். இப்பணியின் முழுமையான வெற்றி ஆண், பெண் இரு பாலாரின் பங்களிப்பில்தான் தங்கியுள்ளது.

ஆத்மீக, லௌகீக வாழ்வுக்கு வழிகாட்டக் கூடிய மார்க்கப் போதனைகளை ஆண்களும் பெண்களும் படித்து செயற்படுத்தி மற்றவர் களுக்கும் எத்திவைத்து ஒழுக்கமுள்ள சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பது இஸ்லாத்தின் அடிப்படை கொள்கையாகும்.

முஸ்லிம் பெண்கள் அடுப்பங்கரையில் அடங்கி இருக்க வேண்டும்; முக்காடு போட்டு முடங்கி விடவேண்டும் எனறு போதிக்கவில்லை. ஆணும் பெண்ணும் இஸ்லாம் கூறும் ஒழுக்க வரம்பிற்குள்ளும் வரையரைக்குள்ளிலிருந்தும் பணியாற்ற பணிக்கிறது.

நபி முஹம்மது (ஸல்) அவர்கள் உருவாக்கிய இஸ்லாமிய சமூகத்தில் பெண்கள் ஐவேளை தொழுகைகளுக்கு பள்ளிக்கு போய்வருவதற்கு அனுமதிக்கப்பட்டதன் மூலம் நாளாந்தம் நபிகளாரைச் சந்தித்துத் தங்களுடைய சந்தேகங்களுக்கு விளக்கங்களை கேட்டு நிவர்த்தி செய்து கொள்வார்கள். அது மட்டுமன்றி வாரத்தில் ஒரு நாளில் பிரத்தியேகமான வகுப்பு நடாத்துமாறும் வேண்டிக் கொண்டார்கள்.

பெண்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து உங்களிடம் எப்போதும் ஆண்களே (மார்க்கத்தை படித்துக்கொள்ள) மிகைத்து நிற்கிறார்கள். எனவே எங்களுக்கென்று ஒரு நாளை ஏற்பாடு செய்யுங்கள் என கேட்டுக் கொண்டார்கள். நபி(ஸல்) அவர்கள்பெண்களுக்கெனஒருநாளைவாக்களித்து அந்நாளில் அவர்களைச் சந்தித்து அவர்களுக்குப் போதனை செய்து மார்க்கக் கட்டளைகளை ஏவினார்கள். அவர்களது உரையில் 'உங்களில் ஒரு பெண் தன் குழந்தைகளில் மூவரை (மரணத்தின் மூலம்) இழந்து விட்டாள் என்றால்

அக்குழந்தைகள் அப் பெண்ணை நரகத்துக்குச் செல்லாமல் தடுத்து விடக் கூடியவர்களாக இருப்பார்கள்'' என்று கூறினார்கள்.

அப்போது (கூட்டத்தில் இருந்த) ஒரு பெண்மணி இரண்டு குழந்தைகளை ஒருத்தி இழந்து விட்டால்? என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் இரண்டு குழந்தைகளை இழந்து விட்டாலும் தான் என்று கூறினார்கள். அறிவிப்பவர்: அபூ ஸயீதுல் குத்ரி (ரலி) (நூல்: புகாரி)

இறைத் தூதர் நபி முஹம்மது (ஸல்) அவர்கள் மார்க்கப் போதனை செய்யும் போது வாய்மூடி மௌனிகளாக இருக்க வேண்டும். கேள்விகள் கேட்கக்கூடாது. அப்படிக் கேட்பது பாவமானது அயோக்கியமானது என்று கூறப்படவுமில்லை, கண்டிக்கப் படவுமில்லை. மாறாக சந்தேகத்திற்கான தெளிவு வழங்கப்பட்டது.

ஸுனன் திர்மிதி எனும் நூலில் உம்மு ஸலமா (ரலி) என்ற பெண்மணி பின்வருமாறு அறிவிக்கிறார்கள். நான் நபிகளாரிடம் வந்து அல்குர்ஆனில் கூறப்படும் அனைத்து செய்திகளும் ஆண்களைக் குறித்தே கூறப்படுவதாக நான் காண்கிறேன். பெண்களைப் பற்றி எதுவும் குறிப்பிடுவதாக காணவில்லையே என்று கூறினார். அப்போது அல்லாஹ் பின்வரும் வசனங்களை இறக்கி வைத்தான்.

நிச்சயமாக முஸ்லிமான ஆண்களும் முஸ்லிமான பெண்களும் நம்பிக்கையாளர்களான ஆண்களும் நம்பிக்கையாளர்களான பெண்களும் வழிப்படும் ஆண்களும் வழிப்படும் பெண்களும் உண்மை பேசும் ஆண்களும் உண்மை பேசும் பெண்களும் பொறுமையாளர்களான ஆண்களும் பொறுமையாளர்களான பெண்களும் உள்ளச்சமுடைய ஆண்களும் உள்ளச்சமுடைய பெண்களும் தர்மம் செய்யும் ஆண்களும் தர்மம் செய்யும் பெண்களும் நோன்பு நோற்கும் ஆண்களும் நோன்பு நோற்கும் பெண்களும் தமது கற்பைக் காத்துக் கொள்ளும் ஆண்களும் தமது கற்பைக் காத்துக் கொள்ளும் பெண்களும் அல்லாஹ்வை அதிகம் நினைவு கூறும் ஆண்களும் அல்லாஹ்வை அதிகம் நினைவு கூறும் பெண்களும் ஆகியோருக்கு அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான கூலியையும் தயார் செய்து வைத்துள்ளான். (அல்குர்ஆன் 33:35)

அல்குர்ஆனில் ஆண்களையும் பெண்களையும் குறித்து பேசுவதற்குப் பொதுவான வசன அமைப்புக்கள் இருந்தாலும் பெண்களைக் குறித்துக் காட்டக் கூடிய தனியான வார்த்தை பிரயோகம் இல்லை என்பதை கண்டறியும் அளவுக்கு வேத வசனங்களை பெண்கள் ஆராய்ந்து அது சம்பந்தமாக நபிகளாரிடம் வந்து கேள்வியும் கேட்கிறார்கள் என்றால்

பெண்களுக்கு இஸ்லாம் வழங்கியுள்ள மதசுதந்திரம் எப்படிப்பட்டது என்பதைச் சிந்திக்க வேண்டும்.

கவ்லா பின்த் ஸஅலபா (ரலி) என்ற பெண்மணி நபி முஹம்மத் (ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே! என் கணவர் 'நீ என் தாயின் முதுகைப் போல் இருக்கிறாய்'' என்று கூறி என்னை விலக்கி வைத்து விட்டார் என்று முறை யிட்டார்.

என் தாய் எனக்கு மனைவியாக இருக்க விலக்கப் பட்டிருப்பது போல் நீயும் எனக்கு விலக்கப்பட்டவளாவாய் என்று கூறுவதைத் தான் 'நீ என் தாயின் முதுகைப் போல் இருக்கிறாய்'' என்று குறிப்பிடுவதாகும். இவ்வாறு கூறிய பின் கணவன் மனைவியை ஒதுக்கி விடுவார். இதனைக் குறித்துத் தான் அந்த சஹாபிப் பெண்மணி நபிகளாரிடம் முறையிட்டு தீர்வை வேண்டினார். அப்போது அல்லாஹ் பின்வரும் வசனங்களை அருளினான்.

(நபியே!) தனது கணவர் பற்றி உம்மிடம் தர்க்கித்து அல்லாஹ்விடம் முறையிடுகின்றவளின் பேச்சை நிச்சயமாக அல்லாஹ் செவியேற்று விட்டான். மேலும் அல்லாஹ் உங்கள் இருவரினதும் உரையாடலையும் செவியேற்றுக் கொண்டிருக்கின்றான். நிச்சயமாக அல்லாஹ் செவி யுறுபவன் பார்ப்பவன்.

உங்களில் எவர்கள்தமது மனைவியரைத்தாய்க்கு ஒப்பிட்டுக்கூறுகிறார்களோ அவர்கள் இவர்களது தாய்மார்கள் இல்லை. இவர்களின் தாய்மார்கள் இவர்களைப் பெற்றெடுத்தவர்;களே. நிச்சயமாக இவர்கள் வெறுக்கத்தக்க பேச்சையும் பொய்யையுமே கூறுகின்றனர். நிச்சயமாக அல்லாஹ் பிழைகளை பொறுப்பவன். மிக்க மன்னிப்பவன். (அல்குர்ஆன்: 58:1-4)

ஒரு பெண்ணின் வாழ்வியல் உரிமை சம்பந்தமாக எழுந்த பிரச்சனைக்கு தீர்வாகவே வேதவசனங்கள் அருளப்பட்டு அதன் மூலம் அன்றைய ஜாஹிலியாகால மௌடீகத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கப் பட்டது.

## ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது:

'(மறுமை நாளில்) விசாரணையின் போது கணக்கு வாங்கப்படும் எவரும் அழிந்து விடுவர் என நபி (ஸல்) அவர்கள் கூறிய போது நான்; அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்னை அல்லாஹ் தங்களுக்கு அர்ப்பணமாக்கட்டும். குர்ஆனில் (சூரா இன்ஷிகாக் அத்தியாயம் 84: வசனம்7-8ல்) 'எவரது பதிவேடு அவரது வலது கையில் வழங்கப்படுகிறதோ அவர் இலகுவான முறையில் விசாரணை செய்யப்படுவார்'' என்று

அல்லாஹ் கூறுகிறானே என்று கேட்டேன். அப்போது நபி (ஸல்) அவர்கள் இந்த வசனம் மனிதர்கள் புரிந்த நன்மை தீமைகளின் பட்டியலை அவர்களுக்கு முன்பாக சமர்பிக்கப்படுதலை குறிப்பிடுவதாகும். கேள்வி கணக்கின் போது எவர் துருவித் துருவி விசாரிக்கப்படுவாரோ அவர் அழிந்தார் என கூறினார்கள். (நூல்: புகாரி4939)

வேதத்திலுள்ளதைக் குறித்து எக்கேள்வியும் கேட்கக் கூடாது என்று நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் கண்டிக்கவில்லை. மாறாக விளக்கப் படுத்தினார்கள். பெண்களின் அறிவை மேம்படுத்திடும் அத்தனை வழி களையும் இஸ்லாம் திறந்து கொடுத்துள்ளது. ஆண்களை முதன்மை படுத்தி அவர்களின் தேவைகளுக்காக பெண்கள் படைக்கப்பட்டார்கள் என கூறி இஸ்லாம் பெண்களை அடிமையாக்கிட வில்லை. சமஉரிமைகளை இரு சாராருக்கும் வழங்கி ஆன்மீக அந்தஸ்தினையும் ஆணுக்கு சமமாக வழங்கி போற்றுகிறது.

'உங்களில் ஆணாயினும் பெண்ணாயினும் நற்செயல் புரிவோரின் எச்செயலையும் நான் வீணாக்க மாட்டேன் என்று அவர்களது இரட்சகன் அவர்களுக்குப் பதிலளித்தான். (அல்குர்ஆன் 3:195)

ஆணோ பெண்ணோ நம்பிக்கையாளராக இருக்கும் நிலையில் யார் நல்லறங்கள் புரிகின்றார்களோ அவர்கள் சுவர்க்கத்தில் நுழைவார்கள். அவர்கள் சிறிதளவும் அநியாயம் செய்யப் படமாட்டார்கள். (அல்குர்ஆன் 4:124)

உலக மக்களின் இறுதி வேதநூலான அல்குர்ஆனில் பெண்களின் உரிமைகள் சம்பந்தமாக பேசக்கூடிய 'அந்நிஸா'' (பெண்கள்) என்ற பெயரில் தனி அத்தியாயமும் மர்யம் (அலை) அவர்களின் பரிசுத்தமான வாழ்வை எடுத்துக் கூறக்கூடிய 'மர்யம்'' என்ற பெயரில் தனி அத்தியாயமும் உண்டு. வேதத்தில் பெண்களுக்கென தனிஅந்தஸ்தும் மரியாதையும் கொடுக்கப்பட்டுள்ளது.

இறைத் தூதரின் மறைவுக்கு பின் அவர்களுடைய மனைவி அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் மூலமும் ஏனைய பெண்கள் மூலமும் நிறைய மார்க்க அறிவுகள் (ஹதீஸ் விளக்கங்கள்) இச்சமூகத்திற்கு கிடைத்தன. பெண்மையை காரணம் காட்டி அவர்களுடைய விளக் கத்தினை எவரும் புறக்கணிக்கவுமில்லை ஆண்களுக்கு முன் அடங்கியிருக்க வேண்டும் என உத்தரவு இடவுமில்லை. பெண் சமூகத்தை கௌவரவப்படுத்தி வாழவைத்த பெருமை இஸ்லாத்திற்கே உண்டு.

# அடிமைச் சின்னம் அவள்

பெண்கள் தேவாலயத்தில் கர்த்தரின் போதனைகளை செவி யேற்கும் போது தலையை மூடி இருக்கவேண்டும் என பைபிள் ஒழுக்கம் போதிக்கிறது. இது கர்த்தருக்கு செய்யும் கண்ணிய மாகவும் கணவன் மார்களுக்கு அடங்கியிருக்கும் அடையாளமாகவும் அறிவிக்கப்படுகிறது.

ஜெபம் பண்ணுகிற போதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற போதாவது, தன் தலையை மூடிக்கொண்டிருக்கிற எந்தப் புருஷனும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறான். (இழிவு படுத்துகிறான்.)

ஜெபம் பண்ணுகிற போதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற போதாவது, தன் தலையை மூடிக்கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரியும் தன் தலையைக் கனவீனபபடுத்துகிறாள். (இழிவுப்படுத்துகிறாள்). அது அவளுக்கு தலை சிரைக்கப்பட்டது போலிருக்குமே.

ஸ்திரீயானவள் முக்காடிட்டுக் கொள்ளாவிட்டால் தலை மயிரையும் கத்தரித்துப் போடக் கடவள். தலைமயிர் கத்தரிக்கப் படுகிறதும் சிரைக்கப் படுகிறதும் ஸ்திரீக்கு வெட்கமானால் முக்காடிட்டுக் கொண்டிருக்கக் கடவள். புருஷனானவன் தேவனுடைய சாயலும் மகிமையுமாயிருக்கி றபடியால், தன் தலையை மூடிக்கொள்ள வேண்டுவதில்லை. ஸ்திரீயானவள் புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள்.

புருஷன் ஸ்திரீயிலிருந்து தோன்றினவனல்ல, ஸ்திரீயே புருஷ னிலிருந்து தோன்றினவள். புருஷன் ஸ்திரீக்காகச் சிருஷ்டிக்கப் பட்டவனல்ல, ஸ்திரீயே புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப் பட்டவள். ஆகையால் தூதர்களினிமித்தம் ஸ்திரீயானவள் தலையின்மேல் முக்காடிட்டுக் கொள்ளவேண்டும். (1கொரிந்தியர்.11 :4-10)

இந்த மொத்த வசனங்கள் பெண்கள் ஆண்களின் அடிமைச் சின்னங்கள் என்பதை தெளிவாக காண்பிக்கிறன.

பெண் ஆணுக்காக படைக்கப்பட்டதால் ஆணுக்கு அடங்கியிருக்க வேண்டியவளாகவும் அதன் அடையாளமாக தலையை மூடியிருக்க வேண்டியவளாகவும் ஏவப்பட்டிருக்கிறாள். தலையை மூடுவது வெட்க மானால் மொட்டையடிப்பது மேலானது என கண்டிக்கப்படுகிறாள்.

தேவாலயத்திற்குள் தலைமூடுவதன் அவசியம் பற்றி வலியுறுத்தப் படுகின்ற அளவுக்கு தேவாலயத்திற்கு வெளியில் நடமாடும் போது தலை மூடுவதன் அவசியம் பற்றி கூறப்படவில்லை. உண்மையில் கிறிஸ்தவ பெண்கள் வாரத்தில் ஒருசில மணித்தியாளங்கள் தேவாலயத்திற்குள் இருக்கிறார்கள். அப்போது தலையை மூடுவதன் அவசியத்தை விட ஏனைய நேரங்களில் அதிகளவு மூடிக் கொண்டிருக்க வேண்டிய தேவை யுள்ளது. அதாவது பெண்கள் தேவாலயத்திற்குள் கடைப்பிடிக்கும் ஒழுக்கத்தை தேவாலயத்திற்கு வெளியில் -பொது வாழ்வில்- அதிகளவு கடைபிடிக்க வேண்டியுள்ளது.

பொதுவாக கிறிஸ்தவ பெண்கள் இவ்வொழுக்கத்தை கடை பிடிக்கா விட்டாலும் கர்த்தருக்காக தங்கள் வாழ்வை அர்பணித்த பாதிரிமார்களும் கண்ணியாஸ்திரிகளும் *(Sistors)* கடைபிடிக்கிறார்கள். தலையிலிருந்து பாதம் வரை மறைத்து ஒழுக்கம் பேணுகிறார்கள். இதன் மூலம் கர்த்தரின் அன்பையும் நேசத்தையும் பெறமுடியும் என நம்புகிறார்கள். உண்மையான கிறிஸதவ பெண்களின் அடையாளமே இக்கண்ணியாஸ்திரிகளின் வாழ்வு முறைதான் என்பதை காண்பிக்கிறார்கள். ஒரு கிறிஸ்வரைப் பொறுத் தவரை கண்ணியாஸ்திரிகளின் ஆடை முறையைத்தான் தன்னுடைய மகள் மனைவி மற்றும் குடும்பத்தாரிடையே கொண்டு வருவார். கர்த்தருக்கு உவப்பானதை விட்டுவிட்டு தங்களுக்கு உவப்பானதை தேர்ந்தெடுத்து அணிவதோ வாழ்வதோ உண்மையான கிறிஸ்தவத்திற்கு அடையாளமாகாது.

கிறிஸ்தவ உலகில் பெண்களின் ஆடை கலாசாரத்தை நாசப்படுத்தி அரைகுறை ஆடையுடன் உலாவ விட்டு விளம்பர பண்டமாகவும் ஆபாச சின்னமாகவும் ஆக்கியிருக்கிறார்கள்.

பெண்களின் ஆடைகளை குறைத்து அழகுப்படுத்தி நவீனப் படுத்தி பணம் சம்பாதிக்கும் ஈனத்தனமான செயலைத்தான் நாகரீகமாக கருது கிறார்கள். தங்களின் உடல் பரிமாணங்கள் பலவழிகளில் காட்சிப்படுத்தப் பட்டு ருசிக்கப்படுகிறது என்று இந்தப் பெண்கள் அறிந்து கொண்டே தாராளமாக நடக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் சிலுவையை கழுத்தில் மாட்டிக் கொண்டு சினிமாக்களிலும் நாடகங்களிலும் விளம்பரங் களிலும் குறைந்த ஆடைகளுடன் திறந்த மேனிகளுடன் பெண்கள் போஸ் கொடுக்கிறார்கள். இதுதான் கிறிஸ்தவ பெண்களின் அடையாளங்களா?

அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு எதுவும் தங்கியிராத வகையில் பெண்களின் நிலையை உருவாக்கியவர்கள் யார் என்பதை கிறிஸ்தவ உலகம் பதில் சொல்ல வேண்டும்.

பைபிளின் பழைய ஏற்பாட்டை பார்க்கும் போது பெண்ணின் நாணம் குறித்து இப்படி சொல்கிறது.

'ஈசாக்கு சாயங்கால வேளையிலே தியானம் பண்ண வெளியிலே போயிருந்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்த போது ஒட்டகங்கள் வரக்கண்டான்.

ரெபெக்காலும் தன் கண்களை ஏறெடுத்து ஈசாக்கை கண்டபோது ஊழியக்காரனை நோக்கி அங்கே வெளியிலே நமக்கு எதிராக நடந்து வருகிற அந்த மனிதன் யார் என்று கேட்டாள். அவர் தான் என் எஜமான் என்று ஊழியக்காரன் சொன்னான். அப்போழுது அவள் ஒட்டகத்தை விட்டிறங்கி முக்காடிட்டு கொண்டாள். (ஆதியாகமம்: 24: 63-65)

ஈசாக்கு எனும் அன்னிய ஆண்மகனை கண்டபோது ரெபெக்கா எனும் பெண் நாணத்தின் அடையாளமாக தம்மை மூடிக் கொண்டதாக முக்காடிட்டு கொண்டதாக இவ்வேதவரிகள் கூறுகின்றன. யூத கிறிஸ்தவ பெண்கள் இந்நாணத்தை தவற விட்டது ஏன்?

'நான் உங்களுக்குச் சொல்கிறேன். ஒரு ஸ்திரியை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடு விபச்சாரம் செய்தா யிற்று. உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால் அதைப்பிடிங்கி எறிந்து விடு. உன்சரீரம் முழுவதும நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும் உன் அவயங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமா யிருக்கும். (மத்தேயு:6: 28-29)

அன்னியப் பெண்ணைக் கண்டால் பார்வையை தாழ்த்தி விட வேண்டும். இச்சையோடு பார்ப்பது விபச்சாரம் செய்தவனாவான். பார்வை இடரை உண்டாக்கினால் அதனை கழற்றி எறிந்து விடு. நரக தண்டனையை விட இதுவே நல்லது என இயேசு கற்பு நெறி பற்றி பேசுகிறார்கள். இப்போதனைகளை முற்றிலும் துடைத்தெறிந்தவர்கள் யார்? அதற்கெதிராக செயற்பட்டுக் கொண்டிருப்பவர்கள் யார்? மீடியாக்கள் மூலம் ஆண் பெண்ணின் ஒழுக்கத்தை குற்றிச்சுவராக்கி கற்பை நாசப்படுத்து கின்ற அனாச்சாரங்களை அள்ளிக்கொட்டி பணம் சம்பாதிப்பவர்கள் யார்?

## இஸ்லாத்தின பார்வையில்

அல்குர்ஆன் ஆண் பெண் இரு பாலாரினதும் கற்பை பற்றியும் 'ஹிஜாபை'' பற்றியும் இப்படி பேசுகிறது.

'நம்பிக்கையான ஆண்களிடம், அவர்கள் தமது பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறும் தமது கற்புகளைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் (நபியே!) நீர் கூறுவீராக. இதுவே அவர்களுக்கு மிகப் பரிசுத்தமானதாகும். நிச்சயமாக அவர்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கறிந்தவன். (அல்குர்ஆன்: 24:30)

நம்பிக்கையாளர்களான பெண்களிடம், அவர்கள் தமது பார்வைகளைத் தாழ்த்திக்கொள்ளுமாறும் தமது கற்புகளைத் பாதுகாத்துக் கொள்ளுமாறும் அவர்களது அலங்காரத்தில் வெளிப்படுவதைத்தவிர வேறு எதையும் அவர்கள் வெளிப்படுத்தக் கூடாது என்றும் தமது முந்தானைகளை தமது மார்பங்கள் மீது போட்டு கொள்ளுமாறும் (நபியே!) நீர் கூறுவீராக. ( அல்குர்ஆன் 24: 31)

(நபியே!) உமது மனைவியருக்கும் உமது புதல்வியருக்கும் நம்பிக்கை யாளர்களின் பெண்களுக்கும், அவர்கள் தமது முந்தானைகளைத் தங்கள் மீது தொங்கவிடுமாறு கூறுவீராக! அவர்கள் அறியப்படுவதற்கும் நோவினைப் படுத்தப்படாமல் இருப்பதற்கும் இதுவே மிக நெருக்கமானதாகும். மேலும் அல்லாஹ்மிக்க மன்னிப்பவனாகவும் நிகரற்ற அன்புடையவனாகவும் இருக்கிறான். (அல்குர்ஆன்:33: 59)

முஸ்லிம் பெண்கள் தலையை மூடுவது ஆணின் அதிகாரத்தின் அடையாளமாகவோ அல்லது அடிமைச் சின்னத்தின் குறியீடாகவோ அல்ல. ஆண் பெண் இரு பாலாரினதும் உடலமைப்பும் வித்தியாச மானவை. பெண்ணின் உடலமைப்பு தாய்மைக்கும் பெண்மைக்கு முரியதாகவும் ஆணின் உடலமைப்பு உழைப்புக்கும் வீரத்திற்குமுரியதாக படைக்கப்பட்டுள்ளது. ஆண், தொப்புள் முதல் முழங்கால் வரை மறைப்பதும் பெண், முகத்தையும் இரு மணிக்கட்டுகளையும் தவிர உடல் முழுவதும் மறைப்பதுமே ஆடையின் அளவு கோலாகும். பெண் விரும்பினால் முகம் உட்பட உடல் முழுவதையும் மறைத்துக் கொள்ளலாம். பெண்ணின் உடல் கவர்ச்சி மற்றும் அழகு அவளுடைய சட்டபூர்வமான கணவனுக்கு காண்பிக்கப்பட வேண்டுமே தவிர அன்னிய ஆண்களின் கடைக் கண்பார்வைகளுக்கோ ரசனைகளுக்கோ ஆளாக்கி

விடக் கூடாது. உடல் பரிமாணங்கள் தெரியும் விதத்தில் ஆடை அமைந்து விடவும் கூடாது என இஸ்லாம் கூறுகிறது.

பெண்களின் மறைக்கப்பட வேண்டிய உடல் அங்கங்களே இன்று ஏலவிற்பனை பொருட்கள் போன்று காட்சிப்படுத்தப்பட்டு சந்தைப்படுத்தப் படுகின்றன. இடுப்பழகு, கூந்தல் அழகு, மற்றும் மார்ப்பழகு என்று வர்ணிக்கப்பட்டு நுகர்வு பண்டமாக ஆக்கப்பட்டிருக்கின்றன.

இத்தகைய அசிங்கங்களிலிருந்து விடுபட்டு அல்லாஹ்வினதும் அவனது இறுதித் தூதர் நபி முஹம்மத் (ஸல்) அவர்களினதும் கட்டளை களுக்கு முற்றிலும் கட்டுப்பட்டு தலையிலிருந்து பாதம் வரை மூடி மறைத்து முஸ்லிம் பெண்கள் பயணித்தால் இதே யூத, கிறஸ்தவ சமுதாயம் உட்பட ஏனைய சமூகங்களும் ஏளனமாக பார்க்கின்றது தவறாக விமர்சிக்கின்றது. முஸ்லிம் பெண்கள் அணியும் ஹிஜாப் அபாயா ஆடைகளை கலற்றி விடுமாறு அச்சுறுத்தல்கள் விடுக்கின்றது.

மேற்கத்தைய உலகில் உருவான இந்த அச்சுறுத்தல்கள்; இன்று பல நாடுகளுக்கும் பரவியுள்ளன. முஸ்லிம் பெண்கள் இந்த ஆடை முறை களுடன் பாடசாலை பல்கழைகலகம் மற்றும் தொழிலுக்குச் சென்றால் இவ்வாடையை கலைந்து விட்டு வருமாறு கட்டளையிடுகின்ற அளவுக்கு நிலமை மோசமடைந்துள்ளது.

முஸ்லிம் பெண்களின் ஆடைமுறைகளை தவறாக விவரணப்படுத்தி சர்ச்சைகளை உண்டு பண்ணுபவர்கள் அதே ஆடை முறைகளை கிறிஸ்தவ கண்ணியாஸ்திரிகள் அணியும் போது குருடர்களாக இருப்பது ஏன்? கிறிஸ்தவ பெண்கள் அடிமைச் சின்னத்தின் அடையாளமாக தலையை மூடி ஆடை அணிகிறார்கள். முஸ்லிம் பெண்கள் தங்களுடைய கற்பை காத்துக் கொள்ளும் கவசமாக ஆடை அணிகிறார்கள்.

ஆசைகளைத் துறந்து பொது வாழ்வை விட்டும் ஒதுங்கி துறவரத்தை மேற்கொண்டு கண்ணி வாழ்வை பேணும் கண்ணியாஸ்திரிகள் உடல் முழுவதையும்; மூடிக்கொள்வது கட்டாயம் என்றால் குடும்ப வாழ்வில் ஈடுபட்டு பொதுவாழ்வில் பங்கு கொண்டு வாழும் பெணகள் தங்கள் உடல் முழுவதை மூடிக் கொள்வதன் அத்தியவசியம் பற்றி சொல்லவும் வேண்டுமா?

கன்னி மேரியின் சிலையை காண்பிக்கும் போது முகத்தையும் இரு மணிக்கட்டுகளையும் தவிர உடல் முழுவதையும் மறைத்திருப்

பதாகவே காண்பிக்கிறார்கள். இதைப் பார்க்கும் எவரும் பிற்போக்குத் தனமான ஆடை முறையென கூறுவதில்லை. இவ்வாடை முறையை யூத கிறிஸ்த வர்களை விட முஸலிம்கள் அதிகளவில் பின்பற்றுகிறார்கள். இவ்வொழுக் கத்தை யூத கிறிஸ்தவ பெண்கள் கடைப்பிடிக்காது அலங்காரங்களை வெளிப்படுத்தி அரைகுறை ஆடைகளுடன் (பாவாடைகளுடன்) ஆடவர்கள் முன் அலைந்து திரிவது ஏன் என்பது தெரியவில்லை. தங்களுடைய பாரம்பரிய ஆடை கலாசாரத்தை ஒதுக்கி விட்டு போஸ்கொடுக்கும் காட்சிப் பொருட்களாக தங்களை ஆக்கிக் கொண்டு முஸ்லிம்களை குறை கூறுவதும் குறுட்டுத்தனமாக குற்றம் சாட்டுவதும் முறையாகுமா? மானம் மரியாதை பேணி கற்பு நெறிகளை கைக்கொண்டு கௌரவமாக வாழும் பயிற்ச்சியினை இஸ்லாம் ஆண் பெண் இரு சாராருக்கும் கற்றுத் தருகிறது. உண்மையான பெணணுரிமை மற்றும் சுதந்திரத்தை பெற்றுக் கொள்ள இஸ்லாம் ஒன்றே தீர்வாகும்.

இஸ்லாம் பெண்களை முறையாகவே பண்படுத்தி முழுநிலா போல் பிரகாசிக்க வைத்திருக்கிறது. அல்ஹம்துலில்லாஹ்.





IslamHouse.com

IslamHouse-Tamil @IslamHouseTa IslamHouseTa https://islamhouse.com/ta

For more details visit
www.GuideToIslam.com

GUIDE TO ISLAM

contact us :Books@guidetoislam.com

Guidetolslam.org Guidetoislam1 Guidetoislam www.Guidetoislam.com

المكتب التعاوني للدعوة وتوعية الجاليات بالربوة

هاتف: ٩٦٦١١٤٤٥٤٩٠٠+ فاكس: ٩٦٦١١٤٩٧٠١٢٦+ ص ب: ٢٩٤٦٥ الرياض: ١١٤٥٧

ISLAMIC PROPAGATION OFFICE IN RABWAH

P.O.BOX 29465 RIYADH 11457 TEL: +966 11 4454900 FAX: +966 11 4970126

# அல்குர்ஆன் பைபிள்
# பார்வையில் பெண்ணுரிமை

இந்நூல் பெண்ணுரிமை, பெண் சுதந்திரம் பற்றி அல்குர்ஆனுக்கும் பைபிளுக்கும் இடையில் ஓர் ஒப்பீட்டாய்வு செய்கின்றது. இதனை முழுமையாக வாசித்து முடிக்க முன் அல்குர்ஆனிலும் முஸ்லிம்களிடத்திலும் பெண்ணுரிமை, பெண் சுதந்திரம் எவ்வளவு பேணப்படுகின்றது என்பதை ஏற்றுக் கொள்ளாமல் இருக்க முடியாது. உதாரணமாக, விவாகரத்துரிமை, வாரிசுரிமை, கல்வியுரிமை போன்ற கிறிஸ்தவ மதத்தில் பெண்களுக்கு மறுக்கப்பட்டவற்றைக் குறிப்பிடலாம்.

கிறிஸ்தவர்கள் பெண்களுக்குக் கொடுத்துள்ள உரிமைகளை வெறுமனே கேள்விப்பட்டதைக் கூறாமல் அவர்களுடைய பைபிளிலிருந்தே ஆதாரம் காட்டியுள்ளது இந்நூலின் இன்னொரு சிறப்பம்சம்.




IslamHouse.com
Osoul Center
www.osoulcenter.com